ஓம்

பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

மலர் 4. சென்னை, 1936ஹு ஜூன்மீ 1உ இதழ் 5.

உள்ளுறை.

	விஷயம்.	பக்கம்.
1.	வர்த்தகர் படையெடுப்பு	2
2.	காலச் சக்கரம்	4
3.	ராவண தரிசனம்	8
4.	தேர்தல் மோகம்	17
5.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	26
6.	மாயக்காரி அல்லது சுருட்டு மர்மம்	33
7.	'சமையல் உத்யோகம்'	37
8.	மோஹன சந்திரா	40
9.	ஆடல் பாடல்	49

"விகடனி"ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே, தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

வர்த்தகர் படையெடுப்பு.

உலகம் மாறுதலுடையது. மாறுதல் இன்றேல் உலக வாழ்க்கையில் கசப்புத் தோன்றுதல் இயல்பு. மக்கள் மானங்காக்கவும் தெரியாத காட்டுமிராண்டிகளாய்—காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்து வாழ்ந்த காலம் ஒன்று. மாடமாளிகைகளில் பட்டுப்பட்டாடைகள் உடுத்து நாகரிகமாக வாழும் காலம் ஒன்று. பழைய நிலையிலிருந்து புதிய நிலைமைக்கு உலகம் மாறியதை யாரால் தடுக்க முடிந்தது? இனிமேலும் மாறுதல் அடைவதை யாரால் தடுக்க முடியும்? பண்டித ஜவஹர்லால் நேருவை லக்ஷ்மணபுரி காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுத்தது காலச் சக்கர வேகத்தை வெளிப்படுத்தியதாகும் என்று "விகடன்" முன்னரே சுட்டிக்காட்டியிருக்கின்றான். எல்லாரும் எதிர்பார்த்தபடியே அவர் சமதருமக் கொள்கைகளை இந்தியா முழுதும்-உலக முழுதும் கேட்குமாறு செய்தார்—செய்து கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் பண்டிதரின் பம்பாய் விஜயம் நாட்டில் மிகுந்த எழுச்சியையும் உணர்ச்சியையும் கிளப்பி விட்டிருக்கிறது என்றே சொல்லவேண்டும். பம்பாயில் நடைபெற்ற தொழிற்சங்கக் காங்கிரஸ் கூட்டத்திலும், கடற்கரைப் பொதுக் கூட்டத்திலும், பிரஜா உரிமைச்சங்க அமைப்புக் கூட்டத்திலும் பண்டிதர் பேசிய பேச்சுக்கள் ஆணித்தரமானவை ஆகும். வர்த்தகரிடையே பேசிய போதும் நேர்மை கடைப்பிடித்துத் தமது கொள்கையை வற்புறுத்தினார். "இந்தியாவின் விமோசனத்திற்கு—அதன் கஷ்ட நஷ்டங்கள் நீங்குவதற்குச் சமதருமக் கொள்கைதான் ஏற்ற மருந்து. காலக்கிரமத்தில் இயற்கையாகவே சமதருமக் கொள்கைதான் பலராலும் ஒப்புக்கொள்ளப்படும். நானிருந்தாலும் சரி இல்லையானாலும் சரி சமதருமக் கொள்கையே வெற்றிபெறும்" என்று அவர் பேசிய பேச்சு பம்பாய் வர்த்தக கோஷ்டியில் பெரும் பரபரப்பை உண்டாக்கிவிட்டதாகத் தெரிகிறது. வர்த்தக அரசர்கள் என மதிக்கத்தக்க ஸர். என். ஸக்லத்வாலா, ஸர் புருஷோத்தம தாஸ் தாகூர் தாஸ், ஸர் ஸிமன்லால் செதல்வட், ஸர் பிரோஸ்சேத்னு, ஸர் கவாஸ்ஜி ஜிஹாங்கிர், ஸர் எஸ் பில்லிமோரியா, ஸர் எச். மோடி முதலிய இருபத்தொரு பேர் ஒன்று சேர்ந்து பண்டிதரின் சமதருமக் கொள்கையைக் கண்டித்து அறிக்கை வெளியிடத் தொடங்கிவிட்டனர். ஸ்ரீமான்கள் ஷாப்பும், ஸர் ஸிமன்லால் சேதல்வடும் தனித் தனியாகவும் பண்டிதரைக் கண்டிக்க முன் வந்தனர். இவர்கள் எல்லாருக்கும் அவர் ஆணித்தரமான பதில் அளித்துவிட்டார் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. "சம தருமக் கொள்கை நமக்குப் புதிது; ருஷ்யாவின் முறை நம் நாட்டு நிலைமைக்குப் பொருந்தாது; முன் பின் யோசிக்காத பாமர ஜனங்களின் மனங்களில் இவ்வித எண்ணத்தைப் புகுத்துவதால் ஸ்தாபனங்கள் மட்டுமின்றித் தனிப்பட்டவர்களின் சொத்துரிமையும் பாதிக்கப்படும். மதத்திற்குப் பங்கம் ஏற்படும். சம தருமக் கொள்கை அழிவுத்தன்மை வாய்ந்தது; எனவே நாங்கள் இதை ஆதரிக்க மாட்டோம்" என்கின்றனர் வர்த்தகப் பிரமுகர்கள். ஒரு கொள்கை புதாகத் தோன்றினுல் அது புதியது என்ற காரணத்தால் வெறுப்புக் காட்டுவது அறிவுடைமை ஆகாது. வர்த்தகப் பிரமுகர்ள் தங்கள் வாழ்க்கையில்—தினசரி நடவடிக்கைகளில் முன்னோர் கண்ட முறைகளையே அநுஷ்டிக்கிறார்களா? உண்பது, உடுப்பது, வசிப்பது, போக்குவரவுப் பிரயாணம் செய்வது, மூச்சு விடுவது எல்லாம் நவீன மயமாகி விட்டன

வே. இவைகளில் மட்டும் புதுமையை அநுசரிக்கலாம்—மற்றவைகளில் கூடாது என்று எந்தச் சாஸ்திரம் விதிக்கிறதோ தெரியவில்லை. ருஷ்ஷியாவின் முறையை மாறுதலின்றி அப்படியே பின் பற்ற வேண்டும் யாரும் கூறவில்லை. சமதருமக் கொள்கையை நமது நாட்டு இயற்கைக்கு ஏற்ற முறையில் மாற்றிக் கொள்ள வேண்டும். எப்படியோ எல்லாரும் உண்டியும் உடையும் பெற்று இன்ப வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதே பண்டிதரின் சித்தாந்தம். சமதருமக் கொள்கையால் சமயத்துக்குக் கெடுதி நேரும் என்று வர்த்தகர்கள் அஞ்சுவது அறியாமையே. சமயங்கள் என்றால் என்ன என்று இவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை. எல்லாரும் இன்புற்று இருக்க வேண்டும்; எல்லாவுயிர்களும் நன்றே; மக்கள் பரஸ்பரம் அன்பும் அருளும் உடையவர்களாய் வாழ வேண்டும் என்பதே சர்வசமய சித்தாந்தம். பண்டிதர் போதிக்கும் சமதருமக் கொள்கை இவற்றுள் எதற்கு முரண்படுகிறது என்று விகடன் வினவுகின்றான். எல்லாரும் இன்புற்று இருக்க வேண்டும் என்பது தானே சமதருமக் கொள்கை. பாமர ஜனங்களுக்கு இக் கொள்கையைக் கூறக் கூடாது என்கின்றனர். ஏழை மக்களான பாமரருக்குத்தானே இப்பொழுது விமோசனம் வேண்டும் என்று எல்லாரும் கூறுகின்றனர்?

ஸர் ஸிமன்லால் சேதல்வட் விடுத்துள்ள தனி அறிக்கையானது மிகுந்த பீதியை வெளிப்படுத்துவதாயிருக்கின்றது. ஸர் ஸிமன்லால் பண்டிதரைக் காட்டிக் கொடுக்கும் முறையில் தாக்கியிருக்கிறார். "பண்டித ஜவஹர்லால் போதிப்பது சமதருமம் அன்று; ருஷ்ஷியாவின் பொதுவுடைமையே" என்கிறார் ஸர் ஸிமன்லால். இதன் உட்பொருள் என்ன? "பண்டிதரை ஏன் இன்னும் வெளியில் வைத்திருக்கின்றனர் அரசாங்கத்தார்? பொதுவுடைமைப் பிரசாரம் கூடாது என்று சட்டம் செய்துள்ள அரசாங்கத்தார் அவரைப் பிடித்துச் சிறையில் போட வேண்டும்" என்பதே ஸர் ஸிமன்லாலின் உட்கோள். சமதருமம் தமக்கு உடன்பாடுதானாம். "எல்லோருக்கும் குறைந்த பக்ஷமான தாயும், நியாயமான தாயுமுள்ள வாழ்க்கைத்தரத்தை ஏற்படுத்துவதற்காகச் சில தொழில்களில் வரும் லாபத்தை தொழிலாளிகளும் பகிர்ந்து கொள்ளும்" சமதருமத்தை அவர் ஒப்புக்கொள்ளுகிறாராம். நல்லவேளை. "எல்லாரும் பணக்காரருக்கு ஏவல் செய்யப் பிறந்தவர்கள்; பணக்காரர்களே அநுபவிக்கப் பிறந்தவர்கள். தொழிலாளர் முதலாளிகள் கொடுக்கும் கூலியைத்தான் பெற்றுக்கொள்ள வேண்டும். 24-மணியும் வேலை செய்யவேண்டும்" என்று கூறாமல் "சில தொழில்களில் வரும் லாபத்தை முதலாளிகளும் தொழிலாளிகளும் நியாயமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும்" என்று ஸிமன்லால் கூறுகிறாரே அதைக் கண்டு எல்லாரும் அவரைப் பாராட்ட வேண்டியதே.

"நாட்டு விடுதலைக்குப் போராடுகின்றவர்களை ஆதரிக்கும் கக்ஷி, நாட்டு விடுதலைக்கு விரோதமாக இருப்பவர்களை ஆதரிக்கும் கக்ஷி" என்ற இரண்டு கக்ஷிகளே நாட்டில் உண்டு என்று பண்டிதர் கூறுவது ஸர் ஸிமன்லாலுக்குப் பிடிக்கவில்லை. இவ்வாறு கூறுவது தங்களை அவமதிப்பதாகவும், தங்கள் அந்தரங்க சுத்தியில் ஐயம் கற்பிப்பதாகவும் ஆகும் என்று அவர் கருதுகின்றார். உண்மையில் நாட்டில் இருப்பது இரண்டு கக்ஷிகளைத் தவிர வேறு மூன்றாவது கக்ஷி எங்கிருக்கிறது என்று விளங்கவில்லையே!

நாட்டில் வறுமை மிகுந்திருப்பதையும் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதையும் ஸர் ஸிமன்லால் மனமார ஒப்புக்கொள்ளுகின்றார். இதற்குப் பரிகாரம் தேடவில்லை என்று அரசாங்கத்தாரையும் கண்டிக்கின்றார் புதிய சீர்திருத்த அரசியலையும் வெறுக்கின்றார்.

"சர்க்கார் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்குவதற்காக உடனே போதிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். புதிய அர

காலச் சக்கரம்

சுவர்க்கமா? நரகமா ?

"உங்களுக்குச் சுவர்க்க நரக மோக்ஷங்களில் நம்பிக்கை யுண்டா? அந்த உலகங்கள் இருக்கின்றனவா? இல்லையா?" என்ற பிரச்னையில் இறங்கி முடிவு கட்ட இப்போது "விகடன்" வரவில்லை; ஆனால் வேதாகம புராண இதிகாசங்கள் நரகலோகம் மண்ணுலகத்துக்குக் கீழும், சுவர்க்க லோகம் பூமிக்கு மேலும், அதற்கு மேல் மோக்ஷ லோகமும் இருப்பதாக வருணிக்கின்றனவே! அவைகளின் கூற்று தவறானதென்று தெரிவிக்கவே 'விகடன்' முற்பட்டான். சுவர்க்கம், நரகம், மோக்ஷம் எல்லாம், மனிதர்களாகிய நாம் வசிக்கும் இந் நிலவுலகத்திலேயே இருக்கின்றன என்ற திடமான முடிவுக்கு அவன் இப்போது வந்திருக்கிறான். இது விகடனுடைய சொந்த அபிப்பிராய மென்று வாசகர்களே! கருதி விடாதீர்கள். மகாநுபாவர்களாகிய திவான் பகதூர் நாராயணசாமி செட்டியார், ஸர். ஹாரி ஹெய்க், ஸர். ஹென்றி க்ரெய்க் போன்றவர்கள் சுவர்க்கம் இவ் விடத்திலேயே இருக்கிறதென்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். அவர்களது திருவாய் மொழிகள் தான் விகடனுக்கு ஆதாரம். அந்த சுவர்க்கம் எங்கே யிருக்கிறது? என்று அறிய வாசகர்களில் பலர் ஆவலுடையவர்களா யிருப்பார்கள். அத்தகையோருக்கு மேற் குறிப்பிட்ட சிரேஷ்ட புருஷர்கள் "இதோ இருக்கிறது சுவர்க்கம்; அந்தமான் தீவுதான் சுவர்க்கம்" என்று குதூகலமாகக் கூறுகிறார்கள். 'துஷ்ட மிருகங்களும், விஷப் பாம்புகளும் காட்டுமிராண்டி ஜனங்களும் வாழும் அந்தமான் தீவா—கொலை முதலிய கொடிய குற்றங்கள் செய்து தீவாந்திர சிக்ஷை பெற்ற கைதிகள் வசிக்கும் அந்தமான் தீவா சுவர்க்கலோகம்?' என்று வாயைப் பிளக்கிறீர்கள். "விகடன்" சொல்வதை நம்பா விட்டால், கோபதி செட்டியாரையும், இந்திய சர்க்கார் ஹோம் மெம்பரையும் போய்க் கேளுங்கள்.

* * *

சியலிலுள்ள கேவலமான அம்சங்களை மாற்றிவிடவேண்டும்" என்கிறார் ஸர் ஸிமன்லால். காங்கிரஸூம் பண்டிதரும் விரும்புவது என்ன? அதைத்தானே இவரும் கூறுகின்றார். நாட்டில் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்குவதற்கு ஸர் ஸிமன்லால் என்ன திட்டம் போட்டுக் காட்டுகிறார் என்பது "விகடன்" கேள்வி.

மக்களின் ஜீவாதாரமான உரிமைகளைப் பாதுகாக்கப் பண்டித ஜவஹர்லால் பிரஜா உரிமைச் சங்கம் அமைக்க முயல்வதையும் ஸர் ஸிமன்லால் விரும்பவில்லை. அடக்கு முறைகட்குக் காரணம் வங்காள பயங்கர இயக்கமும் சட்டமறுப்பு இயக்கமுமே என்ற பல்லவியை ஸர் ஸிமன்லாலும் பாடுகிறார். இந்த இயக்கங்கட்கு முன் இந்தியா இவர்கள் விரும்பும் குடியேற்ற நாட்டந்தஸ்து உரிமைகளை அடைந்திருந்தது என்று இவர் கருதுகிறாரா? "தங்களுடன் மனம் ஒத்துப்போகாத மற்றவர்களின் பிரஜா உரிமைகளை பண்டித நேருவும் அவரது நண்பர்களும் குறைக்காம லிருப்பார்கள் என்பதற்கு என்ன உறுதி?" என்று கேட்கிறார் ஸர் ஸிமன்லால். ஆஹா! எவ்வளவு அழகான கேள்வி! பண்டிதர் கக்ஷியார் மிதவாத சிகாமணிகளின் சொத்துச் சுகங்களை யெல்லாம் பறிக்க வந்து விட்டதாக வே இவர் கருதுவது கலிகாலக் கொடுமை என்பதைத் தவிர வேறு என்ன கூறுவது?

எது உண்மை?

அந்தமான் தீவில் முன்னெல்லாம் கொலைக் குற்றஞ் செய்த கைதிகளையே

அனுப்பி வந்தனர்; பின்னர், ராஜீயக் கைதிகளையும், பயங்கர இயக்கத்தில் சம்பந்தப்பட்ட கைதிகளையும் அங்கு அனுப்புவது வழக்கமாகி விட்டது. எனவே, கைதிகளுக்குப் போதிய வசதி கிடைப்பதில்லை என்று கிளர்ச்சி செய்யப்பட்டது. சில கைதிகள் உண்ணா விரதம் கூட இருந்தார்கள். இதை யொட்டி இந்திய சட்டசபையில் கேள்விகள் கேட்கப்பட்டன. சட்டசபை யங்கத்தினர் ஸ்ரீமான் சாக்சேனா, அந்தமானுக்குப் போய் கைதிகளின் நிலையைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறினார். ஆனால் அவருக்குச் சர்க்கார் அநுமதி யளிக்க வில்லை. அதே சமயம் கோபதி நாராயணசாமி செட்டியார் கோஷ்டியார் போய் வந்தனர். ஸ்ரீ செட்டியார் அந்தரத்திலிருந்த சுவர்க்கம் தான் அந்தமான் தீவாக வந்திறங்கி யிருக்கிறது என வருணித்தார். இப்போது சமீபத்தில் சென்று விட்டுவந்த ஸர். ஹென்றி கிரெய்க், அந்தமான் தீவை வருணிக்கும் விஷயத்தில் ஸ்ரீ செட்டியாரையும் ஒருபடி மீறிவிட்டார். இவ்வளவு அழகாகவும், சாதுரியமாகவும் "அந்தமான் மகாத்மியத்"தைப் பாட இவ்விருவரைத் தவிர, வேறெந்த மகாகவியாலும் முடியாதென்பது விகடன் கருத்து. ஆனால், உண்மையில் அந்தமான் தீவு சுவர்க்க பூமி தானா என்றால், இல்லையென்றே அதன் நிலைமையை யறிந்த பலரும் கூறுகின்றனர். சில வருஷங்களுக்கு முன் அந்தமான் தீவையும் அதில் வாழும் கைதிகள் நிலைமையையும் கவனித்துவிட்டு வந்த கார்டியூ கமிஷன் கோஷ்டியார், "நரகமென்று ஒரு உலகம் இருக்குமானால், அது அந்தமான் தீவுதான். மனிதர்கள் வசிப்பதற்கு அது மிகவுந் தகுதியற்றது" என்று தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். அத்துடன் அவர்கள், "அங்கு கைதிகளை அனுப்பக்கூடாது" என்று வற்புறுத்தினர். அவர்களது சிபார்ஸை, இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு, சில காலம் கைதிகளை அவ்விடத்துக்கு அனுப்பாதிருந்தனர். ஆனால் அந்நிலைமை நீடித்து நிற்கவில்லை. திவான்பகதூர் நாராயணசாமி செட்டியார், ஸர். ஹென்றி கிரெய்க் போன்ற மகான்கள் இத்தீவு சுவர்க்க பூமி எனக் கூறிய பிறகு கூடவா இந்திய சர்க்கார் சந்தேகப்படுவர்!

* * *

எதியோபியாவில் இத்தாலி நிலை

எதியோபியாவை விஷப் புகையாலும், வெடிகுண்டுகளாலும் சூறையாடி வெற்றி பெற்றுவிட்டதாகப் பெருமை பேசிக் கொள்ளுகிறார் சிக்னர் முஸோலினி. உடனே, இத்தாலி யரசருக்கு எதியோபிய சக்கிரவர்த்தி யெனப் பட்டம் வழங்கப்பட்டு விட்டது. எதியோபியாமீது படையெடுத்துச் சென்று சேனையை நடத்திய இத்தாலி இராணுவ ஸேனாதிபதி மார்ஷல் படாக்ளியோவுக்கு எதியோபியாவின் முதல் இத்தாலி இராஜப் பிரதிநிதி பதவி யளிக்கப்பட்டாய் விட்டது. இவ்வளவு காரியங்களையும் இச் சர்வாதிகாரி முசோலினி தடபுடலாகவும், அவசர அவசரமாகவுஞ் செய்தாலும்; இன்னும், எதியோபியா இத்தாலியின் ஆதிக்கத்துக் குட்பட்டுவிட்டதாக யாருங் கருதவேயில்லை! எதியோபியாவிலுள்ள சிற்றரசர்கள் (கவர்னர்கள் அல்லது ராஸ்கள்) இன்னும் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்காக இத்தாலியரை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றனர். அந்த ராஸ்களில் மிகவும் பிரபலரான ராஸ் இம்ரு என்பவர் இத்தாலியரை வெகு கடுமையாக எதிர்த்து போராடுவதாகச் சமீபத்தில் கிடைத்த செய்தி கூறுகின்றது. இதுவன்றி, சர்வதேச சங்கமும் இத்தாலி மீதுள்ள நிர்ப்பந்த முறைகளை இன்னுந் தொடர்ந்து கையாண்டு வரவேண்டும் எனத் தீர்மானித்திருக்கிறது.

* * *

கொடுங் கோலாட்சி

இவ்வித நிலைமையில் எதியோபியாவில் முஸோலினி முரட்டுத் தர்பார் தாண்டவமாட ஆரம்பித்துவிட்டது. எதியோபியக்கொள்ளைக்காரர் ஆர்ப்பாட்டம் ஒரு பக்கம். மற்றொரு பக்கம் இத்தாலி இரா

ணுவ வீரர்கள் அட்டகாசம். இவைகளினிடையே எதியோபிய மக்கள் மிகவும் கஷ்டப் படுகின்றனர். அவர்களுடைய நிலைமையை அறிந்துகொள்ள உலகமக்கள் எவ்வளவு ஆவலாக இருப்பார்களென்பதை விரிக்க வேண்டியதில்லை. ஆனால், இத்தாலி அதிகாரிகள், அந்நியநாட்டுப் பத்திரிகா நிருபர்களை உடனே வெளியேறும்படி உத்தரவிட்டுத் துரத்திவிட்டனர். அத்துடன் மட்டும் அவர்கள் நிற்கவில்லை. எதியோபியாவில் பல்லாண்டுகளுக்கு முன் குடியேறி வாழ்ந்துவந்த வெளிநாட்டினர் 300 பேர்களை ஒரு நொடியில் நாட்டைவிட்டு வெளியேற்றி விட்டனர். நாய்கடிக்குச் சிகிச்சை செய்துகொள்ளும் பொருட்டு விரைந்து ஏடனுக்குச் சென்றுகொண்டிருந்த செஞ்சிலுவை சங்க அதிகாரி ஒருவரைப் பிடித்து கைதுசெய்துவிட்டார். இவ்வித செயல்களிலிருந்து, இத்தாலிய சர்க்கார், எதியோபியமக்களைப் பூரணமாகத் தங்களுக்கு அடங்கி நடக்கும்படி செய்ய அநுஷ்டிக்கும் அதிக்கிரமச் செயல்களைப் பிறநாட்டார் தெரிந்துகொள்ளக் கூடாதென்று நினைத்து அவற்றிற்கு அணைகோலவே இவ்வாறு கொடுங்கோலாட்சி நடத்துகிறார்களென்று ஒருவாறு ஊகிக்க இடமுண்டாகிறது. முசோலினியின் கொடுங்கோலாட்சி எவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும்? இந்தப் பக்கம் எதியோபியாவில் இராணுவ ஆட்சியை நடத்திக்கொண்டு முசோலினி மற்றொரு பக்கம், பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்கும் தாணா ஏரி சம்பந்தமாக ஆசை வார்த்தை காட்டி அவர்களைத் தம்முடன் சமாச ஒப்பந்தஞ் செய்து கொள்ளக் கூப்பிடுகிறார். தாம், நைல்நதியின் உற்பத்தி ஸ்தானத்தில் பிரிட்டனுக்கு இருந்து வரும் உரிமையில் தலையிடுவதில்லையென்றும், ஜிபௌதி — அடிஸ்ரயில் பாதையில் பிரான்ஸுக்கு இருந்து வரும் சுதந்திரத்தைப் பறிக்க முயல்வதில்லையென்றும், எதியோபியாவில் கருப்புச் சாதியினர் படையைத் திரட்டுவதில்லையென்றும், லிபியா என்னுமிடத்தில் வைத்திருக்கும் வெள்ளைத் துருப்புகளைத் திரும்ப அழைத்துக்கொண்டு விடுவதாகவும் முசோலினி அறிவித்திருக்கிறார். முசோலினி விரித்திருக்கும் ஆசை வலையில் பிரிட்டனும் பிரான்ஸும் விழுந்து சிக்கிக்கொள்ளுமா? அல்லது, சர்வதேச சங்கத்தோடு இவ்விரு நாடுகளும், மற்றும் உள்ள நாடுகளும் உண்மையாக ஒத்துழைத்து எதியோபியா விஷயத்தில் அநியாயமாகச் சென்றுகொண்டிருக்கும் இத்தாலியைத் தடுத்து நியாயத்தை வழங்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

* * *

இரகசியம் பகிரங்கமான கதை

பிரிட்டிஷ் வரவு செலவு திட்டத்தின் இரகசியம் பார்லிமெண்டில் அங்கீகாரத்துக்கு வருவதற்குமுன் எவ்வாறோ வெளியாய்விட்டது. அது சம்பந்தமாக லண்டனில் சில நாட்களாக நடந்துவரும் தடபுடலுக்கு அளவேயில்லை. வரவு செலவு திட்டத்தின் இரகசியம் எவ்வாறு வெளியாயிற்றென விசாரணைசெய்ய ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. அது தீவிரமாக விசாரணை செய்து இப்போது ஒருவித முடிவுக்கு வந்திருக்கிறது. அக் கமிஷன் கண்டுபிடித்த உண்மை அல்லது முடிவு இன்னதென இன்னும் வெளியாகவில்லை. இருந்தாலும், கமிஷன் விசாரணையில் இதுவரை வெளியாயிருக்கும் சில விஷயங்களைக் கவனித்ததில், குடியேற்ற நாட்டு மந்திரி ஸ்ரீ ஜே. எச். தாமஸுக்கு நெருக்கடியேற்படும்போல் தோன்றியது. மேலும் அவர் அப்பதவியை வகித்து வருவது பிரிட்டிஷ் மந்திரி சபைக்கே கெட்ட பெயரை உண்டாக்கிவிடும்; பொது மக்கள் அச்சபையினது தவறான போக்கைப் பற்றித் தூற்ற ஆரம்பித்து விடுவார்கள் என்ற நிலைக்குக் கொண்டுவந்து விட்டது.

* * *

ஸ்ரீ. ஜே. எச். தாமஸ் ராஜிநாமா

எனவே, இந்நிலைமையில், ஸ்ரீ. ஜே. எச். தாமஸ் தமது குடியேற்ற நாட்டு மந்திரி பதவியை மரியாதையாக ராஜிநாமா செய்துவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. மிகவும் ஆபாசமான நிலைமை யேற்பட்ட

பிறகு, ராஜிநாமா செய்வதைவிட, முன்னதாகவே, செய்துவிடுவது கௌரவமாகுமெனக் கருதி ஸ்ரீ. தாமஸ் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். இவைபோன்றே, சில மாதங்களுக்குமுன், இத்தாலி–அபிசீனியா சம்பந்தமான பிரச்சினையில் பாரபட்சமாக நடந்து கொண்டதனால் ஐரோப்பாவில் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக, ஸர். ஸாமுவேல் ஹோர் தமது வெளிநாட்டு மந்திரி பதவியை ராஜிநாமா செய்ய நேர்ந்ததை "விகடன்" நேயர்கள் இதற்குள் மறந்திருக்கமாட்டார்கள். ஸ்ரீ தாமஸ் அவரது நண்பர்கள் சற்று பொறுத்திருந்து பார்க்கலாம் என்று சொல்லித் தடுத்தும், அவர் தமது பதவியை நேரிய முறையில் ராஜிநாமா செய்துவிட்டது பாராட்டத் தக்கதேயாகும். அவரது ராஜிநாமாவை ஏற்றுக்கொண்ட பிரதம மந்திரி ஸ்ரீ பால்டுவின், "உம்முடைய ஸ்தானத்தில் நான் இருந்தால், என்ன விதமாக நடந்திருப்பேனோ, அதேவிதமாக நீர் நடந்து கொண்டீர்" என்று ஸ்ரீ தாமஸுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார். ஸ்ரீ தாமஸ் மிகவும் சாமானியமான நிலையிலிருந்து தன்முயற்சியால் உயர் பதவிக்கு வந்தவர். அவர் தொழிற்கட்சித் தலைவராக இருந்து பல முன்னேற்ற காரியங்களைச் சாதித்திருக்கிறார். ஆனால், 1931-ம் வருஷத்தில் நடந்த நெருக்கடியில், அவர் தொழிற் கட்சிக்குத் துரோகஞ் செய்துவிட்டு, தேசிய சர்க்காரோடு சேர்ந்து கொண்டார். அதன் பயனை இப்போது அவர் அநுபவிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. காபினெட் மெம்பராக இருக்கும் அவர் நம்பிக்கைத் துரோகஞ் செய்துவிட்டதாக அவர்மீது குற்றஞ் சாட்டப்படும் நிலைக்கு வந்துவிட்டார். பொது வாழ்வில் ஈடுபட்டவர்களோ, பொறுப்புள்ள பதவி அல்லது ஸ்தானங்களை வகிப்பவர்களோ குற்றங் கண்ட விடத்து தக்க நடவடிக்கை யெடுத்துக் கொள்வதும், பிராயசித்தஞ் செய்து கொள்வதும், அவர்கள் தவறு செய்ததாக அல்லது தவறான வழியில் செல்வதாகப் பொது மக்கள் கருதினால், உடனே அவர்கள் அம்மக்களுக்குத் தங்கள் நிலைமையை விளக்கிக் கூறுவதும், அதிலும் அத்தப்பபிப்பிராயம் நீக்கப்படாவிட்டால் அல்லது அம்மக்கள் நம்பாவிட்டால், உடனே தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்து விடுவதுந்தான் முறையாகும். அம்முறையைப் பின்பற்றியே ஸ்ரீ தாமஸ் ராஜிநாமா செய்துவிட்டார். உயர் பதவியை யடைவதற்காக, மேனாட்டு அரசியல் தலைவர்கள் எத்தனையோவிதமான முறைகளைக் கையாளுவார்கள்; ஆயினும், நம் சென்னையில் உள்ள சில கட்சிப் பிரமுகர்களைப்போல், கிடைத்த பதவியை என்ன நெருக்கடி நேரிட்டாலும், ஆபாசமான நிலைமை ஏற்பட்டாலும் உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டும் கல்தா கொடுத்து தள்ளப்படும் வரை அந்த ஸ்தானங்களை விட்டு நகராமலும் விடாப்பிடியாக இருப்பதில்லை. ஸ்ரீ தாமஸின் ராஜிநாமாவுக்குப் பின், பிரிட்டிஷ் மந்திரி சபையில் இன்னும் என்னென்ன மாறுதல்கள் ஏற்படுமோ!

ராவண தரிசனம்

—:(0):—

நாளைக்கே கதையை அனுப்பி விடவேண்டும் என்பது "சித்ரகுப்த" ஆசிரியர் கட்டளை. அதனால்—எனக்கு வழக்கம் இல்லையானாலும்—எங்கள் சுந்தரியும் ராஜுவும் போன பிறகு—காகிதங்களை முன்னே வைத்த வாக்கில் கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கிறேன். பெட்ரோமாக்ஸ் விளக்கு அடிக்கடி குப் குப் என்கிறது—கோமுட்டி செட்டியார் மண்ணெண்ணெயில் தண்ணீர் கலக்கியதால். என்ன எழுதுவது என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன். எப்படியும் ஒரு அழுத்தமான விஷயம் எழுதவேண்டும் என்பதே எனது ஆசை. கடைசியில் சீதைக்கு ராவணன்மீது அன்பு உண்டு என்ற சங்கதியை வெளிப்படுத்தினால் ஒரு சிலருக்கு வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிடும் மகிழ்ச்சியாவது உண்டாகும் என்று ஒரு சம்பாஷணை தயார் செய்ய முயன்றேன்.

"சலம்"

தனியிடம்

இலங்கையில் அசோகவனம். முழுமதி பொழியும் நிலவு. மரம் செடி கொடி நிழல்கள் அலங்காரமாய்க் காற்றில் அசைந்து கொண்டிருக்கின்றன. உலகத்தில் உள்ள நறுமண மலர்கள் எல்லாம் அங்கே சுற்று முற்றும் பூத்திருக்கின்றன. தூரத்தில் ராவணனுடைய அரண்மனைத் தங்கக் கோபுரங்கள் நிலவொளியில் தகதகவென்று மின்னிக் கொண்டிருக்கின்றன.

ஒரு பெரிய மரத்தின் கீழ் சீதை உட்கார்ந்திருக்கிறாள். மெதுவாய் "ராவணா... ......"

விளக்கிலிருந்து பெரிய ஜுவாலை குப்பென்று முகடு முட்ட எழுந்தது. அறை முழுவதிலும் புகை சூழ்ந்தது. கண் தெரியவில்லை. இரண்டு நிமிஷங்களில் புகையெல்லாம் ஒன்ருகத் திரண்டு ஒரு வடிவமாக மாறியது-என் கண்ணெதிரில்'

"என் பெயரை ஏன் எழுதினுய்?'. என்றது அந்த வடிவம்—கோபத்தோடு. அது ராவணவடிவம் என்று அறிந்தேன். அவனது பார்வையின் வேகத்தை தாங்காமல் என் கண்கள் காகிதங்களை நோக்கின.

"கதை............."

"கதையா? என்ன செய்யப் போகிருய் எழுதி?"

"சித்ரகுப்த"வுக்கு அனுப்புவேன்.

"முதலில் உன்னைச் சித்ரகுப்தனிடம் அனுப்புகிறேன் நான். என் ஜோலி உனக்கு எதற்காக? என்ன எழுதலாம் என்று நினைத்தாய்? உண்மையை ஒளிக்காமல் சொல்..........."

தண்டாயுதத்தை எடுத்தான். மற்ற வாக்கியம் என் மனதில் முற்றுப் பெற்றது.

"சொல்லுகிறேன்"

சொன்னல் என்ன செய்து விடுவானே என்ற பயம் ஒரு பக்கம்—பொய் சொன்னல்........? ஒருவேளை மனதில் இருப்பவைகளையும் கூடத் தெரிந்து கொள்ளுவானே என்ற நடுக்கம் ஒரு பக்கம். சரி, இதெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. சங்கதியைச் சொன்னல் சந்தோஷப்படுவான். அப்புறம் நமக்கு என்னவேண்டும்?

"சீதைக்கு உங்கள் மீது அன்பு இருக்கிறது என்று எழுதப் போகிறேன்"

மார்பில் டால் வீசிக்கொண்டிருக்கிற நவரத்னங்களில் ஒன்றைப் பிடுங்கி என் மீது வீசி எறிவான் என்று எண்ணினேன். ஆனல் என் ஜாதகம் வேறுமாதிரியானது. சென்ற பதினைந்து வருஷங்களாக நான் தூவியமலர்கள் எல்லாம் முட்களாக மாறி மக்களைத் தைத்தன. Tact என்கிற குணம் இல்லாமல் போகும் நக்ஷத்திரத்தில் பிறந்துவிட்டேன் என்று நினைக்கிறேன்.

"என்ன சொன்னுய்? சீதைக்கு.... ....என்மீது அன்பா? உனக்கேன் இந்தக் கெடுபுத்தி?........இந்தச் சங்கதியை நான் பிரமலோகத்தில் கேள்விப்பட்டேன்; கொஞ்சங்கூடப் பயபக்தி இல்லாமல் புராண பாத்திரங்களைக் குறித்து—முக்கியமாக என்னைக் குறித்து இந்த மாதிரியான தகாத வார்த்தைகளைச் சொல்லுகிருய் என்று கேள்விப்பட்டேன். சீதை என் மடிமீது உட்கார்ந்தாள் என்று எப்பொழுதோ எழுதினுயாமே!"

"எழுதியதாக நினைவில்லை. ஆனல் படித்ததாக ஞாபகம். அதைப்பற்றித் திட்டமாய் யோசிக்க இப்போது சாவகாசம் இல்லை"

தண்டாயும் கிளம்பிற்று.

"நான் இல்லை."

"யார்?"

"இன்னொருவர்."

"எங்கே இருக்கிருர்?"

"அலைந்து கொண்டிருக்கிருர்."

"அப்படியா? எவனே சீதை என் காஷ்டத்தில் குதித்தாள் என்று எழுதினுனமே."

"எனக்குத் தெரியாது."

"தெரியும். சொல்லுவாயா? மாட்டாயா?"

என் தலை நடுங்கியது.

"எவன் அந்தத் துஷ்டன்? முட்டாள்?"

"அவன் பெயர் என்ன?"

"தெரியாது."

"தெரியாதா? எனக்குத் தெரியும். இருந்தாலும் நீ சொல்."

படித்துப் பார்த்து விட்டானே என்னமோ? ஐயோ தெய்வமே! சரியானபடி பொய் சொல்லவும் கையாலாக வில்லையே.

"எவனோ சலம்......"

'சரி சரி—அவன் எங்கே இருக்கிறான்?"

"இறந்து விட்டான்."

"அந்தக் காகிதத்தில் சலம்........... என்று எழுதியிருக்கிறாயே-அதுஎன்ன?',

செத்தேன் நான்! கோர்ட்டு விவகாரங்களில் ஈடுபட நேர்ந்தால் என் கதி என்னவது?

தண்டாயுதம் எடுத்தான்.

"நான்தான்! நான்தான்!!"

"இந்தத்தடவை நீ பொய்யும் புளுகும் எழுதினால் உன் தலை இரவலாகிவிடும், ஜாக்கிரதை! ஏன் இந்தமாதிரி புரட்டு வேலைகளில் தலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய்?"

"நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள் என்று எண்ணினேன்."

"நானா?—மகிழ்ச்சி அடைவேனா? இதோ பார்."

காலைத் தூக்கினான்.

"உண்மையைச் சொல்லிவிடுகிறேன்—நீங்களே இல்லை என்று தீர்மானித்து விட்டேன்."

"நான் இல்லாவிட்டால் ராமாயணம் எப்படியடா வந்திருக்கும்?"

"வால்மீகி மண்டையிலிருந்து."

"உனக்குப் பாட்டனார் இருந்தாரா?"

"ஆமாம்."

"உன் பாட்டன் யார் மண்டையிலிருந்து பிறந்தான். உன் பாட்டன் இல்லாமல் நீ எப்படி இருக்கிறாய்? நான் இல்லாமல் ராக்ஷஸர்கள் எப்படி இருக்கிறார்கள்?"

இந்த நள்ளிரவில் இந்தப் பிரச்சினைகளில் மாட்டிக்கொள்ள வேணுமா?

"டபேதார்கள், வக்கீல்கள், அவர்களுடைய குமாஸ்தாக்கள், டிக்கட் கலெக்டர்கள், பிள்ளைகளை அடித்து மிரட்டும் வாத்தியார்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் முதலியவர்கள் எல்லாரும் யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?"

ஆரம்பத்தில் ஒரு தலையுடன் காணப்பட்ட வடிவம் சரேலெனப் பத்துத்தலைகளுடன் கம்பீரமாய் நிற்கிறது. எனக்கோ நடுக்கம். என்ன செய்வது? அந்தப் பத்துத்தலைகளிலும் ஏதேனும் சாக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் இருபது கைகளிலும் இருபது ஆயுதங்கள் இருக்கின்றன. என்னால் எப்படி விவாதிக்க முடியும்? அவ்வளவு துணிச்சல் ஏது? சரி என ஒப்புக்கொள்ளுவதில் எனக்கு ஒன்றும் கஷ்டம் தோன்றவில்லை. உண்மையில் அவர்கள் எல்லாரும் ராக்ஷஸர்களே!

'தம்பி! முதலில் அந்தக் காகிதத்தைக் கிழித்தெறி."

கிழித்து விட்டேன். மறுபடியும் எழுதிக்கொள்ளலாம். இது வரைக்கும் எத்தனையோ காகிதங்கள் கிழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் எல்லாம் காதல்—அன்பு காரணமாகக் கிழிக்கப்பட்டன. பயங்காட்டியதால் கிழித்தது இதுவே முதல் தடவையாகும்—அதிலும் ஒரு ஆடவன் கட்டளைப்படி.

"இனிமேல் இந்தமாதிரியான தப்புச் செய்வதில்லை என்று சத்தியம் செய்து கொடு."

இது ஒரு விநோதம். இப்படிச் சத்தியம் செய்து கொடுக்கும்படி அநேகர் முயன்றிருக்கிறார்கள். ஆனால் யாரும் கதாயுதங்களைக் காட்டவில்லை.

எப்படி எதிர்ப்பது? மறுநாள் காலையில் அங்க அடையாளம் தெரியாத மாம்ச பிண்டம் ஆகிவிடுவேன். சுடுகாட்டில் வைத்து எரித்து விடுவார்கள். அநேகமாய் இது "சலம்" ஆகத்தான் இருக்கவேண்டும் என்றும், உயிர் போகும் நிலைமை ஏற்பட்டும் தன் கொள்கையை விடவில்லை என்றும் ஊராருக்கு ஒரு உறுதி ஏற்படாது. நான் போய் விட்டால் ஆந்திர நாட்டு நீதி சிரேஷ்டர்கட்கும், நவீன சாரங்கதார்கட்கும், கலியுக பிரவாக்கியருக்கும் மிகுந்த

மகிழ்ச்சியை உண்டாக்கினவன் ஆவேன். ஆந்திர நாட்டுச் சிதைகளும், தமயந்திகளும், சாவித்திரிகளும் காதவர்களைத் தங்கு தடையின்றித் தழுவிக் கொள்ளு வார்கள். எனினும் அந்தப் பத்து மண்டைகளுக்கும் கொஞ்சம் வேலை கொடுக்க வேண்டும். பிறகு சமய சந்தர்ப்பம் போல் பார்த்துக் கொள்ளலாம்.

"தப்பாக எழுதுவது என்றால் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து சொல்லுங்கள். நீதி என்றால்என்ன? என்னோடு வாதிக்கவருபவர்களிடம் குறுக்குக் கேள்வி போடுவது என்று முடிவு செய்திருக்கின்றேன்."

முகடு முட்டும் வாளை எடுத்து என் பக்கமாக நீட்டினான்.

"முதலில் கொஞ்சம் செவி கொடுங்கள். என்னுடைய சந்தேகங்களைத் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றேன். உங்களுக்கும் பத்து மண்டைகள்—சிரங்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு தலைக்காவது நல்ல யோசனை பிறந்து அர்த்தமாகாதா?"

"ஏ ஏ நிறுத்து. எனக்குப் பிடிக்காவிட்டால், உன் ஒரு தலை பத்துத் தலை ஆகி விடும் தெரியுமா!"

"ஆலோசியுங்கள்................"

"ஆலோசிக்க வேண்டுமா? ஆலோசிக்கிறேன். முதலில் அந்த சிகரெட் பெட்டியை இங்கே தள்ளு."

ஆமாம், எனக்கு ஏற்பட்ட காபராவில் விருந்துபசாரம் செய்ய மறந்து விட்டேன். எங்கே உட்காரச் சொல்லுவது? எந்த நாற்காலி தாங்கி நிற்கும்? சிகரெட் பெட்டியை நீட்டினேன்.

"பொடிப் பையலாய் இருக்கிறாய்—உனக்கு கோல்ட பிளேக் காணுதா?—யானை மார்க் ஒரு ஜம்பமா" என்றான்.

இதைக் கேட்டு எனக்குச் சிரிப்பு வந்தது. இதிலிருந்து இவரது சிகரெட் அநுபவம் என்ன என்று தெரிந்து கொண்டேன். ஆனால் வந்த சிரிப்பை அப்படியே அடக்கிக் கொண்டேன், உடனே நான்கு கைகளில் இருந்த வேல், வாள், சூலம், கதாயுதம் ஆகியவைகளை என் மேஜை மீது வைத்தான். அந்த நான்கு கைகளிலும் எட்டுச் சிகரெட்டுகளை எடுத்து எட்டு வாய்களில் வைத்துக் கொண்டான்.

"இன்னும் கொண்டுவா, புத்தியில்லையா!" என்றான்—பாக்கி இரண்டு வாய்களாலும்

"இனி இல்லை"

"இல்லையா? ஏன் இல்லை!"

ஒரு ஆயுதத்தைத் தூக்கினான்

"ராம ராம" என்று பஜனை செய்யத் தொடங்கினேன் — இரண்டு மூன்று காரணங்களால். சிதையை ஒட்ட வைக்கிறேன் என்று ராவணனுக்கே கோபம் வரும்போது, இனி ராமனு கருணை புரிவான்?

பக்கத்திலேயே ராமன் தோன்றி "ஏன் சந்தேகப் படுகிறாய்? கொடு ஒரு பூசை" என்று சொல்லுவான் என எண்ணுகிறேன். சிதை அவனுக்குப் பின்னால் நின்றுகொண்டு "அவனை அழி ராவணு! இன்றேல் என் வைரம் தீராது. கற்பழித்தல்......................." என்றால்.

"ஏ! என்ன ஆலோசிக்கிறாய்?"

என நான்காவது தலையின் வலது மீசையை முறுக்கினான். எனக்கோ எரிச்சல் சகிக்க முடியவில்லை. என்ன செய்வது?

"கடைக்குப் போய் வாங்கி வரலாமா என்று யோசிக்கிறேன்" என்றேன் பிரகஸ்பதியைப் போல்.

"ஓகோ! அதே போக்கில் போய் விடலாம் என்று நினைக்கிறாயா? முடியாது."

எனக்கு ஏதாவது மந்திரங்கள் தெரிந்திருக்கக் கூடாதா என்று எண்ணினேன். எங்காகிலும் பழைய சிகரெட்டுகளோ, பாதிதீர்ந்த குறைச் சிகரெட்டுகளோ இருக்குமா என்று சுற்றுமுற்றும்

பார்த்தேன். கடைசிக் காலத்தில் தெளிவு அதிகம் என்பார்கள். கொஞ்சம் மூளை தீண்டது. சேஷம்மா! என்னைக் காப் பாற்றினாய்! வாரந்தா கிறைய எச்சில் துப்பி வைப்பதற்கு உன்னை எப்பொழு தும் வையமாட்டேன். சர்க்கரைப் பாத் திரத்திற்குப் பதிலாகக் குப்பைப் பெட்டி யைக் கொண்டுவந்து சிற்றுண்டி மேஜை யில் வைத்தாலும் இனிமேல் உன்மீது கோபம் காட்டமாட்டேன்.

"தங்களுக்குக் கோபம் வருமோ என்னவோ?"

"என்ன சங்கதி?"

"பீடி உபயோகிப்பீர்களா?"

"அட பாவி! பிராமணன் பீடி பிடிக் கிருயா?"

"பிராமணீயத்தை விட்டு விட்டேன். தங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கி றது? ஆனல் பிராமணரல்லாதாரும் என்னைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை- பெரிய உத்தியோகங்களை அடித்து விடு வேன் என்ற பயத்தால்"

"சரி! சரி!! எப்படியிருந்தாலும் பிராமணப்பிறவிதானே! பீடிகளை எப் படிப் பிடிக்கலாம்? இவ்வளவு கெட்டுப் போனவனு நீ? இங்கே வாழ உனக்கு யோக்கியதை இல்லை"

கதாயுதம் எடுத்தான்.

"இல்லை. நான் இல்லை. சேஷம்மாள் பீடி பிடிக்கிறுள்"

"ஏண்டா, பெண்ணையா பீடி பிடிக்க விடுகிருய்?

"அவள் என் வேலைக்காரி. என்னல் அவளை என்ன செய்ய முடியும்?"

"படவாப்பயலே! ஒரு சாதாரணப் பெண்ணைச் சொன்னபடி கேட்கச் செய் யாதவன் சீதையை என் மடிமீது உட்கா ரச் செய்தாயே"

கதாயுதம் எடுத்தான்.

"நான் இல்லை என்று விண்ணப்பித் துக் கொள்ளுகின்றேன்"

"ஆனல் யார்?"

மறுபடியும் பழைய பாடமா?

"வேருெருவன்."

"அவனைக் கொண்டுவா?"

"கிடைக்க மாட்டான்"

"அந்தச் சேஷம்மாள் யார்!"

"வேலைக்காரி'

"என்ன ஜாதி?'

"தெரியாது"

"ஏன் தெரியாது?"

"நான் கேட்கவில்லை."

"ஏன் கேட்க வில்லை?"

"என்ன அவசியம்?"

"பெண்ணைக் கண்டால் உனக்குப் பயம் என்று தெரிகிறது. எங்கே உன் மனைவி?"

"எங்கள் ஊரில் இருக்கிறுள்."

"ஏன் அழைத்துக்கொண்டு வர வில்லை? யாராவது தூக்கிக்கொண்டு போனல்?"

"இந்தக் காலத்து ராவணர்களுக்கு அவ்வளவு வீரமும் துணிச்சலும் இல்லை."

"காதல் இருந்தால் வீரமும் துணிச் சலும் வரும்"

"ஒருவன் பெண்டாட்டியை மற்ற வன் தூக்கிக்கொண்டு போனல் இரண்டு வருஷம் தண்டனை. இந்தக் காலமாயிருந் தால் உங்களுக்கும் அந்தக் கதிதான்."

"என்ன சொன்னய்? எனக்கும் அந்தக் கதியா? அடே உனக்குக் கொழுப் பேறிவிட்டது! நீ உபயோகமற்றவன். இந்த மாதிரியான பாழும் கதைகளை எழுதுவதினலேயே உன்னேடு யாரும் இருப்பதில்லை—அந்தப் பீடி பிடிக்கும் சேஷம்மாளைத் தவிர. இனிமேல் உன்னை உயிரோடு விட்டுவைத்திருக்கக் கூடாது. எப்படியும் உன் உயிரை வாங்கிவிடுகிறேன். அந்தப் பீடிகளை இங்கே போடு.

"பாதி குடித்த குறைப் பீடிகள்."

"வாயை மூடு. கொடு என்றும் கொடுத்துவிடு. சும்மா அளக்காதே."

பீடிகளைத் தேடி எடுத்துக் கொடுத்தேன். பாக்கியிருந்த இரண்டு வாய்களிலும் இரண்டு பீடிகளை வைத்துக் கொண்டான். நெருப்புப் பெட்டியைக் கொடுத்தேன். முதலில் எட்டுச் சிகரெட்டுகளையும் பற்றவைத்துப் பீடிகளைப் பற்றவைக்கப் போகிறான்.

"ஐயையோ! மீசைகள் பற்றிக் கொண்டன."

"என்ன! அக்கினி என்னைத் தீண்டியதா?" என்று கர்ஜித்தான்.

பத்து வாய்களிலிருந்தும் புகை வந்து கொண்டிருக்கின்றது. அந்த விநோத சொரூபத்தைப் பார்த்ததும் சிரிப்பு அடக்க முடியவில்லை எனக்கு. வெகு கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

"அந்தச் சேஷம்மாள் எங்கே?"

"வீட்டுக்குப் போய்விட்டாள்."

"இங்கிருந்தால் என்ன?"

"பீதிபயந்தான்—ஊரார் ஏதேனும் சொல்லுவார்களே!"

"இன்னும் அந்தப் பயம் இருக்கிறதா?"

"இந்தக் காலத்தில் அக்கினிப் பரீக்ஷைகளுங்கூட இல்லை."

"சரிதானடா! நான் போகவேணும். நீ எதனால் சாகிறாய்? அஸ்திரத்தினாலா? சஸ்திரத்தினாலா? ஜல்தியாய்ச் சொல்."

என்ன சொல்ல?

"என்னை ஏன் கொல்லவேண்டும்? தயவு செய்து சொல்லுங்கள்."

"சீதையை ஏன் எனது காஷ்டத்தில் தள்ளினாய்?"

இவனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று எனக்கு விளங்கவில்லை.

"இதற்காக நீங்கள் ஏன் கோபப்படவேண்டும்? நீங்கள் சீதையின் காதலை வேண்டினீர்களா இல்லையா?"

"வேண்டினால்?"

"அந்தக் காதலை நீங்கள் அடைந்தீர்கள் என்றால் உங்களுக்குக் கோபம் ஏன் வரவேண்டும்?"

"அடே துன்மார்க்கா! துஷ்டா! முட்டாளே! அவள் என்னைக் காதலித்தால் அவளுக்குக் கற்பு ஏது?"

"கற்பை விட்டுவிட வேண்டும் என்பதுதானே தங்கள் கோரிக்கை?"

"சரிதான்! ஆனால் கற்பில்லாதவளை விரும்பும் கீழ்மகனடா நான்?—உன் தலையைச் சிதற அடிக்கிறேன் பார்!"

"நீங்கள் சிதற அடிக்க வேண்டாமலே என் தலை சிதறிச் சுக்கலாகிக் கொண்டிருக்கிறது—இந்த விநோதப் பிரச்சினையால்......................ராமாயண மெல்லாம் என்ன? ஏன் அந்த அம்மாளை எடுத்துக்கொண்டு போனீர்கள்?"

"சும்மா தமாஷாகவே எடுத்துக் கொண்டு போனேன் என்று அறிந்து கொள்."

"அப்புறம் வெகு கஷ்டப்பட்டீர்களே!"

"ஆமாம். பெரிய பெரிய தேவமாதர்கள் எல்லாரும் என்னைக் காதலித்தார்களே."

"என்னமோ, காதலித்தார்களோ உங்களுக்குப் பயந்து நடித்தார்களோ!",

"ஆ!"

கதாயுதம் எடுத்தான்.

"காதலித்தார்கள்! காதலித்தார்கள்!!"

"ஆம்! அப்படிச் சொல். எனவே இந்த மானுடப் பெண்—ராஜாதியைச் சேர்ந்தவன் என்னைப் புறக்கணிப்பாளா? அதுதான் எனது சபதம்-பிடிவாதம்."

"அந்தப் பைத்தியக்கார சபதத்திற்காகவா எல்லாவற்றையும் நாசம் செய்து கொண்டது? பிறகு அவள் உங்களைக் காதலித்திருந்தால்......................"

"அந்தப் பேச்சப் பேசவேண்டாம் என்றேன். காதலித்திருந்தால் எனக்கென்ன பெருமை? அவளுக்குத்தான் என்ன பெருமை?"

"என்ன பெருமை போங்கள். ராமன் இல்லாத சமயத்தில் திருட்டுத்தனமாய்ப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு வந்தீர்கள்."

"ராமன் முன்னிலையில் எடுத்துக் கொண்டு போனால் அழமாட்டாளா? அழுதால் மனம் இளகும்; விட்டுவிடவேண்டி நேரும் என்ற பயம். அதுவுமின்றி ராமன் பேரில் எனக்கு என்ன கோபம்? அவனைக் கொல்லவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?"

"சரி சரி போங்கள். யுத்தத்தில் ராமன்தானே ஜெயித்தது?"

"ஆ, ராமனா ஜெயித்தது?"

கதாயுதம் எழுந்தது

"இல்லை! இல்லை!! நீங்கள் தான்"

சூலம் எடுத்தான்.

"இல்லை இரண்டு பேரும்.........."

பத்து முகங்களும் கடகடவென்று சிரித்தன.

"ஏண்டா, நீ ராமாயணம் படிக்கவில்லையா?"

"படித்தேன்."

"ராமனால் என்ன முடிந்தது? என் தம்பி—அந்தக் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு—துரோகி என் ரகஸியங்களை வெளிப்படுத்தி விட்டான். புராணக்காரர்களும் அவனை மெச்சிக் கொள்ளுகிறார்கள்—புகழுகிறார்கள்."

"உங்கள் அநியாயங்களைப் பொறுக்க மாட்டாதவனாகி விட்டான்."

"நான் என்ன அநியாயம் செய்தேன்? ராமன் இருக்கும்போது என்னைக் காதலிக்குமாறு நான் எப்படிச் சீதையைக் கேட்பேன்? அதனால் தனியாக எடுத்துக் கொண்டு போய்க் கேட்டேன், அது குற்றமா? ராமன் சீதையை எந்த விதத்தில் சுகப்படுத்த வல்லவன்? அவனுடையது கஷ்ட ஜாதகம். சும்மா அழுவான்—மற்றவர்களையும் அழவைப்பான்—சீதா! சீதா!!

இச்சமயம் சீதையை நினைத்துக் கொஞ்சம் மெய்ம்மறந்தான்.

"அவளுக்குத் தேவதைகள் உபசரிக்க வேண்டும். கந்தருவர்கள் ஏவல் செய்யவேண்டும். திரிலோகங்களும் அவளுக்கு அடி பணியவேண்டும். எனவே ராமன் என்ன சுகம் கொடுப்பான் அவளுக்கு?"

"ஆனால் உங்கள் போக போக்கியங்களைச் சீதை விரும்பினாளா?"

"அவளுக்கு என்ன தெரியும்? அதனால்தான் அவளுக்கு நயத்தாலும் பயத்தாலும் உண்மை உணர்த்த முயன்றேன்; இதில் குற்றம் என்ன? பிள்ளைகளை நீங்கள் அறைகளில் வைத்துப் பூட்டிப் போதிக்கவில்லையா?"

"உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?"

"நான் காதலித்ததனால்."

"ராமன் காதலிக்கவில்லையா?"

"அவனுடையது குறுகிய காதல், நீசக்காதல், சுயநலக் காதல்—என்னுடையது உதாரமானது. தன்னோடு சுக துக்கங்களைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்கிறான் ராமன். என்னோடு சுகங்களை மட்டும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்கிறேன் நான். நானாயிருந்தால் அந்தக் கைகேசியையும் தசரதனையும் என்ன செய்வேன் தெரியுமா! அவர்களைச் சமுத்திரத்தில் தள்ளிவிட்டுச் சீதைக்குச் சுகம் கொடுப்பேன். பெண்டாட்டியைக் காட்டிலும் தாய்—தந்தை—தருமம்—பேர்—புகழ்களை மேலாக மதிக்கிறவனது காதல் ஒரு காதலா?"

"ஆனால் சீதைக்கு.........."

"சீதைக்கா? அவளுக்கு என்ன தெரியும் பெண் பேதைக்கு?"

"ராமனுக்கு.........."

"ராமனுக்கு என்ன தெரியும்? சுயநலக்காரன். பெண்டாட்டியை எடுத்துக் கொண்டு போனதற்குக் கோபம் ஒன்றுதான் வரத் தெரியும். அவனுக்கு உண்மையாகக் காதல் இருந்தால் சீதையை அழைத்து உனக்கு நான் வேணுமா? ராவணன் வேணுமா என்று கேட்டிருக்க மாட்டானா?"

"சீதை யாரை விரும்புவாள் என்று உங்களுக்குத் தெரியாதா?"

"கேட்டிருந்தால் நானே சந்தோஷமாகக் கொடுத்திருப்பேன். இரண்டு பேரையும் சர்வலோகங்கட்கும் பட்டாபிஷேகம் செய்து விட்டு நான் தவம் செய்யப் போயிருப்பேன். ராமன் குறுகிய நோக்க முள்ள சந்தேகப் பேர்வழி யாதலால் அவளை அழவைத்துக் கொல்லுவான் என்று தெரிந்தே நான் கொடுக்கவில்லை."

"என்ன பயன்? உங்களுக்கு எல்லாம் அழிந்து ஒழிந்தன. கடைசியில் சீதை ராமனுக்கே உரிமையானாள்."

"எனது தருமத்தை நான் நிறைவேற்றிக் கொண்டேன்."

"தருமமா? காமமா?"

"காமம்! காமம்!! எனக்கு என்ன காமம் தீர்ந்தது அப்பனே. ராமனை நான் கொன்று விட்ட மாத்திரத்தில் சீதை என்னை வரிப்பாள் என்ற ஆசை இருக்கிறதா எனக்கு? அவனுடைய காஷ்டத்திலேயே அவளும் சாம்பலாகி விடமாட்டாளா? காமமாம்! உனக்குப் புத்தியிருக்கிறதா இல்லையா? எத்தனையோ கதைகளை எழுதுகிறாயே! எப்பொழுதாவது இந்த உலதத்தில் ஒரு பெண்ணுக்காக சகல சம்பத்துக்கள், தம்பிமார்கள், மக்கள் மனைவி, அரசாட்சி முதலியவர்களை விட்டொழித்த மனிதனைக் கண்டிருக்கிறாயா! காட்ட முடியுமா? தேவர்களாலும், அப்ஸரஸ்திரீகளாலும், மண்டோதரிபோன்ற கற்புக்காரிகளாலும் வரிக்கப்பட்டவனல்லவா நான்?"

"ட்ராய் கதை இருக்கிறது."

"தெரியும் எனக்கு. அங்கே பெண்ணை அநுபவித்தான் அவன். நானோ—ஐயோ நானோ? ஒரு புன்முறுவலையாவது அடையவில்லையே! அவள் எனது விமானத்தில் உட்கார்ந்ததே போதும். என் அசோக வனத்தில் வசித்ததே போதும். அதைவிட உயர்ந்த காதலை யோசித்துச் சொல்."

"என்ன காதல்! தருமாத்வான விபீஷணன்கூட உங்களுக்குப் புத்தி சொன்னானா இல்லையா?"

"சீ! விபீஷணனா? அவனைப்போன்ற அயோக்கியனை இந்த உலகம் அறிந்திருக்கிறதா?"

அவன் தருமாத்மா—நான் துராத்மா ஆகிவிட்டேன் அல்லவா? அதனால் தான் உங்கள் தேசம் இப்படி அழுது புலம்பிக் கொண்டிருக்கிறது. கையாலாகாத கூமட்டைப் பையல்! முதலிலிருந்தே அவன் சங்கதி அப்படித்தான். எப்பொழுதும் அச்சமே. மரம் ஏறினால் விழுவேன் என்று அழுவான். சகுனப் பக்ஷிமாதிரி கத்திக்கொண்டே இருப்பான்........................துவாபர யுகத்தில் உங்கள் பீஷ்ம—துரோணர்கள் பாண்டவர் பக்கம் சேர்ந்தார்களா? தருமமோ அதருமமோ—யாருடைய சோற்றைத் தின்றார்களோ அவர் பக்கமே சேர்ந்திருந்தார்கள். எங்கள் விபீஷணனோ? இன்னுமா அவனைப் பாராட்டிக் கொண்டிருக்கிறாய்?'

'பீஷ்மாதிகள் ரகஸியமாய்ப் பாண்டவர்கட்குச் சகாயம் செய்யவில்லையா?"

"அதனாலேயே சிரேஷ்டர்களானார்கள் உங்களுக்கு. கடவுளை நம்பினவர்களுக்குக் கௌரவம் இல்லை உங்கள் நாட்டில். இப்பேர்ப்பட்ட தேசத் துரோகிகளைக் கௌரவிக்கும்படியான சாஸ்திரங்களைப் படிக்கும் உங்கள் ராஜாக்களெல்லாரும் விரோதிகளோடு சேர்ந்து தேசத் துரோகிகள் ஆனார்கள். இந்தக் காலத்தில் அவர்களுக்கே மதிப்பும் மரியாதையும்."

வாயை மூடிக்கொண்டேன்.

"என்னடா?"

"பிறன் மனைவியை அபகரித்தல்"....

"இன்னும் அதையே கத்துகிருயா? செத்துத் தொலை" என்று கதாயுதம் எடுத்துத் தலைமீது ஒரு போடு போட்டான்.

துள்ளி விழுந்து எழுந்தேன். விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு நேரம் தூங்கினேனே!

("ரங்நாராம்" மொழி பெயர்ப்பு.)

குறிப்பு:—"சலம்" என்பவர் ஆந்திர நாட்டில் பேர்பெற்ற சிறுகதை ஆசிரியர். சமூகத் துறையில் புரட்சி மனப்பான்மை யுடையவர். புராணேதிகாசங்களை நிர்த்தாக்ஷண்ணியமாய் விமர்சனம் செய்யக் கூடியவர். ராமாயண கதாபாத்திரங்களைப்பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் பழைமைப் பற்றுள்ள ஆந்திர அறிஞர் சிலருக்கு ஆத்திரத்தை விளைவித்தன. இதற்குமுன் "பிரசண்ட விகட"னில் வெளியான "சீதையின் அக்கினிப் பிரவேசம்" "சலம்" எழுதியதைத் தழுவியதே. தம்மை வெறுக்கின்றவர்கட்குப் பதில்கூறும் முறையில் உய்த்துணர வைப்பாக இந்த "ராவண தரிசனம்" எழுதியிருக்கிறூர் "சலம்"-இதன் சுவையையும் குறிப்புப் பொருள்களையும் தமிழ்மக்களும் உணரவேண்டும் என்ற அவா மேலிட்டால் இது வெளியிடப்படுகிறது. தமிழ்மக்கள் கருத்து வேற்றுமைகட்குக் கண்ணியம் அளிப்பார்கள் என்பது "விகடன்" நம்பிக்கை.

"பி. வி." ஆசிரியர்.

வந்துவிட்டது! வந்துவிட்டது!!

மிஸ். எம். எஸ். விஜயாள், மாஸ்டர் ராஜம்

இன்னும் இதர பிரபல நடிகர்களைக் கொண்டு

புனு, சரஸ்வதி சினிடோனில்

அதியுன்னதமாக, ஏராளமான பொருட் செலவில் தயாரித்த

ருக்மணி கல்யாணம்

தாதாடூர்னே என்பவரால் மேர்பாற்வையிட்டு
பாலச்சந்திர பெந்தர்க்காரால் டைரக்ட் செய்யப்பட்டது.

உங்களுடைய அன்பிற்குரிய சினிமாவில் கூடிய சீக்கிரம் எதிர் பாருங்கள்.

—: தயாரித்தவர் :—

வெங்கடேஸ்வரர் பிலிம்ஸ், தஞ்சாவூர்

தேர்தல் மோகம்

—:(0):—

(லக்ஷ்மி.)

சில நாட்களுக்கு முன்னதாகத்தான் சர்க்கார் ஆஸ்பத்திரியில் விசேஷ சிகிச்சையிலிருந்து திரும்பிய சேட்ஜியின் மனைவியார் ஸ்ரீமதி ராம்பியாரி வைத்தியரின் சொற்படி சாயங்காலம் சிறிது தூரம் ஊருக்கு வெளியில் உலவப் போயிருந்தாள். அன்று காலை சேட்ஜியிடம் தேர்தலைப்பற்றி ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தைப் பற்றிய சிந்தனையில் வழக்கமாக போகும் தூரத்தைவிட அதிக தூரம் சென்றுவிட்டாள். இருள் சூழ்ந்தது. திடீரென்று சாலையோரத்தில் ஒரு மின்னல், "கிளிக்" என்ற பல்லியின் சத்தம். புகைப்படம் முடிந்தது. நிமிர்ந்து பார்த்தாள். மழைக்கான அறிகுறி ஒன்றும் இல்லாதபோது மின்னல் தோன்றியதின் காரணம் விளங்கவில்லை. உடனே வீடு நோக்கித் திரும்பினாள். என்றும் நிற்கக்கூடிய இடத்தில் சேட்ஜியின் காரைக் காணவில்லை. கொஞ்சதூரம் சென்றவுடன் ஒரு சிறு அழகான கார் அவள் அருகில் வந்து நின்றது. வழக்கம்போல் வில்லைச் சேவகன் ஒருவன் முன்பக்கமிருந்து குதித்து இறங்கி அவ்வம்மையாருக்கு காரின் பின்பக்கத்து கதவைத் திறந்து கொண்டு நின்றான். அவசரமாக அவள் காரில் ஏறுகையில் சேவகன், "வழியில் காரின் டயர் ஊனமாய்விட்டது, புதிது மாற்றிப் போட்டுக்கொண்டு வர நேரமாயிற்று, மன்னிக்கவேணும்" என்றான்; கார் நகர்ந்தது.

வீடு நோக்கித் திரும்பிய கார் வாயுவேகம் மனோவேகமாய் பறந்தது. காரின் மேற்திரையிலிருந்த விளக்கு திடீரென்று அவிந்துவிட ஒரு சீசா உடைந்த சத்தம் கேட்டது. கார் புதிய பாதையில் திரும்பி முன்னிலும் பன்மடங்கு வேகத்தில் வில்லினின்று விடுத்த அம்பினையொப்ப பாய்ந்தோடியது. காரிலிருந்த பிரயாணிக்கு ஏதோ சந்தேகந் தோன்ற திரைகளைத் தூக்க முயற்சித்தாள். அது பயனற்றதாயிற்று. அந்த வேகத்தில் கதவைத் திறக்கவும் பயந்தாள். பலமுறை அங்கு மிங்கும் அலைக்கப் பட்டதனால் அடிக்கடி சந்துகளும் தெருக்களும் கடந்து கார் போவதாக உணர்ந்தாள். எங்கேயோ கடத்தப்பட்டு போகிறதாக தெரிந்து பயந்தாள். உடல் வியர்க்க மூர்ச்சித்து விழுந்தாள். காரின் கிழ்தளத்தில் பரவியிருந்த உடைந்த சீசாவிலுள்ள மருந்தின் ஆவி பாதிக்க, மூர்ச்சித்து விழுந்த அவள் பிணம்போல் கிடந்தாள்.

* * *

தினசரிகள் எல்லாம் "தேர்தல், தேர்தல்" என்று கொட்டை எழுத்துகளில் எழுத வாரம்பித்தன. நிதமும் இதைப்பற்றிய செய்திகள் பக்கங்களை கொள்ளை கொண்டன. ஆற்றங்கரை, ஊர்க்கிணறு, ஆரம்பப் பாடசாலைகள் முதலிய விடங்களில் கூட தேர்தல், "வோட்" என்ற வார்த்தைகள் சர்வ சாதாரணமாயின.

பிரபல வைர வியாபாரியும் பொதுஜன நன்மதிப்பும் உடையவரான சேட் ஜெயராம் கேசவ்ஜீக்கும், ஜமீன் குமார ராஜாவுக்கும் போட்டித் தேர்தல் வெகு மும்முரம். தேர்தலுக்குக் குறிப்பிட்ட நாள் நெருங்க நெருங்க இருதரத்தாரும்

திவிர பிரயாசை செய்தார்கள். சேட்ஜி முழுநேரமும் தேர்தல் வேலையில் ஈடுபட்டார். வியாபாரம் இதன் முன் இரண்டாம் கருத்தாயிற்று. அரசன் எவ்வழியோ அவ்வழி குடிகளும் என்றவாறு அவர் கடையைச் சேர்ந்த சிப்பந்திகள் எல்லோரும் அவர் கருத்தறிந்து நடந்தார்கள்.

இரவு மணி ஒன்பதிருக்கும், பயத்தோடு நடுங்கிக்கொண்டு கண்ணீர் சிந்தும் கண்களோடு பரிதாபமான ஸ்திதியில் சேட்ஜியின் முன் மிகவும் பௌவியமாய் நின்றான் அவருடைய கார் டிரைவர். மறுநாள் நடக்க வேண்டியவைகளைப் பற்றித் தன் குமாஸ்தாவிடம் சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு சாப்பிடச் செல்ல விருந்த கேசவ்ஜி கோபாக்கினியோடு இவனை நோக்கினார்.

"எ—ச—மா; அம்—மா கா—ணோ—எ—ங் கு—ந் தே—டி—னே. அ—ம்—மா கா—ணோ" என்று தழதழத்த குரலில் தான் வந்த கருத்தைத் தெரிவித்தான். மேலும் வார்த்தைகள் எழாது விக்க, அப்படியே பின்புறம் சுவற்றில் சாய்ந்தான். சேட்ஜியின் கண்கள் கலங்கின. ஒன்றும் விளங்காது ஸ்தம்பம்போல் நின்றார். மீசை துடித்தது. உதடு படபட வென்றடிக்க வியர்வையில் மூழ்கினார். கண்முன் தோன்றுவன வெல்லாம் கிறுகிறு வென்று சுற்றுவபோல் தோன்றின. நிலைமை யறிந்த குமாஸ்தா டிரைவனை தனியே அழைத்துச் சென்று தேற்றி நடந்தவற்றை முற்றிலும் விசாரித்து வந்து தன் எஜமானனிடம் சொன்னார்.

"சாயங்காலம் வழக்கம்போல் பங்களாவை விட்டுப் புறப்பட்ட கார் ஊரின் எல்லையை நெருங்குகையில், ஒரு தோட்டத்தின் வேலியின் பின்னிருந்து தாக்கப்பட்டது. இரண்டு வெடிச்சத்தம் கேட்டது. கார் சிறிது தூரம் ஓடி மேற்செல்ல முடியாது நிறுத்தும்படியாயிற்று. வெடிகுண்டுகளுண்ட டயர் ஒன்று துவண்டுபோய் கிடந்தது. அதிசீக்கிரமாய் புதிய சக்கரத்தை மாட்டிக்கொண்டு இருக்கையில் ஊரினுள் நுழைந்த மற்றொரு கார் டிரைவரின் எக்காளச் சிரிப்பு இவன் வயிற்றெரிச்சலை அதிகப் படுத்திற்று. நிமிர்ந்து பார்க்கையில் தூசியில் மறைந்த காரின் நம்பர் இந்தக் கார் நம்பருடன் ஒத்திருப்பதைக் கண்டான். தன் காரைச் சரிப்படுத்திக்கொண்டு பத்து நிமிஷத்திற்குள் வழக்கமாக நிற்குமிடத்திற்கு வந்த போது அம்மணியைக் காணவில்லை. பல தடவை சத்தமிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தான். கொஞ்சதூரத்திற்கு அப்பால் சந்தித்த பார வண்டிக்காரனை விசாரித்திருக்கிறான். பயனொன்றுமில்லை. ஸ்திரீ சங்கம், நாடகச்சசை முதலிய விடங்களில் விசாரித்தான். மேற்சொன்ன தோட்டத்திற்குள் நுழைந்த சேவகன் திரும்பவேயில்லை."

இவற்றைக் கேட்ட கேசவ்ஜீ பெருமூச்செறிந்து டெலிபோனில் இவ்விஷயத்தை போலீசுக்குத் தெரிவித்தார். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் குவாடிர்பாக்ஷா சில துப்பறிவோருடன் பங்களாவுக்கு வந்து சேர்ந்தார்.

* * *

தேயிலை தோட்டத்திற் கருகில் ஒரு கிருஸ்தவக் குடியிருப்பு. நாகரீகமாய் அமைக்கப்பெற்ற ஒரு அறையில் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த ஓர் ஸ்திரீ தூக்கம் தெளிந்து படுக்கையில் புரண்டு மறுபக்கமாய்ப் படுத்தாள். வெளிச்சம் அதிகமா யிருந்தபடியால் கண்கள் திறந்தன. உடனே முகத்தில் ஆச்சரியமும் பயமும் கலந்த குறிகள் தோன்றின. ஒன்றும் விளங்காதவளாய் கண்களைக் கசக்கியும் துடைத்தும் சுற்று முற்றும் பார்த்தாள். சந்தேகம் வலுத்தது. படுக்கையிலிருந்து குதித்தெழுந்து சன்னலண்டை ஓடினாள். திரைகளை நீக்கிக்கொண்டு பார்க்கையில் ஒரு பங்களாவின் மேல் மாடியில் தான் இருப்பதாகவும் தோட்டத்தில் வாத்துகள் மேய்வதும் புலனாயிற்று. திரும்புகையில் எதிரிலிருந்த நிலைக்கண்ணாடியில் தன்னுருவத்தின் அலங்கோலத்தைக் கண்டு வியப்புடன் உற்று நோக்கினாள். தலையில் நெற்றியி னருகில் ஒரு

காயத்தை வெள்ளைத் துணியால் கட்டியிருந்தது.

அறையினுள் சந்தடி கேட்கவே, ஒரு வேலைக்காரன் சூடான காபியுடன் கதவைத் திறந்துகொண்டு உள்நுழைந்தான்.

"நீ யார்?"

"நம்ப குசினிக்காரங்க, பொட்லரு இப்போ வருவாருங்க" என்று சொல்லிக் கொண்டே வெளியில் போய்விட்டான்.

கொஞ்ச நேரங்கழித்து தூய வெள்ளை உடையில் தலைப்பாகையுடன் ஒரு பட்லர் வந்து அவ்வம்மையிருந்த கட்டிலின் கருகில் நின்று சலாம் செய்தான்;

"கொஞ்ச நேரத்தில் துரை இங்கே வருவார்" என்றான்.

"எந்த துரை?"

"சாமியார்......................" என்று சொல்ல ஆரம்பிக்கையில் பக்கத் தறையிலிருந்து "போய்" என்ற சத்தம் கேட்க, இவன் "சார்" என்றவாறு போய்விட்டான்.

"அம்மனி, ஒங்கல் டலையில் காயம் எப்டி யிருக்கிடு" என்று கேட்டுக்கொண்டே பாதிரியார் அங்கே வந்தார்.

ஸ்ரீமதி ராம்பியாரி முதலில் சற்று வெருண்டாளானாலும் பிறகு பதில் சொன்னாள்.

"வலியில்லை, ஆனால் நான் எங்கிருக்கிறேன், இங்கு எப்படி வந்தேன், நீங்கள் யார்!" என்று சரமாரியாய் கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள்.

"வலியில்ல, சான்டஷம் (சந்தோஷம்) நீங்கல் கொஞ்சம் காப்பி குடிங்கல், பிறகு எல்லாம் சொல்றேன்," என்றார்.

அவர் வார்த்தையைத் தட்டாது அவள் அப்படியே செய்தாள்.

"நீங்கல் கார் ஓட்டும்?"

"தெரியாது."

"டெரியாடு, ஓட்ட! நா ஒங்கலை கண்டபோடு டிரைவர் சீட்டில் ஸ்டீரிங் வீலி (கைச் சக்கரம்)ன் மேல் சாய்ந்திருந்டீர்களே!

"நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை. தெளிவாய் நடந்தது முழுவதும் சொல்லவேண்டும்."

"புடன் கிலமை காலை டின்னவேலி இரண்டு வரும்போடு ரோட்டில் ஒரு கார் கல்லில் மோடி உடைண்டு கிடக்கக் கண்டேன். இறங்கிப் பார்க்க நீங்கல் முன் சீட்டின் இருண்டீர்கள். அப்பொடு காலரை மணி. இரக்கப்பட்டு ஒங்கலை யிங்கே கொண்டு வந்டேன். அந்டக்கார் தோட்டட்டில் நிற்கி; நீங்கல் இப்போடுடான் மயக்கன் டெலிண்டு பேசுகிறீர்கல், மூலையில் பலமான அடி. காயம் டலையில் நாலுநாலாய் நீங்கல் தூக்கம். டந்டி கொடுக்கலா மின்னு ஒங்கல் விட்டு அட்ரஸ் டெரியாடு. என் வேலை கெடக்கு, உங்கல் பக்கம் நா எப்போவும் இருண்டேன்."

அவசரமாக காரில் வீட்டிற்குத் திரும்பியதுதான் அவளுக்கு ஞாபக மிருந்தது. வேறொன்றும் நினைவில்லை.

"தங்களுடைய உதவிக்கு மிகவும் நன்றி யறிவுள்ளவள் நான். ஆனால் எப்பொழுது நான் எங்கள் வீட்டிற்குப் போவேன்?"

* * *

"கோர சம்பவம்"

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த கிழாம்பூர் ரயில்வே ஸ்டேஷனி லிருந்து தெற்கே போகும் ரஸ்தா பாபநாசத்தை நெருங்குமிடத்தில் அது இரண்டு குன்றுகளுக்கிடையில் செல்கிறது. அவ்விடத்தில் ஒரு யௌவன ஸ்திரீயின் பிரேதம் ஒரு மரக்கிளையில் தொங்குகிறது. அவள் விசேஷ ஆபரணம் ஒன்றும் அணிந்திருக்கவில்லை. உடை, தோற்றம் முதலியவைகளைக் கவனிக்கையில் தனவந்தர் வகுப்பினளாய் இருக்கலாம் என்று தெரிகிறது. பிரேதம் போலீசாரிடம் ஒப்புவிக்கப்பட்டது. கீழே காண்பது அந்த ஸ்திரீயின் புகைப்படம்" என்பது ஏழாந்தேதி வெளிவந்த செய்தி.

அதே பத்திரிகையில், "உள்நாட்டுச் செய்திகள்" என்ற பக்கத்தில் அம்பா சமுத்திரம் என்ற ஊரின் கீழ் பின்வரும் விஷயம் குறிப்பிட்டிருந்தது.

"இராக்காலங்களில் மலையிலுள்ள காடுகளில் வேட்டைக்காரர்களால் ஏற்படும் உபத்திரவத்தை நீக்கும் பொருட்டும், சட்ட விரோதமாய் காடுகளில் புகுந்து வேட்டை யாடுதலை தடுப்பதற்காகவும் வைத்த கண்ணியில் சிக்கிய ஒருவன் தான் வந்த கார்கல்லில் மோதுண்டு கொறுங்கியதனுல் தப்பித்து ஓடி விட்டான். அவனைப் பின் தொடர்ந்தோடிய காட்டிலாகா ஆட்களையும் காணவில்லை. அதிகாரிகள் இதைப் பற்றி விசாரித்து வருகிறார்கள்."

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அனுப்பிய துப்பறிபவர் ஒருவர் திருநெல்வேலியில் மாறுவேடம் பூண்டு துப்பு துலக்கி வருகையில் மேற்கூறியவற்றை பத்திரிகையில் கண்டார். உடனே அவர் "பின்னர் வந்த செய்தி" என்ற பத்தியில் இதைப்பற்றி வேறேதேனும் இருக்கலாமோ என ஆவலுடன் பார்த்தார். அச் செய்தி கூறியதாவது:—

"இன்று வெளிவந்த "கோர சம்பவம்" என்ற செய்தியின்படி தற்கொலை செய்துகொண்ட ஸ்திரீ சில தினங்களுக்கு முன் தூத்துக்குடியில் காணுமற் போன பிரபல வைர வியாபாரி ஸ்ரீ ஜெயராம் கேசவ்ஜீ சேட்டின் மனைவி ஸ்ரீமதி ராம்பியாரி கேசவ்ஜீயா யிருக்கலாமோ வென்ற சந்தேகப் படுகிறார்கள் என்று நம்பிக்கையுள்ள விடங்களிலிருந்து அறிகிறோம்."

இறக, சேட்ஜி தன் ஆருயிர்க் காதலி யோடு தேர்தல் விஷயமாய் அன்று வாதாடியது நினைவுக்கு வந்தது. அவள் மனம் கோணுமாறு நடந்ததை நினைத்து நினைத்து வருந்தினுர். ஒருவேளை இக்காரணத்தினுல் அவள் இவ்வுலக வாழ்க்கையை அற்பமாக நினைத்தனளோ என்று ஐயமுற்றுர். அப்படி யிருக்குமாயின் அதற்கு காரணஸ்தன் தானேயென்று உணர்ந்து பலவாறு தன்னை நொந்து கொண்டார். நான்கு நாட்களாக சரி

யானவன் உறக்கமின்றி தன் அறையை விட்டு அகலாது கிடந்தார். அவருடைய தேகநிலையை உத்தேசித்து அவரிடம் இது விஷயமாய் யாரும் பேச அனுமதிக்கக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவுடன் குமாஸ்தாவை காவலில் வைத்துச் சென்றார் குவாடிர் பாக்ஷா. முந்தினநாள் நடந்த தேர்தலுக்கும் அவர் வெளி வரவில்லை. சுருங்கச் சொல்லுகையில் தன் மனைவியைப் பறி கொடுத்த நோ முதல் சேட்ஜி தேர்தலையே மறந்தார்.

அவரது மனச் சோர்வைக் கண்ட குமாரராஜாவின் சிப்பந்திகள் முன்னிலும் பன்மடங்கு ஆர்வத்தோடு வேலை செய்தார்கள்; தங்களுக்கே பூரண வெற்றியுண்டாகுமென்ற முழு நம்பிக்கை. மறுநாள் வெளியாக வேண்டிய விவரத்தை எதிர்பார்த்தார்கள். சேட்ஜியின் ஆட்களைத் தன் பக்கம் இழுக்க வேண்டி குமார ராஜா சென்ற மூன்று தினங்களில் ஆயிரக்கணக்காய் பணத்தை விரயம் செய்தார்.



அவன் செயல் யாரே அறிவார்!

* * *

“ஹலோ, சேட்ஜீ! உங்கள் யோகமே யோகம், நீங்கள் பலே அதிர்ஷ்டசாலி. பொதுஜன அபிப்பிராயத்தைக் கொள்ளைகொண்ட உங்களை எதிர்த்தது தவறென்று நான் இப்போது உணர்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் தங்கள் மனைவியார் கூலத்திற்கு காரணமாயிருந்த யான் அரும்பாவி. என்னை க்ஷமிக்கணும்” என்று குமாரராஜா டெலிபோனில் சேட்ஜியினிடம் மன்னிப்புக் கேட்டார். மன்னிப்பு என்

பது அவர் மனதில் எப்படி உண்டாகும்? தன் வெற்றியின் சந்தோஷத்தைப் பகிர்ந்தநுபவிக்க தன்னுசை மனைவியை யிழந்த கேசவ்ஜீக்கு குமாரராஜாவின் வார்த்தைகள் கோபத்தை அதிகமாக்கின.

நகரப் பிரமுகர்களும் நண்பர்களும் இவரது வெற்றியைப் போற்ற அங்கு வந்து குழுமி யிருந்தனர். அவ்வூர்வாசிகள் அனைவரும் தங்கள் தங்களுக்கே அத்தேர்தலின் வெற்றி கண்டதாக எண்ணி மகிழ்ந்திருந்தனர். சேட்ஜீ தன்னறையை விட்டு வெளியில் வரவில்லை. நண்பர்கள் காத்திருந்தார்கள். டெலிபோனில் அடிக்கடி மணியின் சத்தம் கேட்டது.

“யாரது?”

“நான்தான் சேட்ஜீ, குவாடிர் பாக்ஷா பேசுகிறேன்.”

“என்ன, என்ன!”

“உங்கள் கேஸ் ருசுவாகிவிட்டது. அம்பா சமுத்ரத்திலிருந்து உங்கள் மனைவியார் புறப்பட்டு சுமார் இரண்டு அல்லது மூன்றுமணி நேர மிருக்கும். இந்நேரம் அங்கு வந்திருக்கலாம். அவருடன் ஒரு பாதிரியாரும் எங்கள் ஆள் ஒருவரும் வருகிறார்கள். இன்னும் இரண்டு நிமிஷத்தில் நான் அங்கிருப்பேன்.

சேட்ஜீ ‘படார்’ என்று கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். அங்கு கூடி யிருந்தோர்களையும் அவர்களது ஏகோபித்த ஆரவாரத்தையும் கவனியாது வெற்றி கொண்டவர் வெறி கொண்டவர் போல் வெளியே ஓடினார். தெருவில் பங்களா முன் அப்போதுதான் ஒரு கார் வந்து நின்றது. பாக்ஷா சொல்லியபடி சாதாரண உடையில் ஒரு கம்பீரமான தோற்றமுள்ள வாலிபரொருவர் முன்பக்க மிருந்து இறங்கினார். பாதிரியாரும் ஒரு ஸ்திரீயும் பின்புற மிருந்து இறங்கினார்கள். அவள் யாரென்று சேட்ஜீ அறிவாராயினும், கண்ட மாத்திரத்தில் அவர் திகைத்துப் போனார். நாலைந்து நாட்களில் அடையாளம் தெரியாதவாறு அவ்வம்மணி மாறிப்போனாள். நோய்வாய்ப்பட்டுத் தேறி வருகிற காலத்து மறுபடியும் ஒரு சங்கடம் நேர்ந்து அவள் உடல் நிலையைச் சீர்குலைத்தது.

வந்தவர்களும் எதிர்பார்த்து நின்றவரும் ஒருவரை யொருவர் நோக்கிய வண்ணமே நின்றார்களே யொழிய சில நிமிஷங்கள் வரை பேசவேயில்லை. கண்களுக்கே ஒரு பாஷை உண்டென்பது வாஸ்தவமானால் அது இங்கேதான் கையாளப்பட்டது. பிரிந்தவர்கள் கூடியபோது நோக்கிய நோக்கிற்கும் அவர்களைக் கூட்டுவித்தவர்களை நன்றியறிதலோடு பார்த்த பார்வைக்கும் பொருள் கூறல் அரிது.

புதிய விருந்தினர்களை வரவேற்று முகமன் கூறி உள்ளழைத்து செல்லுகையில் சேட்ஜியின் கண்கள் ஆனந்தபாஷ்பம் பொழிய, சந்தோஷ மிகுதியால் பட்டினி கிடந்து வாடிய உடல் பூரிப்பெய்த, எதிர்கொண்டு வந்த நண்பர் குழாத்திற்குக் காட்சி யளித்தார். காணாமற்போன மனைவியார் திரும்பி வரவே கூடி யிருந்தோர் தேர்தல் வெற்றி வினவ வந்தவிடத்து மற்றொரு வெற்றியும் சேர பேருவகையுடன் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர். வந்திருந்தோர் அனைவரையும் உபசரித்து வருகையில் குவாடிர் பாக்ஷாவும் வந்து சேர்ந்தார். சந்தோஷ ஆரவாரம் அமைதிபெற பாக்ஷாவின் வேண்டுகோளின் பேரில் பாதிரியாருடன் வந்த துப்பறியும் நிபுணர் தான் கண்டு பிடித்தவற்றின் விபரத்தைக் கூறினார். சகலரும் நிசப்தமாய் கூர்ந்து கேட்டனர்.

* * *

“5-தேதி செவ்வாய்க்கிழமை சாயங்காலம் இந்தச் சம்பவம் நடந்ததும் கேசவ்ஜீ அவர்களிடம் வந்து அவ்வம்மையாரின் அடையாளத்தைத் தெரிந்து கொண்டோம். ஒரு புகைப்படமும் பங்களாவிலிருந்து எடுத்துச் சென்றோம். கார் டிரைவரையும் கூடவே அழைத்துச் சென்று கார் தாக்கப்பட்ட இடத்தையும் அருகிலுள்ள தோட்டத்தையும் பரிசோதித்தோம். கார் அடிபட்ட விடத்தில் பழுதான டயரை நிறுத்திப் பார்த்ததில்

வெடித்த துப்பாக்கியின் குண்டுகள் சென்ற வழி ஆள் நின்ற விடத்தைக் காண்பித்தது. அவர் காலடிகளைக்கொண்டு அவரது உயர முதலியவற்றை நிச்சயித்தோம். அந்தத் தோட்டத்தில் கண்ட அடிச்சுவடுகளை கவனிக்கையில் எதிரியைப் பிடிக்கச் சென்ற பாவனையில் ஓடிய சேட்ஜியின் சேவகன் அவன் நின்றவிடம் வரைக்கும் போய் சில வார்த்தைகள் பேசிவிட்டு பிறகு இருவருமாக தோட்டத்தைக் கடந்து மறைத்து வைத்திருந்த காரில் ஏறியதாகத் தெரிகிறது."

"வாஸ்தவம், நாயுடு (அந்தச் சேவகன்) என்னைச் சந்தித்தபோது 'வழியில் ஊனமடைந்த டயரைச் சீர்படுத்திக் கொண்டுவர தாமதமாய் விட்டது' எனச் சொன்னான்" என்று இடைமறித்துச் சொன்னாள் சேட்ஜீயின் மனைவி.

"தோட்டத்தில் எதிரியைச் சந்தித்த விடத்தில் சேவகன் எதிர்த்ததாக ஏதும் தெரியவில்லை. முன்னதாகச் செய்த ஏற்பாட்டின்படி இது நடந்திருப்பதாகத் தெரிவதால் அவன் கைக்கூலி வாங்கியிருப்பான் என்பதில் ஐயமில்லை.

"பிறகு காரின் தடத்தில் சென்று அது நின்ற இடத்தையும் அம்மையாரைச் சந்தித்து திரும்பிய விடத்தையும் கண்டோம். அந்தக் கார் டயரின் அடையாளத்தைக் குறித்துக்கொண்டு நம்முடைய கார் பாரை வண்டியைச் சந்தித்தவிடம் வரை சென்றோம். இந்த இரண்டு இடங்களுக்கும் இடையில்தான் வழக்கமாக கார் நிற்குமிடம். இவ்விதம் அம்மையாரைக் கடத்தி சேட்ஜியை தேர்தலில் பின்வாங்கச் செய்யவேண்டும் என்ற யோசனை எதிரிகளுக்கு ஆரம்பத்திலேயே கிடையாது. ஆகையால் அவசரமவசரமாக அவர்கள் செய்த சூழ்ச்சியில் இடை இடையே உள்ள தப்பிதங்கள் நமக்கு அநுகூலமாயிருந்தன.

"டயரிலிருந்து எடுத்த ஒரு நசுங்கிய குண்டு ஒன்றைக்கொண்டு அதை உபயோகித்தவர் இன்னார் என்று தெரிந்தோம். துப்பாக்கி யாருடையதென்பதைக் கண்டு பிடிக்க பிரயாசையில்லை. தேர்தல் தான் இதற்குக்காரணம் என்று சந்தேகித்தேன். அதே உண்மை என்பது பின்னர் விளங்கியது. 7வ. காலையில் வந்த தினசரிப் பத்திரிகையில் உள்ள செய்திகள் எங்களுக்கு உதவி செய்தன. அன்று மத்தியானம் அம்பா சமுத்திரத்திற்கு பிரயாணமானேன்.

"தீராத என்னுடற்பிணி தீருமென்ற நம்பிக்கையோடு பாபநாசம் வந்த எனக்கு நிவர்த்திக்கு ஏது ஒன்றும் புலனாகவில்லையாகையால் இருப்பதைவிட இறப்பதே மேலென்று நிச்சயித்தேன்" என்று எழுதிய சீட்டொன்று அவள்பால் கண்ட ஜூரிகள் 'நோயின் கொடுமையால் தற்கொலை புரிந்தனள்' என்ற முடிவுக்கு வந்தார்கள். பரிசோதனையின்றி பிரேதத்தை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்கள். நான் அவ்விடம் போவதற்குள் அதை அப்புறப்படுத்தி விட்டார்கள். என்னிடம் அதை ஒப்புவிக்கும்படி கேட்டேன். என்னைச் சந்தேகப்பட்டு கொடுக்க மறுத்தார்கள். கைவசமிருந்த புகைப்படத்தைக் காண்பித்தேன். இருந்தும் என்னுடைய உடை மாற்றத்தால் மேலும் தயங்கினார்கள். காரியம் தாமதப் படுவதறிந்து நான் யாரென்று அவர்களுக்கு எடுத்தோத வேண்டியதாயிற்று. குழியில் இறக்கவிருந்த பிரேதத்தை உடனே என் விடுதிக்கு அனுப்பிவிட்டு இங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரிவித்தேன். ஆனால் முழுவதும் கண்டுபிடிக்குமுன் விஷயம் வெளியாகவேண்டாமென்று கேட்டுக் கொண்டேன். எனது ஜாகைக்குப்போய் பிரேதத்தை உற்று கவனிக்கையில் உண்மை விளங்கிற்று.

"ஸ்ரீமதி கேசவ்ஜி உயிருடன் தானிருக்கிறாள். பிரேதம் என்றது மெழுகு பொம்மை, என்று பாக்ஷாவுக்குத் தந்தி கொடுத்தேன்."

"வெண்ணெய் திரண்டுவருகையில் தாழி உடைந்த கதையாய், இந்தக் காரியத்தின் போக்கு திடீரென்று மாறிவிடவே நான் பெரிதும் ஏமாற்றமடைந்

தேன். யோசனையில் ஆழ்ந்தேன். தூத்துக்குடியில் இரவு ஏழு மணிக்கு காணாமற்போன ஆள் மறுநாள் விடியுமுன் பாபநாசத்தில் கண்டு பிடிக்கப்பட்டால் காரில் தான் கடத்தப் பட்டிருக்கவேண்டும். ரயில் வண்டிகள் கிடையாது. ஒருவேளை இந்தக்காருக்கும் அவ்வூர் காட்டிலாகா உத்தியோகஸ்தர் சந்தேகப்பட்ட காருக்கும் சம்பந்த மிருக்கலாம் என்று தோன்றியது. அன்று சாயந்திரம் பாரண்டரைக் கலந்த பிறகு இராப்பொழுதை பாபநாசத்தில் கழிக்கவெண்ணி அங்கு சென்றேன்.

“வண்டிகளை நிறுத்திவிட்டு சில விறகுவெட்டிகள் ஆற்றங்கரையில் கட்டுச்சாதம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சனிக்கிழமை இரவு மணி 7–30 இருக்கும். படித்துறையில் யோசனையில் ஆழ்ந்திருந்த என்னை அவர்களது சம்பாஷணை கவர்ந்தது.

‘அன்னைக்கு சாமியார் காரு மோதி உடைஞ்சு போச்சுன்னுகளே, உமக்குத் தெரியுமாவே’ என்றான் ஒருவன்.

‘அவிய (அவர்களுடைய) காரு வெள்ளென கிழிரங்கிச்சே’ என்றான் மற்றொருவன்.

‘என்ன காக்கா, நிம்பளும் சும்மாயிருக்கிரேரே. நம்ப காதரு பொதங்கிளம மத்தியானம் ஒரு பாடாதி காரை சாமியார் தோட்டத்திக்கு இழுத்துகிட்டு போனத பார்த்தாண்ணு சொல்லல!’ என்று ஞாபகமூட்டினான் ஒரு ராவுத்தன்.

‘ஆமா ஓய், இஸ்மாலு, ஒரு சமயம் அதானோ என்னமோ!

‘ஆனா முசாரி பங்களா காவக்காரன் ஒண்ணுஞ் சொல்லலையே!’ என்றான் முதலில் பேசியவன்.

‘அடுத்த தடவ அவனக் கேட்டாப் போச்சு’ என்றான் இஸ்மாயில் ராவுத்தன்.

“பிறகு அவர்கள் பேசியது இது சம்பந்தப் பட்டதில்லை. மறுநாள்காலை யான் அவர்கள் சொன்ன முசாபரி பங்களாவுக்குப் போனேன். செவ்வாய் இரவு பன்னிரண்டு மணிக்கு ஒரு சேவகரும் மற்றொரு ஆளும் ஒரு காரில் அங்குவந்து தங்கிப் போனார்களாம். அடுத்தநாள் காலை திரும்பிப் போய்விட்டார்களாம். அங்கு வந்து போனவர்கள் சந்தேகப்பட்ட பேர் வழிகள்தான். கார் டயரின் அடையாளம் இதை நிச்சயப் படுத்திற்று. அடுத்தபடியாக சாமியார் தோட்டத்தைப் பற்றி விசாரித்தேன். எங்களுடன் இங்கு வந்திருக்கும் இந்த பாதிரியின் கார் புதன் கிழமை அதிகாலை தோட்டத்திற்குத் திரும்பியதாக அந்தக் காவலாளி சொன்னான். சிறிது நேரத்திற்கெல்லாம் சாமியார் தோட்டம் போய்ச் சேர்ந்தேன். சேட்ஜீ அவர்களின் மனைவியார் மறைந்த மாயமும் காட்டிலாகா கண்ணியில் தப்பியவன் மர்மமும் வெளியாயிற்று.

“தன்னந் தனிமையாய் இரவில் 10–மணிக்குமேல் வேட்டையாட காரில் ஒரு ஷிகாரி சென்றான். அவனைப் பின்தொடர்ந்து நீலத்தலைப்பாகை சேகவர்கள் சென்றார்கள்; பிடிப்பது கஷ்டமானபடியால் திரும்பி வருகையில் திடீரென்று அவன் காரை நிறுத்த எண்ணி வழியில் இறக்கத்தில் பாரை மறைவாய் சில கருங்கற்களை புறட்டிவைத்தார்கள். ஷிகாரி நள்ளிரவில் வேட்டை ஒன்றும் அகப்படாது திரும்பி வருகையில் எதிர்பார்த்தபடி கற்களில் கார் மோத தடுமாறி நிறுத்தினான். புதரில் மறைந்திருந்த ஒரு கோடரிச் சேவகன் கையில் ஒரு எலக்ரிடிக் லாந்தருடன் காரை நோக்கி ஓடிவந்தான். இதைக் கண்ட ஷிகாரி தன்னைப் பயந்து தப்பினோம், பிழைத்தோம் என்று ஓடிவிட்டான். சேவகன் பின்தொடர்ந்தோடினான். மோதுண்ட காரின் முன்னுள்ள கண்ணாடி உடைந்தது. வேறு சில சித்துருப்படிகளைத் தவிர வேறு பெருஞ்சேதம் ஒன்றும் கிடையாது. இதிலிருந்து அந்த ஷிகாரி கார் ஓட்டுவதில் திறமைசாலி என்றே சொல்லவேண்டும்.

“இதற்குப் பிறகே தூத்துக்குடியை விட்டகன்ற கார் அவ்விடம் வந்து சேர்ந்திருக்கவேண்டும். வழியில் பாறையில்

தாங்கள் கொண்டுவந்திருந்த மெழுகு உருவத்தை கயிற்றினால் மரத்தில் தூக்கிவிட்டு முசாபரி பங்களாவை நோக்கிப் புறப்பட்டார்கள். மோதுண்ட காரைக் கண்டதும் அவர்களுக்குப் புதுயோசனை தோன்றியிருக்க வேண்டும். ஆதியில் நினைத்தபடி கடைசிவரை நடக்கவில்லை. பிரயோகிக்கப்பட்ட மருந்தின் குணம் மூன்று நாட்கள்வரை உண்டென் றறிவார்கள். கடத்தவேணும் என்ற எண்ணமும் வேறு சில அது போன்ற காரியங்களும் ஞாபகத்துக்கு வந்ததே தவிர முசாபரி பங்களாவில் பத்தாந்தேதிவரை தங்கத்தக்க ஏற்பாடுகள் செய்ய நேரம் வாய்த்திருக்காது. அதே சமயத்தில் பங்களாவில் சில நாட்கள் வரை பிறர் சந்தேகப் படாதவாறு அவர்களை வைத்திருக்க தைரியமில்லை. ஆகையால் மூர்ச்சித்துக் கிடந்த அம்மையாரைத் தங்கள் பொறுப்பிலிருந்து தள்ளிவிட நிச்சயித்தார்கள். அந்த காரில் டிரைவர் ஸ்தானத்தில் அவர்களை வைத்துவிட்டு காயப்பட்ட பாவனையாய் நெற்றியில் உடைந்த கண்ணாடியால் இரத்தம் வரச் செய்துவிட்டு பங்களாவுக்கு ஓடிவிட்டார்கள்.

“பரிதாபகரமான நிலைமையில் மறுநாட் காலையில் அம்மையாரைக்கண்ட பாதிரியார் தன் காரில் அவரை எடுத்துவைத்துக்கொண்டு தன்னிடத்திற்கு விரைந்து சென்றுவிட்டார். தன்னுடைய கார் டிரைவரை பின் நிறுத்தி கூடுமானால் சேதப்பட்ட காரை கொண்டுவந்து விடும்படியாகவும் ஏற்பாடு செய்தார். நான் அவர் பங்களாவை அடைந்தபோது மூர்ச்சையிலிருந்து தெளிந்தெழுந்த ஸ்ரீமதி கேசவ்ஜி “எப்பொழுது நான் எங்கள் வீட்டிற்குப் போவேன்” என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

“ஆமாம்” என்றார் இதுவரை பேசாதிருந்த தாடி ஆசாமி, (ஒரு வேளை ஜபத்திற்குப் பிறகு ‘‘ஆமென்’ சொல்லுவதாக நினைத்தாரோ என்னவோ !).

“இதோ இருக்கிறது அந்த மெழுகு உருவம்,” என்று காரில் பின்பக்கம் வைத்துக்கொண்டுவந்த பெரிய பெட்டியைத் திறந்து காண்பித்தார் துப்பறியும் நிபுணர்.

* * *

ஜெயராம் கேசவ்ஜீயின் பங்களாவில் தேர்தல் முடிவு அன்று சாயந்திரம் பாண்டு வாத்தியங்கள் முழங்கின. கார்களும் வண்டிகளும் தெருவில் அணிவகுத்து நின்றன. திரளான ஜனங்கள் அங்கு கூடியிருந்தனர். ஊரார் அனைவருக்கும் சேட்ஜி விருந்தளித்து தன் காதலியின் மீட்சியைக் கொண்டாடினர்.



சீமாட்டி கார்த்தியாயினி

("ஜீவா")

நான்காவது அதிகாரம்

ஊரார் புகார்

சீமாட்டி கார்த்தியாயினி சென்னைமா நகருக்கு வந்து ஒரு வாரத்துக்கு மேலாயிற்று. திருவனந்தபுரத்துக்குப் போய்வந்த பின்னர், தமது மனைவியிடம் ஏதோ ஒருவித மாறுதல் ஏற்பட்டிருப்பதை, திவான் பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை ஒருவாறு உணர்ந்தார். ஆனால் அது எவ்விதமான மாறுதல் என்பதை அவரால் திட்டமாக அறிந்து கொள்ள முடியவில்லை. கார்த்தியாயினி முன்போல் உல்லாசமாகப் பொழுது போக்குவதை அவ்வளவாக விரும்பாமலிருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியங்கொண்டார். அவளைப் பழையபடி குதூகலமாக இருக்கும்படி செய்ய அவர் பெரிதும் முயன்றார். ஒரு மங்கை தன் உள்ளத்தில் பொதிந்திருக்கும் விஷயங்களைத் திறந்து கூறினாலன்றி, அவளது மனநிலைமையை உள்ளபடியறிய யாரால் முடியும்!

ஒருநாள் காலை 10-மணிக்குக் கார்த்தியாயினி மேன்மாடியிலுள்ள தன் அறையில் அமர்ந்து ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தாள். இச் சமயத்தில், இவளது அருமை மைந்தன் அம்பிகாபதி, "அம்மா! அம்மா!!—எங்கே அம்மா இருக்கே!" என்று குதலைமொழியால் கூப்பிட்டுக் கொண்டே தளர்நடை நடந்து ஓடி வந்தான். அவனுக்கு வயது ஆறுதான் இருக்கும். அவன் மீது கார்த்தியாயினிக்கு அளவு கடந்த அன்பு. தான் பெற்ற பிள்ளைகளிடத்தில்—அதுவும் தன் குடும்பம் தழைத்தற்குரிய ஒரு மகனாய் இருந்தால், அப் பிள்ளையிடத்தில்—தாய்க்குப் பேரன்பு இருப்பது இயற்கையே. என்றாலும், கார்த்தியாயினி அம்பிகாபதியிடத்தில் வைத்திருக்கும் அன்பு உவமைக்கு மெட்டாததாகும். அவள் தன் மகன்பால் தன் ஆருயிரையே வைத்திருந்தாளென்றால், அது மிகையாகாது.

அம்பிகாபதியின் மழலை ததும்பிய இனிய மெல்லிய குரலைக் கேட்டாளோ இல்லையோ, கார்த்தியாயினி தன் சிந்தனையையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு ஓடோடியுஞ் சென்று அச் சிறுவனை வாரியெடுத்தாள். ஆர்வத்தோடு அவனை மார்

புறத் தழுவிக்கொண்டாள். முகத்தோடு முகத்தைப் பொருத்தி மகிழ்ந்தாள். அவனது சிவந்த அதரங்களில் முத்தமாரி பொழிந்தாள். உச்சிமோந்து அவனைக் கீழே விட்டாள். அவளது அழகிய வதனத்தில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. அம்பிகாபதி கார்த்தியாயினியின் கால்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான்.

"கண்ணே! அம்பிகா! இந்நேரம் எங்கே போயிருந்தாய்?" என்று அன்பு ததும்ப கேட்டவண்ணம் கார்த்தியாயினி அம்பிகாபதியைத் தூக்கிப் பஞ்சணை மீது உட்கார வைத்தாள்.

அம்பிகாபதி குமுதமலர் போன்ற வாயைத் திறந்து, "இல்லம்மா! அப்பாவைத் தேடிக்கினு போனேன்! அவ ரூமிலெ யாரோ வந்து உட்காந்துக்கினு அப்பாவோட பேசிக்கிண்டிருந்தா. பாத்துட்டு வந்துட்டேம்மா!" என்று குழறிக் குழறிப் பேசினான். அருமந்த மகனது இளமை யழகைத் தன்னிரு கண்களாலும் அப்படியே பருகி விடுபவள்போல் ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டிருந்த கார்த்தியாயினி அம்பிகாபதி பேசும்போது வாயிதழ் துடிக்கும் அழகையும், கன்னங்களில் குழிவிழும் அழகையும் கண்டு மகிழ்ச்சியால் குழந்தையை மீண்டும் சேர்த்தணைத்துக்கொண்டு மெய்ம்மறந்து நின்றாள்.

"சீமாட்டி! தங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது" என்று வேலைக்காரன் வெளியே இருந்து தெரிவித்த குரலொலி கார்த்தியாயினியைத் தட்டி யெழுப்பியது. அவள் உடனே அறையை விட்டு வெளிவந்து வேலைக்காரனிடமிருந்த கடிதத்தை வாங்கி அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தாள். அதைப் பிரிக்கும்போதே அது திருவனந்தபுரத்திலுள்ள தன் சகோதரரிட மிருந்து வந்திருக்கிறதென அறிந்து கொண்டாள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

அன்புமிக்க சகோதரிக்கு,

நலம். அங்கு எல்லாருடைய நலத்தையும் அறிய ஆவலுடையவனா யிருக்கிறேன். நீ திடீரென்று ஊருக்குப் புறப்பட்டுச் சென்றதைப்பற்றி எல்லோருக்கும் வருத்தமே. இவ்விதம் எங்களை மனம் வருந்த செய்துவிட்டுச் சென்ற உனக்குத் தண்டனையாக ஒரு சந்தோஷச் செய்தியைக் கூறப் போகிறேன். நமது தேவகியை நாராயண மேனனுக்கு விவாகஞ் செய்துவைக்க ஏற்பாடாகி யிருக்கிறது. தேவகி நாராயணமேனனை விவாகஞ் செய்துகொள்ள விரும்புவதாகக் கூறிய பிறகே, நான் இவ்விதம் முடிவு செய்தேன். ஆனால் தேவகி நாராயணமேனனைக் காதலனாகத் தேர்ந்தெடுத்ததில் எனக்கு அவ்வளவாக விருப்பமில்லை. சிவசைலத்துக்கு அவளை மணஞ்செய்து தர நான் எண்ணியிருந்தேன். (நானறிந்த வரையில், தேவகியும் சிவசைலத்தைத் தான் காதலித்து வந்தாள். அவளது மனமாற்றத்துக்குக் காரணமென்னவோ தெரியவில்லை.) இருந்தாலும், தேவகி இப்போது நாராயணனைக் கணவனாக அடைய விழைவதால், அவளது உரிமையைப் பறிக்க முயலவில்லை. ஆனால், இவ் விவாகம் திருவனந்தபுரத்தில் உத்தியோக முறையில் மிகவும் குதூகலமாக வரவேற்கப்படும்.

தேவகி நாராயணமேனனைத் திருமணஞ் செய்துகொள்ளும் விஷயத்தில் உனக்கு மனப்பூர்வமாகச் சம்மத மிருக்குமென நம்புகிறேன். ஏனென்றால், மேனனை நீ நேரே பார்த்திருப்பதால், அவன் போக்கைக் கவனித்திருப்பாய். அவன் நற்குணமும், திறமையும் வாய்ந்தவன். சிவசைலத்தை நோக்க அவன் அவ்வளவு கூர்த்த மதியும், ஆற்றலும் உடையவனல்லன் என்பதே என்னுடைய கருத்து.

மைத்துனருக்கும் இது சம்பந்தமாக ஒரு கடித மெழுதி யிருக்கிறேன். அவருடைய அபிப்பிராயத்தையும் உடனே தெரிவிக்க வேண்டுகிறேன்.

அதுவன்றி, இவ் விவாக வேற்பாடு முடிவானால், விவாகத்தைச் சென்னையிலேயே சிறப்பாக நடத்த வேண்டுமென நினைக்கிறேன். அதற்கான ஏற்பாடுகளை

மைத்துனரும் நீயுந்தான் கவனித்துக் கொள்ளவேண்டும். விவாகத்தை விமரிசையாக நடத்தி வைக்கும் பொறுப்பு உங்களிருவரிடத்திலுந்தான் இருக்கிறது. உங்கள் அபிப்பிராயந் தெரிந்ததும் நமது சிவசைலத்தை உங்கள்பால் அனுப்பி வைக்கிறேன். விவாகத்துக்குரிய முன்னேற்பாடுகளைச் செய்யும் விஷயத்தில் எனக்குப் பிரதிநிதியாக இவன் இருந்து, உங்களுக்கு உதவியாக இருப்பான்.

உத்தியோக தோரணையில் எனக்கு அலுவல் அதிகமாயிருப்பதால், நான் அதிக ரஜா எடுத்துக்கொள்ள முடியாது. விவாகத்துக்கு ஒரு வாரத்திற்கு முன் நான் வந்து காரியங்களில் கலந்து கொள்கிறேன்.

எல்லா விஷயங்களுக்கும் உடனே பதிலை எதிர் பார்க்கிறேன்.

அன்புமிக்க சகோதரன்
பரமேஸ்வரன்.

இதைப்படித்து முடித்ததும் கார்த்தியாயினி பெருமூச்சு விட்டாள். "நான் எதிர்பார்த்தபடியே யாயிற்று.—தேவகிக்கு என்ன ஆத்திரம்! என்ன பதைப்பு! சிவசைலத்தைச் சரியானபடி பழி வாங்கி விட்டாள்.—ஆமாம்.சிவசைலத்தை இங்கு ஏன் அனுப்பவேண்டும்?—அவனை என் கவனத்தினின்றும் மறக்கடிக்க வேண்டுமென்று முயன்று கொண்டிருந்தால், என் சகோதரர் அவனை இங்கு அனுப்புகிறாரே! என்ன தர்ம சங்கடம்!" என்று முணுமுணுத்துக்கொண்டே, கீழே இறங்கினாள். அம்பிகாபதியும் பஞ்சணையை விட்டுக் குதித்து, "அம்மா! அம்மா! என்னைவிட்டுப் போயிடறையா!" என்று கூறிக்கொண்டே அவளது சேலை முந்தானையைப் பிடித்துக்கொண்டு பின் தொடர்ந்தான்.

• • •

அடையாற்றில் ஒரு பெரிய பங்களா. செடி, கொடி, மரங்கள் செழித்து வளர்ந்து பங்களாவுக்குக் குளிர்ச்சியைத் தந்து கொண்டிருந்தன. சுற்றிலும் உயர்ந்த மதில்கள் அப் பங்களாவை அரண் செய்து நின்றன. பங்களா வாயிலில் ஒரு பெரிய பந்தல் போடப் பட்டிருந்தது. அப் பந்தல் வெள்ளைத் துணியால் மறைக்கப் பட்டிருந்தது. அதன் ஓரத்திலும், இடையிடையேயும் சிவப்பு, மஞ்சள் வர்ணத் துணிகளால் சித்திர வேலைப்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. ஒவ்வொரு கம்பத்திலும் தென்னம் ஓலைகள் பின்னப் பட்டிருந்ததோடு, வாழை, கமுகு மரங்கள் குலைகளோடு கட்டப்பட்டிருந்தன. அதுவன்றி, தோரணங்கள் தொங்கி விடப்பட்டிருந்தன. ஏற்கனவே, இயற்கையழகு தாண்டவம் புரிந்து கொண்டிருந்த அப் பங்களா இவ்வித செயற்கை யழகாலும் சிறந்து விளங்கியது. பங்களாவுக்கு வெளியே ஏராளமான மோட்டார்கார்களும், கோச்சு வண்டி முதலியவைகளும் வந்து நிறைந்திருந்தன. உள்ளே நவீன பாண்டு வாத்தியமும், நாதஸ்வர வாத்தியமும் சங்கீதத் தேனை வாரி வாரி இறைத்து மக்களின் செவிகளுக்குச் சங்கீத விருந்தளித்துக் கொண்டிருந்தன. ஆண்களும், பெண்களும் அணியணியாக உள்ளே போவதும் வருவதுமா யிருந்தனர்.

இப் பங்களா யாருடையது? இதில் என்ன விசேஷம் நடை பெறுகிறது? என்ற வினா வாசகர்களே! உங்கள் மனதில் எழுவது இயற்கையே. இது திவான் பகதூர் காந்திமதி நாதம் பிள்ளை வாசஞ் செய்யும் பங்களா வென்பதும், இதில் தேவகிக்கும் நாராயண மேனனுக்கும் விவாக வைபவம் விமரிசையாக நடைபெறுகின்ற தென்பதும் விவரிக்காமலே தெரிந்து கொள்ளலாம்.

மாளிகையி னுள்ளே செல்வோம். கூடமும், தாழ்வாரமும் விசாலமாக இருந்தது. இரு பக்கங்களிலு முள்ள கூடங்களில் ஒரு புறத்தில் சீமான்களும், கனவான்களும், மற்றொரு புறத்தில் சீமாட்டிகளும், இள மங்கையரும் இரத்தின கம்பளத்தின் மீது உட்கார்ந்திருந்தனர். சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்களும், குறிப்பிடத்தக்க ஒரு சில கனவான்களும்

மட்டும் கூடத்தில் சுவற்றோரத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். ஸர் பாமேஸ்வரன் பிள்ளையும், திவான் பகதூர் காந்திமதி நாதம் பிள்ளையும் விஜயஞ் செய்யுங் கனவான்களை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தனர். விஜயஞ் செய்திருந்தவர்களில் பெரும்பாலார் 'ஹாட்டும் பூட்டும்' அணிந்து வந்திருந்தார்கள் ஆதலால் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தவர்கள் தவிர மற்றவர்கள் 'சாக்ஸ்' தரித்த கால்களைச் சிரமத்தோடு மடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. சிவசைலம் இப்படியும் அப்படியுமாக ஓடியவண்ணம் விவாக சடங்குக் குரிய காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மாதர் வரிசையில் கார்த்தியாயினி இன் முகத்தோடு யாவரையும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தாள். ஸர். பாமேஸ்வரன் பிள்ளையின் மனைவியான கமலாதேவியோ விவாகத்துக்கு வந்திருக்கும் பெண்மணிகளோடு தானொருத்தி போலிருந்தாளே யொழிய, மற்றெக் காரியத்திலும் முக்கியத்வத்தை வகிக்க முன் வரவில்லை. அவளிடம் வலிய வந்து பேசும் சீமாட்டிகளோடும், மங்கையரோடும் மட்டுமே உரையாடிக் கொண்டிருந்தாள். அவளது அமைதியான தன்மையும், உயர்ந்த தகுதியிலிருந்தும் அகம்பாவ மில்லாது அடக்கமாயிருக்கும் இயல்பும் பணச் செருக்கினால் தலைகால் தெரியாது ஆடித் திரியும் சீமாட்டிகளுக்கும், செல்வக் குமரிகளுக்கும் விபரீதமாகத் தோன்றியது. அவர்களில் சிலர் மறைமுகமாக அவளைக் கேலிகூடச் செய்யலாயினர். அவர்கள் நினைவில் கமலாதேவி பட்டிக்காட்டுப் பெண்ணாகவும், அசட்டுத்தனம் நிறைந்த மங்கையாகவுமே கருதப்பட்டாள். ஒரு சில மகளிரே, அவளது அடக்க வொடுக்கத்தையும், நற்குணஞ் செயல்களையும் பாராட்டினர்.

அவ்வுயர் குடும்ப விவாக வைபவத்தில் விஜயஞ் செய்திருந்த சீமான்களும், கனவான்களும் எவ்வளவு ஆடம்பரமாகவும், நாகரிகமாகவும் ஆடையுடுத்தி வந்திருந்தாலும், அவர்களுடைய தோற்றங்களில் அவ்வளவாக வித்தியாசங் காணப்படவில்லை. பெண்கள் வரிசையிலோ உலகில் எத்தனை விதமான நிறங்களுண்டோ அத்தனை நிறங்களாலும், பளபளப்பான பூவேலைப்பாடமைந்த பட்டு வகைகளாலும், தகதகாயமான சரிகைகளாலும் ஆன ஆடைகளையும், நவநவமான நகைகளையும் அப்பெண்மணிகள் அணிந்திருந்தது எப்பேர்ப்பட்டவர்கள் மனதையுங் கவர்ச்சியுறச் செய்யக் கூடியதாயிருந்தது. சேலைகளில் பொருந்தியிருந்த சரிகைகளின் பளபளப்பும், வைர நகைகளின் ஜொலிப்பும் ஆடவர் கண்களைப் பறித்தன. இப்பேர்ப்பட்ட மங்கையர் கூட்டத்தில் பழைய கோள நாட்டுச் சம்பிரதாயப்படி வெள்ளை முண்டு கட்டிய பெண்மணிகளும் கலந்திருந்தது வேடிக்கையை விளைத்தது. நாராயண மேனன் தேவகியைப் போல் வேளாள குலத்தைச் சேர்ந்தவனுயிருந்தாலும், அவன் பழக்க வழக்கங்களில் தமிழ் நாட்டோடு பெரிதும் வேறுபாடுடைய மலையாள நாட்டில் பிறந்தவனுதலால், இப்புது சம்பந்தத்தில் பாமேஸ்வரன் பிள்ளை உறவினர்களுக்குச் சிறிதும் பிடித்தமில்லை. இருந்தாலும் பெரிய இடத்து விஷயமாதலால், அவர்கள் வாய் திறக்க அஞ்சினர்.

தாழ்வாரத்தின் நடுவில் மணப்பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அது மிக அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. மணமக்கள் மகிழ்ச்சியே வடிவாக மண அறையில் அமர்ந்திருந்தனர். திருமணச் சடங்கு தமிழ் முறைப்படியே நடத்தப்பட்டது. நாராயண மேனன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தேவகி, ஏதோ காரியமாக குறுக்கும் நெடுக்குஞ் சென்று கொண்டிருக்கும் சிவசைலத்தைக் காணும்போ தெல்லாம் பெருமித உணர்ச்சியோடு தோன்றினாள். அவள் அவனை அலட்சியமாகப் பார்த்த பார்வை, "என்னை அசட்டை செய்த உன்னைப் பழிக்குப் பழி வாங்கிவிட்டேன்; பார்த்தாயா!" எனக் கூறுவது போலிருந்தது.

சிவசைலமோ தேவகியை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. அவன் ஸர். பரமேஸ்வான் பிள்ளையின் கட்டளைப்படி, இவ்விவாகத்திற்குரிய ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறானாயினும், அவன் இவ்வளவு சிரத்தையாகவும் பரபரப்பாகவும் வேலை செய்வதெல்லாம் கார்த்தியாயினி தன்னை மதிக்க வேண்டுமென்னும் ஒரே குறிக்கோளோடேயாகும். அவன் ஏதோ ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு அடிக்கடி கார்த்தியாயினி இருக்குமிடஞ்சென்று பேசுவதும், எதை யெதை எவ்விதஞ் செய்ய வேண்டுமென்று கலந்து ஆலோசிக்க சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும் அறைக்கு அவளோடு செல்வதுமா யிருந்தான். கார்த்தியாயினி மிகவும் சகஜமாகவும், தாராள போக்குடனுமே அவனுடன் நடந்து கொண்டாள்.

இவர்கள் இவ்விதம் நெருங்கிப் பழகுவது அங்கு விஜயஞ் செய்திருந்தவர்கள் பலரது கவனங்களை ஈர்த்தது. மங்கையர் கூட்டத்தில் இது சம்பந்தமாக வம்பளப்பு அதிகமாயிற்று. அக்கூட்டத்திலிருந்த ஒரு பெண்மணி தன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் மற்றொரு நங்கையை நோக்கி, "அடி தாக்ஷாயணி! பார்த்தாயா இந்த கொள்ளையை! இந்த வெட்கக்கேட்டை என்னென்று சொல்வதடி! இவ்வளவுபேர் இங்கே இருக்கிறார்களே யென்றுகூட அச்சமில்லாமல், அந்தப் பயல் கார்த்தியாயினியோடு எவ்வளவு நெருக்கமாய் நின்று பேசிக்கொண்டிருக்கிறான்! பார்த்தாயா!" என்று கூறி

முகத்தை நாலு கோணலாய் வைத்த வண்ணம் கூறினாள்.

காமாட்சி:—(பதட்டமாய்) தாலி கட்டின புருஷன்கூட அன்னியர் முன்னிலையில் அவ்வளவு தாராளமாய் பழக மாட்டான்.

தாக்ஷாயணி:—இந்திரா! லட்சுமி கூட இவர்களது கோலாகலத்தைப்பற்றி இரண்டு நாட்களுக்கு முன் என்னிடங் கூறினாள். அப்போது நான் இதைச் சிறிதும் நம்பவேயில்லை. ஏதோ வம்பளக்கிறாள் என அவளை வைதுகூட அனுப்பி விட்டேன். இப்போது நேரில் கண்ட பிறகல்லவா விஷயம் தெரிந்தது! என்ன அக்கிரமம் இது! (பெருமூச்சு விடுகிறாள்.)

சூடாமணி:—(குறும்பாக) பாவம். தாக்ஷாயணிக்கு விஷயம் இப்போதுதான் தெரிந்ததுபோலும்! இவர்களது களியாட்டம் ஒரு மாதமாக ஊர் சிரிக்கிறது. இவளுக்கு இதுவரை தெரியாதாம். கிணற்றுத்தவளை யென்றால் இவளுக்குத்தான் தகும்.

இந்திராணி:—நானும் அதல்லவோ சொல்ல வந்தேன்! இவன் திருவாங்கூரில் கார்த்தியாயினியின் சகோதரன் கீழ் வேலை பார்ப்பவனாம். இவ் விவாக சம்பந்தமான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக ஒரு மாதத்துக்கு முன்பாகவே இங்கு அனுப்பி வைக்கப் பட்டானாம். இவ் விவாகத்துக்குரிய சாமான்களையும், மற்றும் விலையுயர்ந்த நகைகள், ஜவுளிகளையும் வாங்கும் பொருட்டு, இவனும் கார்த்தியாயினியும் அடிக்கடி பல இடங்களுக்கும் போய்வந்து கொண்டிருந்தார்களாம். இவர்கள் பழகும் மாதிரியைப் பார்த்தவர்களுக்கு இவர்களது நடவடிக்கைகளில் சந்தேக மேற்படுவது இயற்கை தானே!

சூடாமணி:—கார்த்தியாயினி சில மாதங்களுக்கு முன் திருவனந்தபுரத்துக்குப் போயிருந்தாளே! அங்கேயே இவர்களிருவருக்கும் சிநேகம் ஏற்பட்டிருக்குமென நினைக்கிறேன்.

நீலாவதி:—என்ன இருந்தாலும் முன் பின் பறியாத விட புருஷனொருவனோடு தகாத முறையில் நட்பு கொண்டிருப்பது கார்த்தியாயினியின் தகுதிக்குச் சிறிதும் ஏற்றதில்லை.

தாக்ஷாயணி:—ஆமாம். மந்திரி தன் மனைவி வேறொரு ஆடவனோடு இவ்வாறு பழகுவதைப்பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லையா! அல்லது கவனிக்கவில்லையா?

சூடாமணி:— பாவம். அவருக்கு இதை யெல்லாம் கவனிக்க அவகாசமேது? அரசாங்க சம்பந்தமான வேலைகளைக் கவனிப்பதற்கே அவருக்குப் பொழுது அகப்படவில்லை.—அதனால் தான் கார்த்தியாயினி தன் மனம் போனபடியெல்லாம் கூத்தாடுகிறாள்.

லக்ஷ்மி (இளம் பெண்):—கள்ளங் கபடறியாத அந்த சீமாட்டியம்மாள் மீது அவதூறுகளைச் சொல்லிப் பாவத்தைக் கட்டிக் கொள்ளாதீர்களம்மா! ஒரு ஆடவனோடு பெண்ணொருத்தி சாதாரணமாகப் பேசினாலே, கதை கட்டி விடும் வழக்கம் இன்னும் நம் சமூகத்தை விட்டுப் போகவில்லையே!—நீங்கள் இவ்வாறு வீண் வம்பளப்பதை யாராகிலுங் கவனித்தால்—அல்லது—அவர்கள் காதுகளுக்கே எட்டிவிட்டால் பிரமாத கலகம் ஏற்பட்டு விடும். ஜாக்கிரதை! இத்தோடு அவ் விஷயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுங்கள்.

இந்திராணி:—(கோபத்தோடு) சரி தாண்டி, வாயை யடக்கு. எங்களுக்கு யோசனை சொல்ல வந்து விட்டாள். இந்த மாதிரி மொட்டைச் சிறுக்கிகளால் தான் உலகம் கெட்டு விடுகிறது. இவ் விஷயம் அவர்கள் காதுகளுக்கு எட்டினால் என்ன! தலை போய் விடுமா!—கார்த்திமதி நாதம் எனக்கு அம்மான் மகனாக வேண்டும். அவனிடம் அவன் பெண்டாட்டியின் லட்சணத்தைச் சொல்லத்தான் போகிறேன்.—இவளை அவனுக்குக் கட்டும் போதே சொன்னோம். அந்த மலையாளத்து சிறுக்கியின் (கேரள நாட்டிலேயே குடியேறி விட்டார்களாகையால் அக் கருத்தில்) சம்பந்தமே வேண்டா

மென்று. பிள்ளையாண்டான் அவள் அழகில் மயங்கிப் போயிருந்தானாகையால் அவளைத் தான் கட்டிக் கொள்வேன் என்று பிடிவாதம் செய்தான். அவனது பெற்றோரும், என் தாய் தந்தையரும் எவ்வளவோ பாடு பட்டார்கள் என்னை அவனுக்குக் கொடுக்க வேண்டு மென்று. நான் ஸ்தூலமாகவும், மாநிறமாகவும் இருந்ததால் அவன் கண்ணுக்குப் பிடிக்கவில்லையாம். கரும்பூத மென்று அவன் என்னைக் கேலி செய்ததோடு என்னைக் கலியாணஞ் செய்து வைத்தால், உடனே தற்கொலைசெய்து கொள்வதாகவுங் கூறினான். அவன் கட்டிக் கொள்ளாததனால் நான் என்ன கெட்டா போய்விட்டேன்?— இப்போது அவனது சுந்தரியின் ஒழுங்கைச் சொல்லி முகத்தில் இடிக்கிறேன். அவன் மந்திரியாயிருந்தால் எனக்கென்ன பயமா?-அவன் தனியாகத்தான் நின்றிருக்கிறான். இதோ போய் அவனிடம் எல்லாவற்றையுங் கூறுகிறேன்" என்று கூறிய வண்ணம் எழுந்து நடந்தாள்.

(தொடரும்.)

நீங்கள் மாதம் 1-க்கு ரூ. 15 முதல் ரூ. 150 வரையில் சுலபமாக சம்பாதிக்க வேண்டுமா ?

பிரசண்ட விகடனை மாத மிருமுறை வெளியீடு) சுமார் 400 ஏஜண்டுகள் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களில் விற்று வருகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் மாதம் 1-க்கு ரூபாய் 15 முதல் 150 வரையில் கமிஷனாகவும் சம்பளமாகவும் பெற்று வருகிறார்கள். சிரமப்பட்டு விற்பவர்களுக்கு நல்ல லாபம். விபரமான ஏஜன்ஸி ரூல்ஸுக்கு எங்கள் காரியாலயத்திற்கு இன்றே எழுதுங்கள். கீழ்க்கண்ட இடங்களுக்கு அவசரமாக ஏஜண்டுகள் தேவை.

1. கடலூர்	15. அம்மாப்பேட்டை	29. திருச்செந்தூர்
2. சிதம்பரம்	16. தரங்கம்பாடி	30. ராஜப்பாளையம்
3. விருத்தாசலம்	17. நன்னிலம்	31. சங்கரநாயினார்கோயில்
4. மதுராந்தகம்	18. ராமநாதபுரம்	32. மானாமதுரை
5. திண்டிவனம்	19. விருதுநகர்	33. கிருஷ்ணகிரி
6. திருக்கோயிலூ	20. ராமேஸ்வரம்	34. திருப்பத்தூர்
7. தஞ்சாவூர்	21. திருவனந்தபுரம்	35. திருப்பூர்
8. வேதாரண்யம்	22. மணப்பாறை	36. ஆத்தூர்
9. நீடாமங்கலம்	23. கொடைக்கானல்	37. சின்ன சேலம்
10. மன்னார்குடி	24. பரமக்குடி	38. கூனூர்
11. சீகாழி	25. திருமங்கலம்	39. திருச்சூர்
12. திருவிடைமருதூர்	26. அம்பாசமுத்திரம்	40. திண்டுக்கல்
13. பேரளம்	27. ஸ்ரீவைகுண்டம்	
14. முத்துப்பேட்டை	28. ஆறுமுகனேரி	

மானேஜர், பிரசண்ட விகடன் ஆபீஸ்,

6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.



மாயக்காரி அல்லது சுருட்டு மர்மம்

(எஸ். கே. கணேசன்.)

ஸ்டேஷனிலுள்ள உத்யோகஸ்தர்களையும், ஜனங்களையும் பார்த்துப் பரிகசித்துச் செல்வதே போல் 'திருச்சி பாசஞ்சர்' திட்டை ப்ளாட்பாரத்தை விட்டு ஊதிக் கொண்டே சென்றது.

வண்டி நகர்ந்த பின்னரே இரண்டாம் வகுப்பு வண்டியொன்றில் பாய்ந்து ஓடிவந்து ஏறிக் கொண்ட ஓர் யௌவன மங்கை சுற்று முற்றும் பார்த்து விழித்துக் கொண்டிருந்தாள். அந்த இரண்டாம் வண்டி முழுதும் ஒரு முறை கவனித்து, பிரபு போல் காணப்பட்ட ஒருவரைத் தவிர வேறு ஒருவரும் இல்லையென்பதை உணர்ந்ததும் திருப்தியடைந்து அம் மனிதரின் பக்கத்தில் சென்று அமர்ந்தாள். அம் மங்கை வண்டியி லேறியதையே கவனியாமல் கருத்து முழுவதையும் 'பிரசண்ட விகடனிலே'யே செலுத்திக் கொண்டிருந்தவர், யாரோ ஒருவர் பக்கத்தில் உட்காரவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். அப் பெண்ணோ இவர் பார்வையை சட்டை செய்யாது 'ஸ்' 'ஸ்' என்று ஆசுவாசப் படுத்திக் கொண்டிருந்தாள். இதைக் கண்ட பிரபு அம் மங்கையோடு தனித்திருப்பது பழிப்புக்கிடமாகுமென்று நினைத்து வேறு அறைக்குச் செல்ல எழுந்தார். அதை யூகித்துக் கொண்ட அம் மங்கை 'வேண்டாம்! எனக்காக நீங்கள் போவதை விட நானே போய் விடுகிறேன்' என்று அவளும் எழவே, 'வேண்டாம்' என்று பிரபு உட்கார பெண்ணும் உட்கார்ந்து கொண்டாள்.

பழையபடி, கருணாகார் (பிரபுவின் பெயர்) பத்திரிகையைப் படித்துக் கொண்டேயிருந்தார். ஆனால் அம் மங்கை கருணாகரையே உற்றுக் கவனித்தவா திருந்தாள்.

சிறிது நேரத்தில் பத்திரிகை படித்து முடிந்து விட்டது. அதைக் கண்ட அம்

மங்கை அதை வாங்கி ஒரு தரம் இப்புறம், அப்புறம் புரட்டி விட்டு மறுபடியும் கருணாகரரையே கவனிக்கலானாள்.

ஏதோ சிந்தனையி லிருந்த பிரபு சரேலென்று ஒரு நீண்ட சுருட்டை எடுத்துப் பற்றவைக்கப் போகும் தருணம், 'அம்மா, உங்களுக்கு இதனால் தடையில்லையே ?' என்றார்.

'இல்லை. தாராளமாய்க் குடியுங்கள்' என்றாள் மங்கை.

கருணாகார் சுருட்டைப் பற்ற வைத்துப் புகையை உள்ளிழுத்து வெளி விட்டு விரல்களின் நடுவில் பிடித்துக் கொண்டு, 'அம்மா! வந்தது முதல் என்னையே விரைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே, ஏன் ?' என்றார்.

'ஏன ? எனக்கே தெரியவில்லை! ஆனால் உங்களிடம் ஒரு பொருளை உத்தேசித்தே வண்டியில் ஏறினேன்.'

'உன்னை யாரென்றே எனக்குத் தெரியாதே. அப்படி யிருக்கும் போது என்னிடம் நீ வேண்டுவ தென்ன'.

'ஆம்! உங்களுக்கு என்னைத் தெரியாது. ஆனால் எனக்கு உங்களைத் தெரியும்.'

'இருக்கலாம். நீ என்னிடம் வேண்டுவ தென்ன?'

'பத்து ரூபாய் பணம்!'

'பணமா ?'

'ஆம் !'

'என்னிடம் இல்லையே !'

'கொடுக்காவிடில் விட மாட்டேன்.'

'இருந்தால் தானே..........'

'பொய். உங்களிடம் இப்போது 49 ரூபாய் சில்லரை இருப்பது எனக்குத் தெரியும். நீங்கள் கொடுப்பீர்க ளென்பதும் அறிவேன். அதனாலேயே தான் இவ் வண்டியில் நான் ஏறியதும்.'

'முடியாது. நீ ஒரு வழிப்பறி மோசக்காரி. என்னைப் பயமுறுத்திப் பணம் பிடுங்கப் பார்க்கிறாய்.'

'ஆம்! நான் அவ்வாறானவளே. எனக்கே வெட்கமா யிருக்கிறது. ஆனால் பிழைப்புக்கு வேறு வழியில்லை.'

'முடியவே முடியாது. ஒரு மோசக்காரிக்கு பணம் கொடுக்க முடியாது.'

பிரபு மறுபடியும் பழைய பாடத்தை ஒப்பிக்கவே, அம் மங்கையின் கண்களில் கோபம் ஜ்வலித்தது.

'ஐயா ! இதுவரை உம்மைப் போல் எத்தனையோ பெயரிடம் பணம் பறித்திருக்கிறேன். அவர்க ளெல்லாம் என் பெண்மையில் மயங்கி வலைப்பட்டிருக்கிறார்கள். நீரும் அதுபோல் செய்து விடும். இல்லா விட்டால், உம்மை விட மாட்டேன் ; சந்தியி லிழுத்து விடுவேன்.'

இச் சமயம் வண்டி வடவாறு ஸ்டேஷனைத் தாண்டி தஞ்சையைச் சமீபித்துக் கொண்டிருந்தது.

'அடி வஞ்சகி! உன் ஜம்பம் என்னிடம் பலிக்காது. உன்னாலானதைச் செய்து கொள்' என்று சொல்லி விட்டு அமைதியாக விருந்தார்.

அப் பெண்ணின் முகத்தில் கோபமும், ஏமாற்றமும் மாறி மாறி ஜ்வலித்தன. அவரை அப்படியே எரித்து சாம்பலாக்கி விடுபவள் போல நோக்கினாள்.

'கடைசியாகக் கேட்கிறேன். பணம் கொடுப்பீரா, மாட்டீரா ? சொல்லும் சீக்கிரம் !' என்றாள்.

'முடியாது.'

மனத்தி லெழுந்த கோபத்துடன் அவள் திடீரென்று குதித்து எழுந்தாள். தலை மயிரைப் பிய்த்துக் கொண்டாள். ஆடை, ஆபரணங்களைக் கலைத்து அலங்கோலப்படுத்திக்கொண்டு, "ஆ.........ஊ.... ...." என்று சப்த மிட்டவளாய் அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்திழுத்தாள்.

இரயில் நின்றது. இரயில்வே கார்டும், அவ் வண்டியில் வந்த சப் இன்ஸ்பெக்டரும், கான்ஸ்டேபிளும் கீழே

குதித்து ஓடி வந்தனர். ஜனங்களும் இறங்கி கும்பல் கூடினர்.

இப் பெண்ணையும் அப்போதும் சாவதானமாக சுருட்டு பிடிக்கும் பிரபுவையும், அவர்கள் நிலைமையையும் கண்ட உத்யோகஸ்தர்கள் அப் பெண்ணை நோக்கி 'என்னம்மா நடந்தது?' என்று வினாவினர்.

எனாலும் அந்த யுவதி கண்களில் நீர் ததும்ப, 'ஐயா! இந்த மனிதன்............ ....என்னைப் பலவந்தப் படுத்தினான்.... ....' என்று புடவையால் முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள்.

அவளுடைய கோலமானது அவள் சொல்வது உண்மை போல் அவர்களுக்குத் தோன்றியது. ஆனால் கருணாகரரோ சாந்தமாக அமர்ந்திருந்தார். சப் இன்ஸ்பெக்டர் வாயில் ஜலம் ஊறியது. அவருடைய நல்ல காலம் சரியான கறவைப் பசு மாட்டிக் கொண்டது.

வண்டி தாமதமாவதால், தஞ்சை சென்று விசாரணை செய்ய வேண்டும் என்று முடிவு செய்து, அவ் வண்டியில் கான்ஸ்டேபிளை இன்ஸ்பெக்டர் காவல் போட்டு விட்டு, எல்லோரும் அவரவர் வண்டியிலேறிக் கொள்ள வண்டி புறப்பட்டு தஞ்சையை யடைந்து நின்றது.

போலீஸ் இன்ஸ்பெக்டர், கருணாகரரிடம் வந்து, 'ஐயா! இது பிரமாதமான விஷயம், இறங்கும்' என்று அவரைக் கீழே இறங்கி ரூமுக்கு வரும்படி, அழைத்தார், மரியாதையாக.

'முடியாது. விஷயம் இன்னதென்று எனக்குத் தெரியும். ஆனால் உங்களோடு நான் வருவதென்பது முடியாத காரியம்' என்றார்.

'என்ன ஐயா சொல்கிறீர். பிரபு போல் இருக்கிறீரே என்று மரியாதையைச் சிறிது கவனித்தேன். இறங்கி வருகிறீரா, கான்ஸ்டேபிளை விட்டு அழைத்துக் கொண்டு வர வேண்டுமா?'

'என்னை இன்னாரென்று நீங்கள் அறிந்து கொள்ளவில்லை.'

'நீர் யாராயிருந்தாலென்ன? இறங்கையா கீழே.'

'அப்படியா! சரி. இப்போது உமது சொல்படி நடக்கா விட்டால் எனது மானமும் போய் விடும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும், ஒரே ஒரு விஷயம் கூறுகிறேன். அதைக் கேட்டுக் கொண்டு யோசித்த பின்னர், நான், உம் கூட வரத் தடை யில்லை.'

'சொல்லும் சீக்கிரம்.'

'சரி, இன்ஸ்பெக்டர்வாள்! இந்த பெண்மணியின் தலை மயிர் பிய்ந்திருப்பதாலும், ஆடையாபரணங்கள் அலங்கோலமாயிருப்பதாலும், கண்களில் நீர் ததும்புவதாலும், அவள் கூறுவது உண்மையென்று நீங்கள் தீர்மானம் செய்து விட்டீர்களல்லவா?

'ஆம்!'

'சரி, அது உண்மைதானா என்று என்னைக் கவனியுங்கள். சலவை செய்த உடைகள் கலையவில்லை............'



'இல்லை!, நீர் உமது உடுப்புக்களைக் கழற்றி வைத்திருந்து, பிறகு உடுத்திக் கொண்டிருக்கலாம்!

'ரொம்ப சரி! அதுவும் நினைக்கக் கூடியதே! ஆனால் நான் கூறுகிறேன்.

இந்தப் பெண் ஒரு வஞ்சகி, மாயக்காரி, என்னிடம் பணம் பறிக்கப் பார்த்தாள். நான் இசையாது போகவே, இம் மாதிரி அலங்கோலப்படுத்திக் கொண்டு அபாண்டமாக என்மேல் குற்றம் சுமத்தி விட்டாள்.'

'நீர் சொல்வதை நம்ப முடியாது.... ....'

'நிரூபித்தால் ?'

'எங்கே நிரூபியும்,'

'இதோ பாருங்கள்; இதை !'

அவ் விரலின் நடுவிலிருந்து சுருட்டு விரல் வரை இரண்டங்குலத்திற்கு எரிந்துக் கொண்டே வந்த சாம்பல் கலையாமல் அப்படியே இருந்தது. !

அப்படியே திகைத்துப் போன இன்ஸ் பெக்டர், 'ஆம் ! நீர் கூறுவது சரியே ! அவளை நீர் பலவந்தப் படுத்தியிருந்தீரானால், சுருட்டின் சாம்பல் உருப்படியா யிருக்க முடியாது. எங்கே அந்தப் பெண் ? இதற்கென்ன சொல்லுகிறாளென்று கேட்போம்' என்று அவளைப் பார்க்க அவள் காண வில்லை.

'மாயக்காரி, மாயக்காரி ! என்ன தைரியம் !' என்றார் இன்ஸ்பெக்டரும் மற்றையோரும்.

அரிய பரிசு ! பெரிய பரிசு !

ரூ. 20,000. ரொக்கப் பரிசு 20,000 ரூ.

விடை மிகவும் சுலபம். எல்லா அகராதிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

1-வது பரிசு ரூபாய் 10,000. 2-வது பரிசு ரூபாய் 5000.
போனஸ் பரிசு ரூபாய் 5000.

போட்டி எண்—12.

1	— — லன்	கடவுள்
2	— த்தன்	சிவன்
3	— — பதி	சந்திரன்
4	— தலம்	கீழுலகங்களிலொன்று
5	— மன்	இயமன்
6	அம் —	தாய்
7	தெ — — ணம்	தெற்கு
8	கு — — —	சிறு பிள்ளை

முடிவு தேதி 15—6—36.

பிரவேசக் கட்டணம் விடை 1-க்கு அணா 8. ரூபா $2\frac{1}{2}$-க்கு 25 விடைகள் அனுப்பலாம். ரூபா 5-க்கு எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்து தனித் தனிக் கடிதத்தில் விடைகளை எழுதி அனுப்ப வேண்டும். 1-க்கு மேற்பட்ட விடை அனுப்புவோர் நம்பர் போட்டனுப்பவேண்டும். சீல் செய்து வைக்கப்பட்டிருக்கும் எழுத்துக்குச் சரியாய் வரும் விடைக்கு முதற் பரிசும், ஒரு தப்புள்ள விடைக்கு 2-வது பரிசும் அளிக்கப்படும். முதற்பரிசு பெற்றவருக்கு மாத்திரம் "போனஸ் பரிசு" ரூ. 5000 அளிக்கப்படும். பல சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகையும், போனஸ் பரிசும் பகிர்ந்தளிக்கப்படும். சகலத்திலும் மானேஜர் தீர்ப்பே முடிவானது. விடைகள் யாவும் M.O. ரசீதுடன் 15-6-36-க்குள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பவேண்டும். 21-6-36-க்குள் சகலருக்கும் பரிசு முடிவு தெரிவிக்கப்படும். அன்றே பரிசு ரூபாயும் அனுப்பப்படும்.

A. M. ANTONYMUTTU, General Merchant, Chunnakam P. O., CEYLON.

'சமையல் உத்யோகம்'

—(0)—

("சீனு")

கொஞ்சநாட்களாக நான் உத்யோகத்திற்காக அலைந்து கொண்டிருந்தேன். வடவேங்கடம் மூதன் தென்குமரி வரையிலுள்ள எல்லா ஆபீஸ்களிலும் பிரயத்தனம் செய்தும், ஒரு பயனுமில்லை.

ஆனால் சில நாட்களுகளுக்கு முன் தற்செயலாக எனக்கு ஒரு வேலை கிடைத்தது. அந்த உத்தியோகம் மூன்று நாட்கள்தான் பார்த்தேன். வேறொன்றுமில்லை, என்னுடைய மாமா வீட்டிற்குப்போயிருந்ததில் சமையல் உத்யோகம் கிடைத்தது.

"இன்று சமையலுக்கு என்ன செய்வது? ஓட்டலிலிருந்துதான் வரவழைக்க வேண்டும்" என்றார் மாமா.

"நான் சமைக்கிறேன், அப்பா!" என்று சொன்னாள் என்னுடைய ஒன்பது வயதுடைய அம்மங்காள் பாலா. அவளால் சமைக்க முடியாதென்று சொன்னதின் பேரில் நானே சமைப்பதாகத் தீர்மானித்தேன். அப்பொழுது காலை மணி 7 இருக்கும்.

படித்துக் கொண்டிருந்த பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு அவசர அவசரமாகச் சென்று கிணற்றில் ஸ்நானம் செய்து பட்டைபட்டையாக விபூதி அணிந்து இடுப்பில் ஒரு சிறு சவுக்கத்தைக் கட்டிக்கொண்டு, "அம்மாமி என்ன சமையல் பண்ணவேண்டும்!" என்று கேட்டேன்.

"ஒருபடி வெங்கலப்பானையை வைத்துச் சாதம் வடி. சேப்பங்குழம்பு பண்ணு. சமைக்கத் தெரியுமோல்லியோ................ ....வாழைக்காய் கரி பண்ணு; போரும். வேறொன்றும் வேண்டாம்" என்று பதில் கிடைத்தது.

"சமைக்கத் தெரியாமலென்ன. நன்றாய்த் தெரியும்" என்று சொல்லிக் கொண்டே சிமிணி விளக்கை ஏற்றினேன். விளக்கில் கொஞ்சம் எண்ணெயைக்கொட்டி பற்றவைத்தேன். விறகுகள் மூண்டன.

பாலா பாத்திரம் எடுத்துக் கொடுத்தாள். பானையில் நீரும், ஒருபடி அரிசியும் கலந்து அடுப்பில் வைத்தேன். சிறிது நேரம் கழித்து பாலா எட்டிப் பார்த்துவிட்டு, "வெங்கலப் பானையிலே தண்ணியே இல்லையே" என்று சத்தமிட்டாள்.

"உனக்கென்ன தெரியும், எல்லாம் இருக்கு" என்று சொல்லிக் கொண்டே விளக்கைத் தூக்கி உள்ளேபார்த்தேன். கொஞ்சம் சிமிணி எண்ணெ சிந்தியிருப்பது போல் தோன்றிற்று. பிறகு தோண்டியி லிருந்த தண்ணீரை பானையில் கொட்டினேன். உடனே அடுப்பு என்னமோ அணைந்துபோய் விட்டது.

விறகு பற்றிக் கொள்ளவில்லை. சிமிணியை விறகின் அடியிலேயே வைத்தேன். சிறிது நேரத்திற் கெல்லாம் கஞ்சியை வடித்து சோற்றைக் கீழே இறக்கிவைத்தேன்.

மிளகாய்ப் பொடி, கரைத்த புளித் தண்ணீர், சேப்பங் கிழங்கு எல்லாவற்றையும் கல் சட்டியில் இட்டு அடுப்பில் வைத்தேன். அடுப்பு நன்றாய் எரிந்தது.

'அடடா, உப்புப் போடவில்லையே' என்றெண்ணி உப்புப் பாண்டத்தில் கையைவிட்டேன். அவ்வளவுதான், "அம்மா, அம்மா, அத்தான் பத்துக் கையோடே எல்லாத்தையும் தொடரான்" என்று ஆரம்பித்தாள் பாலா. காதைப் பிடித்துத் தூக்கிக் கொண்டுபோய் வெளியே விட்டுவரலாமென்று தோன்றிற்று. ஆனால்...............?

அதற்குள் புழக்கடையி லிருந்து "ஏண்டா குழந்தை, பத்துக்கையாலே எதைத் தொட்டே!" என்று கூச்சலிட்டாள் அம்மாள்.

"ஒன்றுமில்லை. பாலா....................." என்றேன்.

"பொய் சொல்றாடியம்மா; நான் பாத்துண்டு இருந்தேன். எ..................எ.............................." என்றாள் பாலா. நான் அவளைப் பேசவிடவில்லை. உள்ளேயிருந்த கற்கண்டுக் கட்டியை அவளிடம் கொடுத்துவிட்டேன். பின்னர் மற்றவையெல்லாம் ஒழுங்காகத்தான் ஆயிற்று என்றுதான் சொல்வேன். சமையல் பதினொரு மணிக்குள் முடிந்தது.

MAHAMA... LIBRARY DR. U. V. ... BESANT N... MADRAS-90

இலையைப் போட்டுக்கொண்டு நானும் மாமாவும் உட்கார்ந்தோம்; பாலா பரிமாறினாள்.

சாதம் ஒரு வாசனையுடனிருந்த தென்னவோ உண்மைதான். அதற்காக மாமா, "சாதத்தில் மண்ணெண்ணெ கொட்டினாப் போலிருக்கு, அரிசி யரிசியா யிருக்கு. கரி பச்சையா யிருக்கு. சேப்பங்கிழங்கு வேகல்லே.................." என்று சாமாரியாய்ச் சொல்லிக் கொண்டே போனார்.

"ஏதோ குழந்தை சமைத்தால் சாப்பிட்டுப் போகாதே. தினப்படி சொல்றாப்பலே அது வேகல்லே, இது வெந்திருக்குன்னு சொல்லிண்டிருப்பானே; பேசாமே சாப்பிட்டு வழக்கமா யிருந்தாத்தானே" என்று ஒரு அசரீரிவாக்கு எங்கள் காதில் விழுந்தது. மாமா வாய் திறக்கவில்லை. நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை.

என்னுடைய சமையல் நன்றாய்த்தான் இருந்ததென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். சோற்றில் கொஞ்சம் சிமினி எண்ணெ இருந்தாலென்ன? ஜீரணத்திற்கு வேண்டிய 'ஹீட் எனர்ஜி'யைக் கொடுத்து விடுமல்லவா? காய்கறி முதலியவற்றையெல்லாம் நன்றாய் வேகவைத்து விட்டால் "வைடமின்க" ளெல்லால் ஓடிவிடுகின்றன வல்லவா? இதெல்லாம் என் மாமாவுக்குத் தெரியாது சுத்தக் கர்நாடகம்!

உபா:—டேய், கிட்டு, இங்கிலீஷில் பிரஸித்திபெற்ற வித்வான்களை, தமிழில் சொல்லு? முதலில் அவர்களில் ஒருவர் பெயரைச் சொல்லு?

கிட்டு:—ஸார்! சேஷப்பய்யர் இருந்தா ரோல்யோ அவர்தான் ரொம்ப கெட்டிக்காரர்.

உபா:—சேஷமாவது அய்யராவதுடா?

கிட்டு:—இல்லை ஸார், தமிழில் சொல்லச் சொன்னீர்கள் (Shakespeare) ஷேக்ஸ்பியருக்கு, சேஷப்பய்யர் என்று நான் தமிழ்ப் படுத்தினேன்.

மோஹன சந்திரா

—:(o):—

('வசீகரன்.')

டாக்டர் சங்கரைய்யா அவருடைய மாளிகையின் மேல் உப்பரிகையில் சோபாவில் சாய்ந்து கொண்டு உல்லாசமாய் தெருவை நோக்கி பார்வையைச் செலுத்தியபடி உட்கார்ந்திருந்தார். அவரருகே அவருடைய காதலி மோஹனாம்பாள் உட்கார்ந்திருந்தாள். அந்த உபரிகையி னுள்ளிருந்த கடிகாரம் டாங் டாங் கென்று பன்னிரெண்டு மணியடித்தது. கடிகாரத்தின் சப்தத்தைக் கேட்ட மோஹனா புன் சிரிப்புடன் சங்கரைய்யாவின் கரங்களைப் பிடித்து "நாதா! இன்று உங்கள் முகமேன் வாடியிருக்கிறது? ஏதேனும் அசம்பாவிதமான சம்பவங்கள் நிகழ்ந்ததோ!" என்று வாஞ்சையோடு கேட்டாள்.

டாக்டர் சங்கரைய்யா பதில் சொல்ல விரும்பாதவர் போல் மௌனமா யிருந்தார்.

மோஹனா மீண்டும் இள நகையோடு அவர் மீது லேசாகச் சாய்ந்து "பிராண நாதா! உங்களுக்கு விருப்ப மில்லாத விஷயத்தைப் பற்றி நான் மேலும் தங்களைக் கேட்டு தொந்தரவு செய்வதற்காக மன்னிக்க வேண்டும். உங்கள் முகத்தில் தோன்றும் மாறுதல் எனது உள்ளத்தில் பெரும் கிளர்ச்சியை உண்டாக்குகிறது. நாதா! விரைவில் அதைச் சொல்லுங்கள்" என்று கெஞ்சினாள்.

"மோஹனா! என்னுடைய முகத்தில் தோன்றும் மாறுதலை நீ இவ்வளவு கூர்மையாகக் கவனிக்க மாட்டா யென்றெண்ணியே இவ்வளவு நேரம் வரையில் மௌனமா யிருந்தேன். என்னுடைய வேதனை மனவருத்தத்தைக் கொடுக்குமாதலால் விஷயத்தை வெளியிடாமல் ஜாக்கிரதையா யிருந்தேன். ஆனால் இப்பொழுது நீயே கண்டு பிடித்து விட்டா யாதலால் உன்னிடம் உண்மையைச் சொல்லித்தான் தீர வேண்டியிருக்கிறது. இன்று இரவு ஏழு மணியிலிருந்து எனக்கு மகா கடுமையான தலைவலி ஏற்பட்டிருக்கிறது. அந்த வேதனையைப் பொறுக்க முடியாமல் தான் தவித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் சங்கரய்யர்.

மோஹனா அவருடைய பதிலை நம்ப வில்லை. குறும்பு நகைப்புடன் சங்கரய்யாவை நோக்கி "டாக்டருக்கே தலை வலியென்றால்.....................?" என்று வார்த்தைகளை நீட்டினாள்.

"மோஹனா! என்னுடைய பதிலை நீ நம்பவில்லை போலிருக்கிறது. டாக்டர் மற்றவர்களுக்கு டாக்டரே யொழிய தனக்கு டாக்டரல்ல. வியாதியஸ்தான டாக்டரொருவருக்கு மற்றொரு டாக்டர் சிகிச்சை செய்தால் தான் சிகிச்சை வெற்றிகரமாய் முடியும்" என்றார் சங்கரய்யா.

மோஹனா தான் முன்னால் கூறிய பதிலுக்காகத் தன்னைத் தானே கடிந்து கொண்டு "நாதா! நீங்கள் விளையாட்டிற்காகவே உங்களுக்குத் தலைவலி யென்று கூறுவதாக நினைத்து முட்டாள் தனமாய் ஏதோ உளறி விட்டேன். அதை மறந்து விடுங்கள் நாதா" என்று பணிவுடன் வேண்டிக் கொண்டாள்.

"நினைத்ததற் கெல்லாம் நீ இவ்வாறு மன்னிப்பு கோருவதா யிருந்தால் நிச்சயம் நான் மன்னிப்பு கொடுக்க மாட்டேன்" என்று தமாஷாக பதிலளித்தார் சங்கரய்யா.

"நான் உங்களுக்கு டாக்டரா யிருந்து சிகிச்சை செய்கிறேன். அப்பொழுது நீங்கள் என்னை மன்னிப்பீர்க ளல்லவா?" என்று கேட்டாள் மோஹனா. அவருடைய முகத்தில் மல்லிகை மலர்வது போன்ற ஒரு புன்முறுவல் தோன்றிற்று.

"உம், உம்" என்று தலையை அசைத்தார் சங்கரய்யா.

மோஹனா கீழிறங்கிச் சென்று சில நிமிஷங்களில் கையில் ஒரு மருந்து புட்டியுடனும், புகையும் காபியுடனும் திரும்பி வந்தாள். சங்கரய்யாவை காபி குடிக்கும்படிச் செய்து விட்டு நெற்றியில் ஜாக்கிரதையாக மருந்தைத் தடவினாள். மருந்து தடவி முற்றுப் பெற்றவுடன் சங்கரய்யாவின் கன்னத்தில் நறுக்கென்று ஒரு முத்தம் வைத்தாள்.

சங்கரய்யா மோஹனாவின் முத்தத்தை ஏற்றுக் கொண்ட அச் சமயம் தெருவில் ஒரு பலத்த சப்தம் கேட்டது. நிசப்தமான அந் நள்ளிருளில் அந்த ஒலியைக் கேட்ட மோஹனாவும் சங்கரய்யாவும் தெருவை நோக்கிப் பார்வையைச் செலுத்தினார்கள். சந்திர னொளியில் தெருவில் ஒரு மோட்டார் வண்டி சுவற்றில் மோதி சின்னா பின்னமாய் சிதறிக் கிடந்தது அவர்களுக்குத் தெரிந்தது. சற்று உற்று கவனித்த போது "ஆ ஜகதீசா! என்னைக் காப்பாற்றுவார் ஒருவரு மில்லையா?" என்று ஜிணத்திற்குள்ளிருந்து, கூக்குரலிடுவது போல் மோட்டார் வண்டியின் அடியிலிருந்து ஒருவர் புலம்பும் சப்தம் கேட்டது.

டாக்டர் சங்கரய்யா அதற்கு மேல் அங்கு நிற்க வில்லை. ஒரு குதி குதித்து சப்தம் வருந் திக்கை நோக்கி ஓடினார். மோஹனா அவர் அந்த மோட்டார் விபத்திற்குள்ளாகி "என்னைக் காப்பாற்றுவாரில்லையா" என்று கூக்குரலிடும் மனிதனைக் காப்பாற்றவே அவ்வளவு பரபரப்பாக விரைந்து செல்லுகிறா ரென்பதை யூகித்துக் கொண்டாள். ஆகவே தனது கணவர் அங்கு போய் எந்த விதத்தில் அப் பிராணிக்கு உபகாரம் செய்யப் போகிறார் என்பதை அறிவதற்காக ஆவலோடு தெரு முகமாய் மோட்டார் சிதறிக் கிடந்த இடத்தை நோக்கி பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

விரைவாகக் குதித் தோடிய டாக்டர் சங்கரய்யா மோட்டாரி னருகில் சென்று அதை அப்படியும் இப்படியும் புரட்டி அதனடியிற் சிக்கிக் கிடந்த பரிதாபகரமான ஒரு உருவத்தைத் தூக்கி தோள் மீது சாய்த்துக் கொண்டு அவருடைய சொந்த ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு சென்றார்.

மோகனா கண் கொட்டாது அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தனது கணவர் ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்காக அவ்வளவு தூரம் சிரம மெடுத்துக் கொள்

வதை எண்ணி மோகனா மகிழ்ச்சியையும் ஒரு பெருமையையும் அடைந்தாள்.

2

அந்த சம்பவம் நடந்து போன மூன்றாம் நாள். காலை பத்து மணி யிருக்கும். டாக்டர் சங்காய்யா சோபாவில் சாய்ந்து கொண்டு ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தார்.

"நாதா! நான் நன்றாக இல்லையா? எனது அழகு உங்களுக்குப் பிடிக்க வில்லையா? எனது அறிவு உங்களுக்குப் பிடிக்க வில்லையா? சொல்லுங்கள். இதோ மோகினி போல் அலங்கரித்துக் கொண்டு வந்து விடுகிறேன். இனிமையாகப் பாட வேண்டுமா, இதோ பாடுகிறேன். காந்தா! ஏனோ இரண்டு நாட்களாக நீங்கள் முன் போல் என்னிடம் அன்பு செலுத்துவதில்லையே- நாதா! என், என்ன காரணம்? எனது குற்றத்தைச் சொல்லுங்கள். என்னிடம் உள்ள குறையை நான் திருத்திக் கொள்கிறேன்" என்று தன்னுடைய மனதில் எழுந்த நிஷ்களங்கமான காதலை வெளியிட்டு புன் முறுவலுடன் சங்காய்யாவைத் தழுவி கொஞ்சுதலாய் கூறினாள் மோகனா.

"கண்ணே! உனக்கு அழகில்லையென்று யார் கூறினார்கள்? அறிவில்லையென்று யார் கூறினார்கள்? உனது புன்னகை அரும்பும் சந்திர பிம்பத்தையொத்த முகம், கருத்து நீண்டு நெளிந்த கூந்தல், முல்லை மலரை யொத்த வெண்மையான பல் வரிசைகள், ஒளி வீசும் கண்கள், பொன்னிற மேனி, யாழினும் இனிய மழலைச் சொற்கள் இவைகளை நான் எவ்வாறு மறக்க முடியும்? என் இன்பப் பெருக்கே! இந்திராணியே! நீ எண்ணுவது வெறும் பிரமையாகும். நான் என்றும் போலவே உன்னோடு அளவளாவி வருகிறேன். நான் முன்னைப் போல் உன்னிடம் அன்பு பாராட்டி வரவில்லையென்று நீ கருதுவது தவறு" என்று கூறி மோகனாவின் கன்னங்களில் அன்பு கனிந்த முத்தங்கள் பலவற்றை யளித்தார் டாக்டர் சங்காய்யா.

மோகனா தனது காதலனுடைய செய்கைகளால் தனது மனதை முற்றிலும் அவனிடமே பறி கொடுத்து விட்டாள். "நாதா! நீங்கள் என்ன கூறினபோதிலும் நான் நம்ப மாட்டேன். உங்கள் மனதில் ஏதோ ஒரு மாறுதல் குடி கொண்டிருக்கிறது. பிராண காந்தா! தயவு செய்து அதைத் தெரியப்படுத்துங்கள்" என்று கிள்ளை போல் மொழிந்தாள் மோகனா.

டாக்டர் சங்காய்யா மோகனாவை ஒரு சிறு குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கி அவளை மார்போடணைத்து, "நான் கூறுவதை நம்ப மாட்டேனென்றால், கண்ணே! நான் என் செய்வேன்! உண்மையாகச் சொல்லுகிறேன். உன் மீது நான் கொண்டிருக்கும் அன்பில் ஒரு துளியைக் கூட குறைக்க வில்லை" என்று பரிவுடன் பகர்ந்தார்.

"மன்னரே! உங்கள் மனதைத் திறந்து காட்டுங்கள். அதை மறைக்காதீர்கள்" என்று புன்னகையோடு புகன்றாள் மோகனா. அவளுடைய கரு விழிகள் பரிதாபகரமாய் டாக்டரை நோக்கின.

"சே! என்ன மோகனா! எடுத்ததற்கெல்லாம் இவ்வாறு சந்தேகம் கொள்கிறாய்! என் மனோபலம் நீ அறியாததோ" என்று கூறி இன்னொருமுறை மோகனாவைத் தழுவி இன்னும் இரண்டு முத்தங்களைக் கொடுத்தார் சங்காய்யா. அவை மோகனாவின் மனதை மாற்றி விட்டன. அவளுடைய காதலனை இன்னும் என்னென்னவோ கேட்க வேண்டுமென்றெண்ணியிருந்த விஷயங்களை யெல்லாம் அவள் மறந்து போய் விட்டாள்.

சில நிமிஷங்களானவுடன் சங்காய்யா மோகனாவிடம் விடை பெற்றுக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றார். மோகனா அவர் தலை மறையும் வரையில் அவரையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு வேலைகளைக் கவனிக்கச் சென்றாள். அவளுடைய மனம் தன் காதலன் இன்னும் சிறிது நேரம் தன்னுடன் இல்

லாமற் போய் விட்டாரே என்று தவித்துக் கொண்டிருந்தது.

டாக்டர் சங்கரய்யா சுதாமபுரியில் பேர் போன டாக்டர். அவருடைய மனைவியே மோகனா. மோகனா சுமாரான அழகும் மேன்மையான குணமும் கொண்டவள். கணவனையே கண் கண்ட தெய்வமாக எண்ணி அவனுக்குப் பணி விடைகள் செய்து அவனடையும் இன்பத்தைத் தனதாகக் கொண்டு பேரின்ப மடைந்து வந்தாள் மோகனா. அவளுக்கும் சங்கரய்யாவுக்கும் விவாகம் நடந்து மூன்று வருடங்களாகின்றன. அந்த மூன்று வருடங்களில் காணாத புதுமை யொன்றை அவள் சங்கரய்யாவின் முகத்தில் கண்டாள். அந்த மாறுதல் அவள் மனதைத் திகைக்கச் செய்தது. அதற்குக் காரணம் என்ன வென்பதை அறியாது வாடி வருந்தினாள். கள்ளங் கபடற்ற அவள் உள்ளம் அதற்குக் காரணத்தை அவளுடைய கணவன் மூலமாகவே அறிந்துகொள்ளத் தூண்டியது. ஆதலால் தான் அவள் அதற்குரிய காரணத்தை மெல்ல சங்கரய்யாவிடம் கேட்டாள். அவர் மோகனாவின் பிரமைதான் அதற்குக் காரணமென்று சாதித்துவிட்டார்.

3

இரவு ஒன்பது மணியிருக்கும். வானத்தில் பூரண சந்திரன் பால்போல் ஒளி வீசிக் கொண்டிருந்தான். மந்தமாருதம் அந்தமாக வந்து வீசிக் கொண்டிருந்தது.

"மோகனா!" என்றார் சங்கரய்யர்.

"நாதா! இதோ வந்தேன்!" என்று சொல்லிக்கொண்டே சங்கரய்யாவின் முன் வந்து நின்றாள் மோகனா.

"கண்ணே! நான் சென்று வரட்டுமா?" என்றார் சங்கரய்யா

"எங்கே?" என்று ஆவலோடு கேட்டாள் மோகனா.

"இன்று நான் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டிய வேலை யொன்றிருக்கிறது. கண்ணே, போய்வரட்டுமா?" என்றார் டாக்டர்.

"சும்மா, விளையாட்டிற்காகவா நாதா சொல்லுகிறீர்கள்? நீங்கள் இதுவரையிலும் ஒருநாள் கூட இரவில் ஆஸ்பத்திரியில் தங்கிய தில்லையே!" என்றாள் மோகனா.

"ஆமாம். ஆனால் இன்னொரு ஆபத்தான கேஸ் வந்திருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு என்னைச் சேர்ந்திருக்கிறது. நான் சிறிது கண்ணயர்ந்தாலும் காரியம் கெட்டுப்போம். அந்த ஆபத்திலிருக்கும் மனிதன் இறந்துபோய் விடுவான். கண்ணே, மற்ற உயிர்களையும் நம்மைப்போல் கருதவேண்டு மல்லவா?"

மோகனாவின் முகம் பெருத்த ஏமாற்றத்தை யடைந்தது. அவள் சில நிமிஷங்கள் மௌனமா யிருந்துவிட்டு, "நாதா! என்னைப் பாருங்கள். நன்றாக உற்றுப் பாருங்கள். நீங்கள் என்னைக் கண்டு களிப்புறவே இவ்வா றெல்லாம் அலங்காரம் செய்துகொண்டு வந்திருக்கிறேன். அன்பரே! நீங்கள் எனது வேட்கைக்கு மாறாக நடந்து கொள்ளலாமா? உங்கள் மனதிற்கு மகிழ்ச்சியை யூட்டுவதற்காக என்னை அலங்காரம் செய்துகொள்ள இரண்டு மணி நேரங்களைச் செலவிட்டிருக்கிறேன். காதலா! விரைந்து வாருங்கள். மந்தமாருதம் வீசும் இவ்வேளையில் நாம் மகிழ்வோடு சம்பாஷித்துக் கொண்டிருப்போம்" என்று அன்போடு சங்கரய்யாவை அழைத்தாள்.

"மோகனா! இங்கே பார். நம்மிருவர் மகிழ்ச்சிக்காக ஒரு மனிதன் உயிர் பறி போவதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா; அது நியாயமாமோ!" என்று உசாவினார் சங்கரய்யா.

மோகனாவினால் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க முடியவில்லை. "நாதா! அப்படியானால் தங்களிஷ்டம் போலவே சென்று வாருங்கள்" என்று அரை மனதோடு விடைகொடுத்து அனுப்பினாள்.

சங்கரய்யா சென்றபின் அவள் படுக்கையில் சென்று படுத்தாள். அவளுக்கு உறக்கமே வரவில்லை. அவள் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றின.

4

டாக்டர் சங்கய்யாவின் செய்கைகள் ஏனோ மோகனாவிற்கு ஒரு பெருத்த கவலையை உண்டாக்கி வந்தது. அவர் எவ்வளவோ சாமர்த்தியமாய் நடந்துகொண்ட போதிலும் அவர் மனதில் ஒரு களங்கம் இருப்பதை மோகனா நன்கு உணர்ந்தாள். அதை அறிய வேண்டுமென்று அவள் மனம் விரும்பியது. ஆனால் சங்கய்யா மோகனாவின் கேள்விக்கு சரியான உத்தரம் கொடுக்கவில்லை. அவர் அவ்வாறு விஷயத்தை மறைக்கவே அதை எவ்வாறேனும் அறியவேண்டுமென்று மோகனாவின் உள்ளம் துடித்தது.

சங்கய்யாவின் ஆஸ்பத்திரியில் முத்துலக்ஷ்மி என்றொரு தாதியிருந்தாள். மோஹனாவிற்கு அவள்மீது மிகுந்த மதிப்பும் பக்தியும் உண்டு. அவளுக்கு சங்கய்யாவின் விஷயங்கள் தெரியக் கூடுமாதலால் மோஹனா அவளை அழைப்பித்து சங்கய்யாவின் மீது தான் கொண்டுள்ள சந்தேகத்தை விவரித்து, "முத்துலக்ஷ்மி! எனது கணவர் வேறு யாரையேனும் காதலிக்கிறாரா? அல்லது வேறு யாருடனாவது கூடா நட்பு கொண்டிருக்கிறாரா?" என்று கேட்டாள்.

முத்துலக்ஷ்மி உண்மையை எடுத்துக் கூற தயங்குபவள்போல் மௌனம் சாதித்தாள்.

"முத்துலக்ஷ்மி! என்ன யோசனை செய்கிறாய், உண்மையைச் சொல். தயங்காதே" என்றாள் மோகனா.

"அம்மா, அது ஒரு பாதகம்" என்றாள் முத்துலக்ஷ்மி.

"அதைக் கொஞ்சம் சொல்லேன்" என்று கெஞ்சினாள் மோகனா.

"அம்மா! அன்றொருநாள் உனது கணவர் மோட்டார் விபத்தில் சிக்கிக் காயமடைந்த பெண்ணொருத்தியை ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சை செய்ய கொண்டுவந்தார். அவள் நல்ல அழகி. உன்னைவிட அழகில் ஒரு மடங்கு உயர்வானவளென்றே சொல்லவேண்டும். அவளை அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்ததிலிருந்து முற்றிலும் மாறுதலடைந்து விட்டார். ஆஸ்பத்திரிக்கு வரும் மற்ற நோயாளிகளை அவர் சரியாகக் கவனிப்பதேயில்லை. சதா சர்வ காலமும் அந்த அழகியின் அருகிலேயே உட்கார்ந்துகொண்டு அவளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டு வருகிறார். சற்று யோசித்துப் பார்க்குமிடத்து அவர் அந்த அழகிய யுவதியைப் பரிபூர்ணமாய் காதலிக்கிறாரென்று தெரிகிறது" என்றாள் முத்துலக்ஷ்மி.

தனது காதலன் வேறொருத்தியைக் காதலிக்கிறானென்று கேள்விப்படும் ஒரு யுவதியின் மனம் எவ்வளவு கொடிய வேதனையை அடையுமென்பதை நேயர்களே ஊகித்துக் கொள்ளவேண்டும். பேதை மோகனாவின் உள்ளம் முத்துலக்ஷ்மியின் உரைகளைக் கேட்டதும் கலங்கிற்று. அவள் கண்களிலிருந்து கண்ணீர் முத்துப்போல் உதிர்ந்தது. தீயில் விழுந்த புழுப்போல் துடித்தாள். அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உலகமே சுழல்வதுபோல் தோன்றியது.

அன்று மாலை 6-30 மணிக்கு டாக்டர் சங்கய்யா வீட்டினுள் பிரவேசித்தார். அவர் வருகையையே நெஞ்சங்குமுற எதிர்பார்த்துக் கொண்டிருந்த மோகனா ஓடிச்சென்று அவர் கால்களைப் பற்றிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுது கண்ணீரால் அவர் பாதங்களை நனைத்தாள்.

டாக்டர் சங்கய்யாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவர் மோகனாவின் கண்களை கைக்குட்டையால் பதைபதைப்புடன் துடைத்தார். மோகனாவின் அழுகையைக் கண்ட அவருக்கும் அழுகை வந்துவிட்டது.

"நாதா! இது தர்மமா?" என்று வினவினாள் மோகனா.

"கண்ணே, நான் உனக்கு என்ன அபசாரம் செய்தேன். ஏதாவது தவறுதல் செய்திருந்தால் மன்னித்துவிட மாட்டாயா!" என்றார் சங்கய்யா.

"நாதா! நீங்கள் சீர்திருத்தக் காரல்லவா? நீங்களே இப்படிச் செய்தால் ...."

"கண்ணே, நான் சீர்திருத்தக்காரன் தான். ஆனல் உன் மனம் வருந்தும்படி ஒன்றும் செய்யவில்லையே"

"பிராண காந்தா! தங்கள் மனைவியாக நானிருக்கும்போது நீங்கள் வேறொருத்தியைக் காதலிப்பதும் அவளை மணஞ் செய்துகொள்ள முயலுவதும் நியாயமாகுமா?" என்று கண்ணீர் ததும்பக் கேட்டாள் மோகன.

"மோகன! ஆம், அது தவறுதான். ஆனல் நான் உன்னுடைய சம்மதமின்றி எக்காலத்திலும் அத்தகைய ஈன காரியத்தில் பிரவேசிக்க மாட்டேன்.—பிரவேசித்ததும் இல்லை. அன்பே! உன் அநுமதியின்றி இக்காரியத்தில் தலையிடும் உத்தேசம் எனக்கு இந்நிமிஷம் வரையில் இல்லை. இனியும் இல்லை. மோகன! இந்நிமிஷம் முதல் நான் அப்பெண்ணை மறந்து விடுகிறேன். நீ வருந்தாதே" என்று கூறி மோகனவைத் தேற்றினர் சங்கரய்யா.

"நீங்கள் அவளை மனதால் நினைக்கவும் கூடாது. ஏன், அது மட்டும் போதாது—அவளை இன்றைபதினமே ஆஸ்பத்திரியைவிட்டு வேறு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட வேண்டும்" என்முள் மோகன.

"உன்னிடஷ்டம் போலவே" என்ருர் சங்கரய்யா. அவர் குரல் கம்மிப் போயிற்று.

மோகன அவர் முகத்தை ஏறிட்டு நோக்கினள். அவள் ஹிருதயம் திடுக்கிட்டுவிட்டது. புன்னகை சொட்டும் அம்முகம் அனலால் வாடிய ரோஜா மலர் போன்று வாடியிருந்தது. மோகன அவர் முகத்தை புன்னகையால் பிரகாசிக்கச் செய்ய என்னென்னவோ முயற்சிகளெல்லாம் செய்தாள். ஒன்றும் பலிக்கவில்லை.

5

மோகனவின் மனம் சங்கரய்யாவின் உறுதியான வார்த்தைகளால் ஒருபுறம் திருப்தியடைந்த தென்றாலும், அவருடைய முகத்தை அவள் உற்று நோக்கிய போதெல்லாம் அந்த திருப்தி அவளுக்கு விஷமாய் தோன்றியது. "எனது காதலர் உள்ளத்தை இவ்வளவு அழுத்தமாகக் கவர்ந்திருக்கும் அவள் என்னைவிட எந்த அம்சத்தில் உயர்ந்தவளாயிருப்பாள்?" என்று அவள் தன்னுடைய மனதையே ஒருமுறை கேட்டுக் கொண்டாள். கடைசியில் அந்தக் கேள்விக்குத் தக்க பதிலை நேரிலேயே அப்பெண்ணைக் கண்டு தெரிந்து கொள்வதென்று முடிவு செய்தவளாய் தாதி முத்துலக்ஷ்மியை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனள்.

முத்துலக்ஷ்மி பல அறைகளைத் தாண்டி கடைசிக் கோடியிலிருந்த ஒரு அறையை மோகனவிற்குக் காட்டினள். மோகன பாய்ந்து சென்று அந்த அறையினுள் பிரவேசித்தாள். அந்த அறையில் அவளுடைய காதலன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அந்த அணங்கு அரைத் தூக்கத்தோடு கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள். மோகன அவளருகிற் சென்று அவள் முகத்தை உற்று நோக்கினள். அந்த முகவசிகரம் அவளைக் காந்தம்போல் கவர்ந்துவிட்டது. அவள் எவ்வளவுக் கெவ்வளவு முன்னல் அப்பெண்மணியின் மீது க்ஷாத்திரம் கொண்டிருந்தாளோ, அவ்வளவுக் கவ்வளவு அன்பும், இரக்கமும் அவள்மீது மோகனவிற்கு உண்டாகி விட்டது. மெல்ல அந்த யுவதியின் அருகிலமர்ந்து அவளுடைய சிரத்தைத் தூக்கி மடியிற் போட்டுக்கொண்டு "அம்மா," என்று பரிவுடன் அழைத்தாள்.

"அம்மா தாயே! ஏழை என்மீது இவ்வளவு போன்புகொண்டு இங்கு வந்திருக்கும் நீங்கள் யாரென்பதை நான் அறிந்து கொள்ளலாமா?" என்று பணிவுடன் கேட்டாள் கங்கை.

"அம்மா! நான் என்னைப்பற்றி அப்புறம் உனக்குச் சொல்லுகிறேன். முதலில் நீ யார், ஏன் இங்கு வந்தாய் என்பவைகளை விரிவாகச் சொல்லு" என்முள் மோகன.

அந்தப் பெண்மணி மோகனாவைக் கண்டது முதல் ஒரு குழந்தை தாயிடம் கொள்ளும் அன்பை அவள்மீது கொண்டு விட்டாள். ஆதலால் அவள் விருப்பப் படியே தன் வரலாறுகளைக் கூற ஆரம்பித்தாள்.

"அம்மா! இந்த நகரில் அருணாசல முதலி வீதியில் "ஆனந்த நிலையம்" என்ற ஒரு மாளிகை இருக்கிறதென்பதை நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம்—பார்த்துக்கூட இருக்கலாம். சில வருஷங்களுக்கு முன் அதன் சொந்தக்காரரா யிருந்தவர் திவான் பகதூர் தீனதயாளு வாகும். அவர் பெயரை அறியாதவர்கள் இந்த ஊரில் ஒருவரும் இருக்கமுடியாது. அவருடைய ஏக புத்திரியே நான். என் பெற்றோர்கள் எனக்கிட்ட பெயர் சந்திரவதனா என்பது. சில வருஷங்களுக்கு முன்னால் என் தகப்பனார் இறந்துவிட்டார். அதற்குப் பல வருஷங்களுக்கு முன்னாலேயே என் அன்னையும் இறந்துபோய் விட்டார். ஆதலால் நான் என் பெற்றோர்களால் தன்னந் தனியாய் விடப்பட்டேன். அவர்கள் எனக்குத் துணையாக வைத்துவிட்டுச் சென்றது அவர்கள் சேமித்து வைத்திருந்த திரண்ட செல்வம்தான். எனது செல்வத்தையும் இளமையையுங் கண்ட பலர் என்னோடு உறவு கொண்டாடலானார்கள். இன்னும் சிலர் தங்களை மணந்து கொள்ளச் சொல்லி கட்டாயப் படுத்தலானார்கள். நான் அவர்கள் கோரிக்கையை கண்டிப்பாய் மறுத்துவிட்டேன். ஆதலால் என்மீது ஆத்திரம் கொண்டிருக்கும் அவர்களிற் சிலர் அடிக்கடி என்னைத் துன்புறுத்தி வருகிறார்கள். எனக்குத் துணை ஒருவரு மில்லாததால் அவர்கள் அட்டகாசச் செய்கைகள் தினேதினே வளர்ந்து கொண்டு வருகின்றன. சில தினங்களுக்கு முன்னால் உறக்கம் வாராததால் சற்றுநேரம் வெளியே உலாவிக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று மூன்று பேர் என் முன் தோன்றி ரிவால்வரைக் காட்டி என்னைப் பயமுறுத்தி மோட்டாரில் ஏறச் செய்தனர். வேறு வழியின்றி நானும் மோட்டாரில் ஏறினேன். நான் ஏறியதும் மோட்டார் வெகுவேகமாய் தெற்கு நோக்கிப் புறப்பட்டது. அவர்கள் வழியில் சம்பாஷித்துக் கொண்டதி லிருந்து அவர்கள் என்னை புதுச்சேரிக்குக்கொண்டு போய் பலவந்தமாக விவாகம் செய்து கொள்ள ஏற்பாடு செய்கிறார்களென்று அறிந்தேன். அப்போது என்மனம் பட்ட பாட்டை ஆண்டவனே அறிவான். கடவுளை நோக்கி கசிந்துருகினேன். அடுத்த நிமிஷம் நான் ஏறிச்சென்ற அந்த மோட்டார் எதிரேயிருந்த ஒரு கெட்டியான சுவற்றின்மீது மோதி பலத்த சேதத்தை யடைந்தது. மோட்டார் சென்ற வேகத்தில் சுவற்றில் மோதியதால் நான் மோட்டாரி லிருந்து தூக்கியடிக்கப்பட்டு அதன் அடியில் வீழ்ந்தேன். என்னைக் கவர்ந்து சென்ற அக் காதகர்கள் திகிலடைந்து மோட்டாரை அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட்டனர். அப்பொழுது நான் போட்ட கூச்சலால் இந்த ஆஸ்பத்திரியின் சொந்தக்காரரான டாக்டர் சமயசஞ்சீவிபோல் என் முன்தோன்றி என்னைக் காப்பாற்றினார். அவருடைய பராமரிப்பில்தான் நான் இப்போதிருக்கிறேன். இன்னும் இரண்டொரு தினங்களில் நான் பூர்ண சுகம் பெற்று விடுவேன். ஆனால் என் தேகம் இப்படியே இருந்துவிடக் கூடாதா வென்றே நான் கருதுகிறேன். எனது சொந்த இல்லத்தில் நான் படும் அவஸ்தைகள் என்னை

அவ்வாறு கருதச் செய்கின்றன. அந்தக் காதகர்களை நினைக்கும்போதே என் நெஞ்சு நடுங்குகிறது" என்று கூறி பெருமூச் செறிந்தாள் சந்திரா.

அவள் சரித்திரத்தைக் கேட்ட போது மோகனாவிற்கு அவள்மீது அளவற்ற அன்பும், அநுதாபமும் உண்டா யிற்று. "அம்மா, நீ யேன் இந்த வாலிப வயதை வீணுக்கவேண்டும். உனக்குப் பிடித்த மணாளனொருவனை மணந்து அவனோடு வாழ்க்கை நடத்து. அப்போது இந்த இக்கட்டுகளெல்லாம் நீங்கிவிடும்" என்றாள் மோகனா.

"ஆம்—ஆனால் நான் ஒரு பாலிய விதவையம்மா. எனது கணவர் என்னுடைய பன்னிரெண்டாம் வயதிலேயே இறந்துபோய் விட்டாராம்!"

"அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். உன்னை விதவா விவாக சங்கத்தில் சேர்த்து விடுகிறேன். உனது அழகிற்கும் அறிவிற்கும் வியந்து உன்னை மணந்து கொள்ள ராஜாக்களும், குமார ராஜாக்களும், ஜெமீந்தார்களும், குமார ஜெமீந்தார்களும் போட்டி போட்டுக்கொண்டு முன் வருவார்கள். அவர்களில் உன் மனதிற்கு மணாளனொருவனை நீ பொறுக்கி யெடுத்து அவரோடு வாழ்க்கை நடத்தலாம்" என்றாள் மோகனா.

"அம்மா! உங்கள் யோசனையை மறுப்பதற்காக நீங்கள் தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும். நான் இந்த தர்மப்படி நடக்கவேண்டுமென்ற திடசித்தம் கொண்டவள். ஆதலால்தான் இதுவரையில் வேறு விவாகம் செய்துகொள்ள மறுத்து வந்தேன். ஆனால்............"

"ஆனால்? உம் மேலே சொல்லம்மா" என்று கூறி அவள் பதிலை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் மோகனா.

"ஆனால், என்னை மோட்டாரி னடியிலிருந்து காப்பாற்றி எடுத்து சிகிச்சை செய்துவரும் டாக்டர் சங்கரய்யாவின் முகத்தைக் காணும்போ தெல்லாம் என் திடசித்தம் மாறி விடுகிறது. நான் என் மனமார அவரைக் காதலிக்கிறேன். மற்றொருமுறை விவாகஞ் செய்துகொள்வதாயிருந்தால் அவரையே மணந்துகொள்வது இன்றேல் இப்படியே காலங்கழித்து விடுவதென்று முடிவு செய்து விட்டேன்" என்று கூறி முடித்தாள் சந்திரா.

அதற்குமேல் மோகனாவிற்கு அங்கிருக்க மனம் செல்லவில்லை. "அம்மா சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியேறினாள்.

"அம்மா! நீங்கள் யார்? உங்கள் சரித்திரம்? நான் அறிந்து கொள்ளக் கூடாதா?" என்றாள் சந்திரா.

"அதை நீ விரைவில் அறிவாய்" என்று கூறிவிட்டு நடந்தாள் மோகனா.

6

காலை ஏழரை மணியிருக்கும். மோகனா சோபாவில் சாய்ந்துகொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவளுடைய ஹிருதய கமலங்களில் ஒருபுறம் சங்கரய்யாவின் துக்க முகமும், மற்றொரு புறம் சந்திராவின் மாசற்ற மதிமுகமும் தோன்றித் தோன்றி காட்சியளித்துக் கொண்டிருந்தது. "ஆம்; நான் என்னுடைய சுயநலத்தை விட்டுவிட வேண்டும். நான் என்னுடைய பிடிவாதத் தன்மையை மாற்றிக் கொள்வதால் இரண்டு பேர்கள் திருப்தி யடைகிறார்கள். அவர்களிருவரின் விருப்பத்திற்கு இடையூறாக நாமிருப்பது நியாயமா?"— "ஒரு உத்தம பத்தினியின் கடமை என்ன? அவளுடைய கணவனின் மகிழ்ச்சியே அவளுடைய மகிழ்ச்சியல்லவா! ஆமாம், எனது காதலரின் இன்பமே எனது இன்பம். அவர் இன்பமடைய நான் என்னுடைய உயிரை தியாகம் செய்வேன்" என்று மனதிற்குள்ளேயே சொல்லிக்கொண்டு சங்கரய்யாவின் அறையை அடைந்தாள்.

சங்கரய்யா விசனமே வடிவாய் உட்கார்ந்திருந்தார். மோகனா அவர் அருகே சென்று அவர் கால்களைப்பற்றி, "நாதா! என்னை மன்னிக்க வேண்டும். பேதமை

யால் நான் தங்களை வருந்தும்படிச் செய்து விட்டேன்" என்று கூறி கண்ணீர் விட்டாள்.

"கண்ணே, உனக்கு இன்னும் என்ன வருத்தம்?" என்றார் சங்கரய்யா.

"நாதா! நீங்கள் அந்தப் பெண்—சந்திராவை மணந்துகொள்ள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு எல்லாவிஷயங்களையும் கூறினாள் மோகனா.

* * *

அன்றுமாலை ஆறுமணி யிருக்கும். சங்கரய்யா சந்திராவுடன் அவர் மாளிகையில் வந்திறங்கினார். சந்திரா மோகனாவின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு "அக்காள்!" என்றாள்.

மோகனா அவளை வாரியெடுத்து ஆலிங்கனம் செய்து, "கண்ணே சந்திரா, இன்றையிலிருந்து நீ என்னுடைய தங்கை. எனது சகல சுகபோகத்திலும் உனக்கும் பங்குண்டு" என்று கூறி முத்தமிட்டாள். அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று.

நூதன தமிழ் நாவல்கள்.

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார், **B. A.** எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
திகம்பர சாமியார் பால்ய லீலை	5	0	துரைக்கண்ணம்மாள்	2	4	மிஸ்டர் பூச்சாண்டி எம்மே!	1	2
மிஸிஸ் லைலா மோகினி	3	0	லக்ஷ்மீகாந்தம்	2	0	சோமசுந்தரம்	1	2
மன்மதபுரியின் மூடு மந்திரம்	2	12	திரிபுரசுந்தரி	2	0	டாக்டர் சோணாசலம்	1	2
கனகாம்புஜம்	2	12	இராஜேந்திர மோகனா	2	0	பச்சைக்காளி	1	2
இல்லோநாயகி	2	4	வசந்தகோகிலம்	1	4	சமயசஞ்சீவி	1	2
ஸதானந்த போதக சாமியார்	2	4	முத்துலக்ஷ்மி	1	4	சொக்கன் செட்டி	1	2
பன்னியூர் படாடோப சர்மா	2	4	நீலலோசனி	1	2	பூஞ்சோலையம்மாள்	1	2
			கலியாண சுந்தரம்	1	2	சிவராமகிருஷ்ணன்	1	2
			நங்கை மடவன்னம்	1	2	மாயசுந்தரி	0	12
			சிங்கார சூர்யோதயம்	1	2			

செய்யூர்-எஸ். சாரநாயகி அம்மாள் எழுதியவை.

எஸ், எஸ். அருணகிரிநாதர் எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
சிவபாக்யம்	1	8	நித்யகல்யாணி	0	12	கனகமணி	2	4
அபரஞ்சி	0	12	சண்முகவடிவு	0	5	பத்மாட்சி	2	0
ஞானக்கொழுந்து	0	12	மன்மத விஜயம்	0	4	வசந்தா	1	8
சம்பத்குமார்	0	12				வீரகேசரி	1	8

ரமாமணி ரூ. 2 0 0 | சுந்தரி மனோகரன் ரூ. 1 4 0

கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

("இரஸிகன்.")

"தமிழில் புராண கதைகளைத் தவிர வேறு கதைகள் இல்லாமலில்லை. தேச சரித்திரத்தை ஆராய்ந்து பார்ப்போமானால் சினிமாவுக்கேற்ற பல கதைகள் இருப்பதைக் காணலாம். விஜயநகர மன்னர்கள் சரித்திரங்களை யொட்டி பல படங்கள் தயாரிக்கலாம். சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ் வேந்தர்களின் வரலாறுகளிலிருந்து நமக்கு வேண்டிய கதைகள் அகப்படும். சமூக சீர்திருத்தக் கதைகளைப் படங்களாகத் தயாரித்தால், அவைகளின் வாயிலாகத் தகுந்த வருவாய் கிடைப்பதில்லை எனப் படமுதலாளிகள் கூறுகிறார்கள். இதை நான் ஆமோதிக்க முடியாது. பொருத்தமான கதைகளை எழுதித் திறமை வாய்ந்த நடிகர்களைக் கொண்டு படம் பிடித்தால், அதைப் பொதுமக்கள் ஆதரிக்காமலிருக்க மாட்டார்களென்பது என் திடமான நம்பிக்கை."

காலஞ்சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீமான் புஷ்பவனத்தின் மகளார் ஸ்ரீமதி ராஜம். இவர் "வசந்தசேனை" யென்னும் தமிழ்ப் படத்தில் நடிக்கிறார்.

என்று பிரபல நாடக ஆசிரியர் ராவ் பகதூர் சம்பந்த முதலியார் சமீபத்தில் தென்னிந்திய பிலிம் லீக்கின் சார்பில்

சென்னையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர், தமிழ்ப் பேச்சுப் படங்களில் என்னென்ன குறைகளுண்டோ அவ்வளவையுங் கூறி, அவற்றைப் போக்கிக் கொள்ளுவதற் குரிய வழிகளையுங் கூறிமுடித்தார். திரு. சம்பந்த முதலியார் கூறுவதுபோல், தமிழ்ப்பட முதலாளிகள், சமூக சீர்திருத்

ஓரியண்டல்' "நளாயினி"யில்
நளாயினியாக நடிக்கும்
ஸ்ரீமதி சி. என். நீலாவதி.

தக் கதைகளைப் படமெடுப்பதனால் லாபமில்லை என இன்னமுங் கூறிக்கொண்டிருப்பார்களானால், அவர்களுக்கு இச் சினிமாத் தொழிலில் போதிய அனுபவமில்லை யென்றே கூறவேண்டும்.

புராண இதிகாசப் படங்கள், சுமார் ஒரு வருஷத்துக்கு முன்—அல்லது ஆறு மாதங்களுக்கு முன்வரை வேண்டுமானால், அவைகளைத் தயாரித்த பட முதலாளிகளுக்குப் பெருவாரியான லாபத்தைத் தந்திருக்கலாம். ஆனால் தற்கால நிலைமையென்ன? எவ்வளவு பெரும் பொருள் செலவு செய்ததாயிருந்தாலும், எப்பேர்ப்பட்ட சங்கீத வித்வான்களை — கோகிலகான பெண்மணிகளை நடிகர்களாகக் கொண்ட படமாயிருந்தாலும், அது, ஒவ்வோரிடத்திலும் ஒன்றிரண்டு வாரங்களுக்குமேல் ஓடுவதில்லையே! அவ்வொன்றிரண்டு வாரங்களிலும் பார்ப்போர் தொகை மிகக் குறைவாகத்தானேயிருக்கிறது? சில படங்களை இத்தனை வாரங்கள் ஓடின. என வெளிக்கு 'ரிகார்ட்' செய்வதற்காகப் பட முதலாளிகள் தியேட்டர்களைக் குத்தகை எடுத்துக்கொண்டு பொது மக்கள ஆதரவு குறைந்திருந்தாலும் காட்டிக்கொண்டு வருகிறார்களேயொழிய, உண்மையில், சிறந்த படங்களாய் இருந்தாலன்றி, மற்ற படங்கள் பல வாரங்கள் ஓடுவதில்லை. இவ்வித நிலையில், இன்னமும் ஒருவரோடொருவர் போட்டி போட்டு கொண்டாயினும் புராண சம்பந்தமான படங்களையேதான் பிடிப்போம் என்றால், அது பட முதலாளிகளின் அறியாமையைக் காட்டுகிறது என்று கூறாது, வேறென் சொல்வது!

சமூக சம்பந்தமான படங்களையே நம் நாட்டு மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதற்கு உதாரணம் வேண்டுமானால், "பதி பக்தி", "மேனகா" "சதிலீலாவதி" போன்ற சமூகப் படங்களுக்கு இருந்துவரும் மதிப்பையும், கிராக்கியையும் பட முதலாளிகள் கவனித்தால் தெரியும். வெளி ஆடம்பரத்தையோ பெயரையோ கருதி, அத்தகையோரால் எழுதப்பட்ட குப்பை கூளங்களை யெல்லாம் படமாக எடுக்கமுயலாமல், நல்ல எழுத்தாளர்களை,-காலதேச வர்த்தமானத்தையொட்டி ஜீவனோடு எழுதும் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர்களை-அவர்கள் மூலை முடக்குகளிலிருந்தாலும் தேடிப் பிடித்து, அவர்களைக்

கொண்டு சமூக சீர்திருத்தக் கதைகளை எழுதுவித்து படக் தயாரித்தால், வருங் காலத்தில் இன்னமும் இச்சமூக படங்களுக்குப் பேராதரவு கிடைக்கும்; அவைகளை யெடுக்கும் பட முதலாளிகளும் பெருவாரியான லாபத்தைப் பெறுவார்கள். அத்துடன் தமிழ்ச் சினிமா கலை வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகிறார்கள் என்ற நற்பெயரும் கிடைக்கும். அவ்வாறின்றி, பெயருக்குச் சமூக படங்களென்று சொல்லி ஆபாசமான கதைகளைப் படமாக எடுத்தால், சமீபத்தில் பிரமாதமாக விளம்பரஞ் செய்யப்பட்டும், வெள்ளித் திரையில் காட்டப்பட்டவுடன் சாயம் வெளுத்துப்போய் சந்தடியின்றி மறைந்தொழிந்த ஒரு சில சமூக படங்களுக்கு நேர்ந்த கதியே மேற்குறித்தவைகளுக்கும் நேரும் என்பது திண்ணம்.

நம் தமிழ் மக்களில் பெரும்பாலோர் முன்போல், கணக்கற்ற பாடல்களையும், சங்கீத கேசரிகளையும் விரும்பவில்லை; நல்ல நடிகர்களும், கதையும், நவரசமும் நிறைந்த உயர்ந்த படங்களையே பார்க்க விரும்புகின்றனர். இவ்வுண்மையைப் பட முதலாளிகள் அறிய வேண்டுமானால், பூனா பிரபாத் பிலிம் கம்பெனி, கல்கத்தா நியூ தியேட்டர் ஸ்டுடியோ, பம்பாய் ரஞ்சித் ஸ்டுடியோ போன்ற ஸ்டுடியோக்களின் ஹிந்தி, உருது படங்கள் காட்டப்படும் தியேட்டர்களுக்கு நேரே போய்ப் பார்க்கட்டும். அவைகளுக்கு நமது தமிழ் மக்கள் பாஷை தெரியாவிடினும் ஏராளமாகப் போய் எவ்வளவு ஆர்வமாகப் பார்க்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளலாம். எனவே, தமிழ்ப்பட முதலாளிகள் இனியேனும், மேனாட்டுப் படங்களைப் பின்பற்றா விட்டாலும், வடநாட்டுப் படங்களைப் பின்பற்றியாயினும், சிறந்த படங்களைத் தயாரிக்க முன் வருவார்களென்று நம்புகிறேன்.

* * *

ரஜபுத் ரமணி

பூனா பிரபாத் பிலிம் ஸ்டுடியோ கம்பெனியை நினைத்தாலே, விடியற்கால இயற்கை யழகும், பால சூரியனின் உதயமும், கோட்டைமதிலும், அம் மதில்மீது இளமையும் அழகும் ஒருங்கே அமைந்த ரமணியின் தோற்றமும், அவள் தனது பவளவாயில் எக்காளத்தை வைத்து ஊதி இன்னிசையை எழுப்பும் கம்பீரமும் தான் முதன்முதலாக என் கண்முன் காட்சியளிக்கிறது. பிரபாத் படங்களின் ஆரம்

ஸ்ரீமதி. நீலாவதியின் மற்றொரு தோற்றம்.

பத்திலும், முடிவிலும் இதைக் கண்டபின், சிம்மகர்ஜனையும், புலியின் உறுமலும், உலகைச் சுற்றி வருவதாகக் காட்டப்படும் ஏரோப்ளேன் சப்தமும் எனக்குச் சிறிதும் பிடிக்கவேயில்லை.

அந்த பிரபாத் கம்பெனியார் இப்போது "ரஜபுத் ரமணி" என்னுஞ் சிறந்த படத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். கதை மிகவுஞ் சாதாரணமானது. ராஜபுதனத்தில் நடந்த ஒரு சிறு சம்பவத்தைத் தழுவி இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

ராஜபுதனத்தில் கமலாபுரி என்னும் நாட்டை மான்சிங் என்பவன் ஆண்டு வருகிறான். அவன் சுத்த வீரனாதலால், பகைவர்களைத் தாக்கி யடித்து நாட்டைப் பிறர் கைப்பற்றாதவாறு சுயேச்சை நாடாகவே காத்து வருகிறான். ஆனால், அவன் முன்கோபியாகவும் யதேச்சாதிகாரஞ் செலுத்துபவனாகவுமிருந்ததால், பிரஜைகள் அவனை உள்ளூற வெறுக்கின்றனர். அதே ராஜதானியிலுள்ள ஒரு சர்தாரின் மூத்த மகள் தாராமதி இவனைத் திருத்தி நல்வழிப்படுத்தும் நோக்கத்தோடு மான்சிங்கை விவாகஞ்செய்து கொள்கிறாள். மான்சிங் தாராமதியையுஞ் சந்தேகித்து அவளைப் பல வழிகளில் கொடுமைப்படுத்துகிறான். இவைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு தாராமதி சமயம் வாய்க்கும்போது மான்சிங்குக்கு இதமான வார்த்தைகள் மொழிந்து அவன் மனதைத் திருப்ப முயல்கிறாள். ஆனால் தாராமதியின் தங்கையான கேசர், 'இளங்க[illegible]' என்ற பழமொழிப்படி, இளமை[illegible]ல் மான்சிங்கின் செய்கையை அவ[illegible]லேயே அஞ்சாமையோடு கண்டிக்கிறாள். இதனிடையே, மான்சிங்கின் உறவின[illegible]ஒருவனது அக்கிரமச் செயலின் காரணமாக, மான் சிங்குக்கும் அவனது மந்திரி பலதேவனுக்கும் அபிப்பிராயபேதமேற்படுகிறது. உடனே மான்சிங் பலதேவனை சிறையிலடைக்க உத்தரவிடுகிறான். காவலாளிகளிடமிருந்து பலதேவனைத் தப்புவிக்கும்படி செய்த பிரமுகர்களையெல்லாம் காராக் கிருகத்தில் தள்ளுகிறான். கேசர் தன் தந்தை உள்ளிட்ட சிறையிலடைபட்டவர்கள் அனைவருக்குந் தைரியத்தோடு உதவி புரிந்து பலதேவன் மறைந்து வாழ வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து தருகிறாள். கடைசியாக, பலதேவனுக்கு வாளையும், கேடயத்தையும் சம்பாதித்துக் கொடுத்து, மான் சிங்கைத் தொலைத்து விடும்படி உபாயஞ் சொல்லியனுப்புகிறாள். அதுவன்றி அவள் மறைவிலிருந்து மான்சிங்கைப் பயமுறுத்துகிறாள். தாராமதிக்கு இவ் விஷயந் தெரிந்து விடுகிறது. அவள் தன் கணவனை எச்சரிக்கிறாள். அவளது இங்கித மொழிகளாலும் பணிவான செயல்களாலும் அவன் மீது

முதற் பரிசு ரூ. 500 **ரொக்கப் பரிசு ரூ 750.** 2-வது பரிசு ரூ. 200.

முதலில் வரும் சரியான விடைகளுக்கு ரூபா 15, 10. அதிக விடை அனுப்பும் சரியான விடைகளுக்கு முறையே ரூபா 15, 10. பிரவேசக் கட்டணம் அணா 2.

விடுபட்ட எழுத்துப் போட்டி-2

1	அமா —	தேவர்
2	த — ரி	தர்க்கை
3	வ — ம்	சாடு
4	விட —	நஞ்சு
5	— சம்	பாம்பு
6	நா —	மூக்கு

முடிவு தேதி 20-6-36.

கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்து தனிக் காகிதத்தில் விடை எழுதி கூபன் 1-க்கு 2-அணா வீதம் M. O. செய்து விடையுடன் M. O. ரசீதையும் சேர்த்து 20-6-36 தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். இப்போட்டிச் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மானேஜர் தீர்ப்பே முடிவானது. இப்போட்டிக்காக அனுப்பிய பணம் எக்காரணத்தைக் கொண்டும் வாபீஸ் செய்யப்படமாட்டாது. முடிவு பின் தெரிவிக்கப்படும். சரியான விடையை கூடலூர் யூனியன் பாங்கியில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

மானேஜர், ஆனந்த நிலையம், நல்லாத்தூர் P. O.,
(Via) வளவனூர், S. A. Dt.

காதல் கொண்டு வந்த மான்சிங் மீண்டும் அவள் பால் சந்தேகங் கொள்கிறான். அவளைப் பெண்களைக் கொண்டு அப்புறப்

“பார்வதி கலியாணம்” தமிழ்ப்பேச்சு படத்தில் நடிக்கும் ஸ்ரீமதி பிக்ஷாவதி.

படுத்தி அவள் அறையில் தள்ளி விட்டு வரும்படி செய்து உறங்குகிறான். அங்கு தாராமதி தன்னைக் கற்பழிக்கவந்த மான்சிங்கின் உறவினனை பலாட்டிய னொருவனைக் குற்றுடைவாளால் குத்தி வீழ்த்துகிறாள். பின்னர், மான்சிங் படுத்துறங்குமிடஞ் சென்று, வாளையும் கேடயத்தையும் எடுத்து அவன் பக்கத்தில் வைத்துவிட்டு காவல் காக்கிறாள். பலதேவன் மான்சிங் உறங்குமிடம் வந்து அவனைச் சண்டைக்கு அறை கூவி யழைக்கிறான். மான்சிங்கும் துள்ளி யெழுந்து வாளை யேந்திக் கொண்டு பலதேவன் மீது பாய்கிறான். இச் சமயத்தில் தூக்க மயக்கத்திலிருந்து திடுக்கிட் டெழுந்த தாராமதி இருவரிடையேயும் குறுக்கிடுகிறாள். மான்சிங் வீசிய வாள் வீச்சு தாராமதியின் தலையில் விழுகிறது. அவள் மூர்ச்சித்து விழப் போகும் சமயம் மான்சிங் தாங்கிக் கொள்கிறான். மான்சிங்கும், பலதேவனும் சேர்ந்து தாராமதிக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்கிறார்கள். மான்சிங்குக்கு இப்போது தான உண்மை உதயமாகிறது. உடனே பலதேவனை யனுப்பிச் சிறையிலிருக்கும் எல்லோரையும் விடுவிக்கும்படி செய்கிறான். தாராமதியின் தந்தை தங்கை கேசர் முதலியோர் வந்து மான்சிங் தாராமதிக்குச் சிகிச்சை செய்வதைக் கண்டு மகிழ்கின்றனர். முடிவில் மான்சிங் தாராமதியின் காதலில் கட்டுண்டு இன்பமாக வாழ்க்கையை நடத்துகிறான்.

• • •

இச் சாதாரண கதைடைப் பார்ப்பவர் உள்ளங் கவர்ச்சி கொள்ளும் வகையில் நடித்துக் காட்டி அதற்கு ஜீவன் அளித்தவர்கள் ஸ்ரீமதி நளினி தார்கூட் பி. ஏ., ஸ்ரீமதி சாந்தா ஆப்தே, ஸ்ரீ நானுசாகிப் பாடக்தான், ஸ்ரீ மணி பயில்வான், ஸ்ரீ புவா சாஹிப் முதலியோராவர்.

ஸ்ரீமதி நளினி தார்கூட் கதாநாயகி தாராமதி வேடம் பூண்டு, தன் நடிப்புத்திறமை முழுவதையும் வெளிப்படுத்துகிறார். பலருக்கும் இடையூறு விளைத்து வரும் மூர்க்க அரசன் மான்சிங்கை நல்வழிப்படுத்த வேண்டுமானால், தான் அவனுக்கு மனைவியாக வாழ்க்கைப்பட வேண்டியது அவ

சியமென்று உணர்ந்தாலும், தன் பால் வெகு நாட்களாக அன்பு கொண்டுவரும் மந்திரி பலதேவனது காதலை எவ்வாறு துறப்பது என்று எண்ணி வருந்துமிடத்திலும், மான்சிங் இவள் மீது சந்தேகங் கொண்டு பலவிதமாக இம்சித்து உதைத்துத் தள்ளும் போதும் பொறுமையை வகித்து இதமான வார்த்தைகள் கூறுமிடத்திலும், ஸ்ரீமதி நளினி தார்கூட் சமயோசிதமாக மூகபாவத்தை மாற்றி நடிப்பதை யாரும் பாராட்டாமலிருக்க முடியாது. தன்னைக் கற்பழிக்க வந்தவன் பலவானுயிருந்தும் அஞ்சாது இடையில் செருகியிருந்த குற்றுடைவாளை உருவி தாராமதி குத்துமிடத்தில் ஸ்ரீமதி நளினி தார்கூட் ரஜபுத் வம்சத்தில் பிறந்த வீராங்கனையாகவே நமக்குக் காட்சியளிக்கிறார். நடிப்பு உயிர் பெற்று தாண்டவமாடுமிடத்தில் பாட்டு என்ன வேண்டியிருக்கிறது? இருந்தாலும், ஸ்ரீமதி நளினி தார்கூட் துவக்கத்தில் ஒரு பாட்டும், முடிவில் ஒரு பாட்டும் பாடுகிறார். உயர்ந்த சங்கீத ஞானம் பெற்றவர் எனச் சொல்வதற்கில்லாவிடினும், ஸ்ரீமதி நளினி தார்கூட் குற்றங் கூறுவதற்கிடமின்றி இனிமையாகப் பாடுகிறார்.

தமது இனிய சாரீரத்தால் சங்கீதாமிர்தத்தை வாரியிறைத்து யாவரையும் மதிமயங்கச் செய்யும் ஆற்றல் ஸ்ரீமதி சாந்தா ஆப்தேயிடம் அமைந்திருக்கிறது. அவர் தாராமதியின் தங்கையான கேசர் என்பவளாக நடிக்கிறார். அப்பாத்திரத்துக்கு இருக்கவேண்டிய அஞ்சாமை, துடிதுடிப்பு, இளமைக் குறும்பு இப்பெண்மணிக்கு இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. ஆரம்பத்தில் தாராமதியோடும், மற்ற பெண்களோடும் சேர்ந்து கேசர் பாடுமிடத்திலும், மான்சிங் தன் சகோதரியின் காதலில் கட்டுண்டு விட்டான் என்று கண்டதும் ஆடிப்பாடுமிடத்திலும், பலதேவனைப் பகைவர்களிடமிருந்து தப்புவித்து, புகலிடந்தந்து பின்னர், வாள் கேடயங்களை அவனுக்குச் சம்பாதித்துக் கொடுத்து மான் சிங்கைத் தொலைத்து விட்டு வரும்படி தைரிய மூட்டி அனுப்புமிடத்திலும், ஸ்ரீமதி சாந்த ஆப்தேயின் சுறுசுறுப்பான நடிப்பும், சங்கீதத் திறமையும் நன்கு வெளிப்படுகிறது. தன் தந்தை முதலியோரை மான்சிங் சிறைவைத்து விட்டான் என்றறிந்ததும் தனியிடத்திருந்து வருத்தத்தோடு மனமுருகிப் பாடும்போது, அரண்மனை சேவகர்கள், தாதிகள் முதலியோர் தங்களை மறந்து அவளது பாடலில் ஈடுபட்டு அவளைச் சூழ்ந்து கொள்வதாக இப்படத்தில் காட்டுவதைப் போன்றே, பார்ப்பவர்களாகிய நாமும் இலயித்துப் போய் அவளது சோகத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் நிலையை யடைகிறோம். நாலைந்து பாடல்களேயென்றாலும், இவையல்லவோ பாட்டென்ற

ரூபாய் 5-க்கு 200 விடைகள் வீதம் அனுப்பும் நபருக்கு நேரில் சில் விடை நிறைந்த விலாசத்துடன் பிரசுரம் செய்யப்படும். சில் விடை சினிமா நேசன் ஆபிஸில் டிபாசிட் செய்துள்ளோம்.

முதற் பரிசு ரூ 2000. ரொக்கப் பரிசு ரூ. 3300. 2 வது பரிசு ரூ. 1000.

முதலில் வரும் இரண்டு சரியான விடைகளுக்கு ரு. 150, 50. எண்ணிக்கையில் அதிக விடை அனுப்பும் 2-நபர்களுக்கு ரு. 60, 40. முடிவு தேதி 20-6-36.

அதிக எழுத்துப் போட்டி.

1.	அமலரும்வாரிர்	5
3.	குமரிகழவுதலைவி	6
3.	உவாசமைதிமியை	5.
4.	தீபாசூரடவாகணம்	6
5.	அயாயிமாற்ருந்தாய்	

கட்டத்தில் கண்ட வார்த்தைக்கு எதிர் நம்பருள்ள எழுத்துக்களை எடுத்தால் குறிப்புக்கு சரியான வார்த்தை கிடைக்கும். அவ்விதமாக பிரவேசக் கட்டணம் அணு 4. M.O. ரசீதுடன் அல்லது போஸ்டல் ஆர்டரில் அனுப்பலாம். முடிவு தெரிய விரும்புவோர் ¾ அணு ஸ்டாம்புடன் அனுப்புக. இப்போட்டிக்காக அனுப்பும் பணம் எக்காரணத்தைக் கொண்டும் வாபீஸ் செய்யப்படமாட்டாது. மானேஜர் தீர்ப்பே முடிவானது.

குறிப்பு:—1-புஷ்பம். 2-குழந்தை. 3-பார்வதி. 4-அம்பு. 5-அன்னை.

S. R. சாமி, மானேஜர், R. S. பாணி அண் கோ., கீழக்கண்டித் தெரு, பீமநகர், திருச்சி.

பொருளுக்குரிய பாடல்கள்?—அர்த்த புஷ்டியின்றி, இனிமையின்றித் தமிழ்ப் படங்கள் சிலவற்றில் பாடப்படுவதுபோல் ஆயிரம் பாடல்கள்தான் பாடினால் என்ன பயன்?

கமலாபுரி யரசன் மான்சிங்காக ஸ்ரீ நானாசாகிப் பாடத்தான் நடிக்கிறார். அவரது கம்பீர தோற்றமும், உடற்கட்டும் மான்சிங் பாத்திரத்தை நடிப்பதற்கு அவரே பொருத்தமுடையவர் என்பதைக் காட்டுகின்றன. ஸ்ரீ நானாசாகிப் வீரத்தையும், அதே சமயத்தில் மூர்க்கத்தையுங் காட்டித் திறமையாக நடிக்கிறார். ஆயினும் சில இடங்களில் நடிக்கவேண்டிய அளவுக்குமேல் அவர் மிகையாக நடிக்கிறார். அவர் சிரிப்பது இயற்கையாக இல்லை. மிகவும் வலிந்து சிரிபபை வருவிப்பதுபோல் தோன்றுகிறது.

மணி பயில்வான், பூவாசாகிப் முதலிய மற்ற நடிகர்களும் தாங்கள் எடுத்துக் கொண்ட பாத்திரங்களுக் கேற்றவாறு கூடுமானவரை நன்றாக நடிக்கின்றனர். மான்சிங்கின் சேனா வீரர்களாக வந்த இருவரது ஹாஸ்ய நடிப்பு பார்ப்பவரை சிரிக்க வைக்கின்றன.

இப்படத்தை டைரக்ட் செய்த ஸ்ரீ. சாந்தாராமின் கூரிய மூளையின் அற்புத சக்தி ஒவ்வொரு அம்சத்திலும் வெளியாகிறது. போர்க்களத்தில் வீரர் சண்டையிடுவதாகக் கதை யாரம்பிக்கிறது. கடைசியாக, மான்சிங்குக்கும், பலதேவனுக்கும் வாட்போர் நடப்பதாகக் காட்டி, அதிலிருந்து விளைந்த காதலில் மான்சிங்கும் தாராமதியும் கட்டுண்டு மகிழ்வதாகக் காதல் காட்சியோடு கதை முடிகிறது. இது படம் பார்ப்பவர் மனங்களைக் கவர்வதற்குக் கையாளப்படும் சிறந்த முறைகளில் ஒன்றாகும்.

பிரபாத் ஸ்டுடியோவின் மற்றொரு விசேஷ மென்னவென்றால், எந்தெந்த கதைக்கு எந்த விதமான ஸீன்கள் வேண்டுமோ அவைகளையே ஜோடித்துக் காட்டுவது தவிர, ஒரு படத்தில் காட்டப்பட்ட ஸீன்களை மற்றொரு படத்தில் பொருத்தமின்றி உபயோகிப்பதில்லை. 'ரஜபுத் ரமணி' வீரந் ததும்புங் கதை யாதலால், அதற்கேற்றவாறு ஒவ்வொரு இடத்திலும் வீரச் சின்னங்களையே வைத்து ஜோடித்திருப்பது இப்படத்தைக் கூர்ந்து கவனித்தவர்கள் அறிந்து மகிழ்ந்திருப்பார்கள்.

“விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள், வைக்குந் தன்நாளை யெடுத்து” என்ற குறளில் சித்திரிக்கப்படும் வீரமே சுத்த வீர லட்சணமாதலால் சுத்த வீரனாகிய மான்சிங் தேகத்தில் — முதுகிலன்று — எதிரிகளின் வாள் முதலிய ஆயுதங்களால் ஏற்பட்ட காயங்களின் வடுக்களும், தழும்புகளும் இருக்கின்றன என்பதைக் காட்டுவதற்கு, ஸ்ரீ நானாசாகிப்பின் முகத்திலும், தோளிலும் 'மேக்-அப்'பினால் தழும்பு இருப்பதுபோல வடுக்கள் செய்து காட்டியிருப்பதைக் கலாரசிகர்கள் அறிந்து மகிழாமலிருக்க முடியாது. மனிதர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதமான அற்ப குணங்கள் இருப்பது இயல்பு என்ற தத்துவத்துக்கு உதாரணமாக, சேனா வீரனொருவன், எச்சமயத்திலும் (இரவிலுங்கூட) கண்ணிலிருந்து பீளையை எடுத்தெடுத்து போடுவதும், மற்றொருவீரன் சதா சோம்பலையும், தூக்கத்தையும் வருவிக்கும் கஞ்சாவை முகர்வதும் பொதுவாக இவ்விரு வீரர்களும் பயங்கொள்ளிகளாக இருப்பதும் ஆகியவற்றை டைரக்டர் தமது நுட்பஅறிவால் சித்திரித்துக் காட்டுகிறார். இதிலிருந்து அப் பட முதலாளிகள், படத்துக்குரிய ஒவ்வொரு அம்சத்திலும் எவ்வளவு கூர்மையாகக் கவனஞ் செலுத்துகிறார்களென்பதைத் தமிழ்ப்பட முதலாளிகள் கவனிக்கவேண்டும்.

இப்படத்தின் ஆரம்பத்தில் தாராமதி கேசர் ஆகியவர்களோடு பல பெண்மணிகள் சேர்ந்து பாடி நடன மாடுவதாகக் காட்டப்படும் காட்சி அற்புதக் காட்சியாக இருந்தது. இரவுக் காட்சிகள்கூட தெளிவாக எடுக்கப்பட்டிருப்பதிலிருந்து 'காமிராமென்'னின் போடோ எடுக்குந் திறமை நன்கு விளங்கும். ஒலிப்பதிவும் சிறந்த முறையில் எடுக்கப்பட்டிருக்கிறது

எதிர்பாருங்கள்

மகத்தான ஆரம்ப
தினத்தை ஆவலுடன்!

வித்வான்-சி. எஸ். செல்வரத்னம்
&
மிஸ். சி. என். நீலாவதி நடித்த

கற்பின் மேன்மையை
சித்திரித்துக் காட்டும்

நளாயினி

டைரக்ஷன் :—
வசந்த ராவ், ஏ. பெயின்டர்

கோலாப்பூர் தயாரிப்பு

விவரங்களுக்கு,

ஓரியண்டல் சௌண்ட் பிக்சர்ஸ்,
லிமிடெட், திருப்பூர்.

Tel. Address:—"ORIENTAL'"

உங்களூர்
வெள்ளித் திரையில்

எதிர்பாருங்கள்!